27 ... 1983

# உரும்பராய்
# சைவத்தமிழ் வித்தியாலய[ம்]
# URUMPIRAI SAIVA TAMIL VIDYALAYA[M]

1915

# வைரவிழா மலர்
# DIAMOND JUBILEE SOUVENIR

1975

1977



University of Jaffna
373.05
URU
205491(BP; Main)

For Super & Multi Colour
Offset Litho Printing

Visit

# Gowriyi Printers

207, Wolfendhal Street,
Colombo-13.

Office Phone: 33976

373.05
URU

உரும்பராய்

# சைவத் தமிழ் வித்தியாலயம்

# வைர விழா மலர்

UNIVERSITY OF JAFFNA LIBRARY
205491
205491

URUMPIRAI

# SAIVA TAMIL VIDYALAYAM

## Diamond Jubilee Souvenir

## 1977

UNIVERSITY OF JAFFNA LIBRARY PERIODICAL DIVISION
University of Jaffna
205491
Library

யாழ்/உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலய
வைரவிழாச் சிறப்புற
எங்கள் உளங் கனிந்த நல் வாழ்த்துக்கள்

- சிக்கனத்திற்கு சிறந்தது
- பிரகாசத்திற்கு பிரபலியமானது
- தூய்மைக்கு துரிதமானது

# மில்க்வைற் உற்பத்திகள்

★

நாடு நலம்பெற, நம் பணிகள் மேலோங்க
எமது உற்பத்திப் பொருட்களையே வாங்குங்கள்

அதிபர்

## மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

தபாற்பெட்டி இல. 77
தொலைபேசி: 7233

யாழ்ப்பாணம்
தந்தி: "மில்க்வைற்"

கிளை:
79, மெசஞ்சர்வீதி, கொழும்பு 12
தொலைபேசி: 36063

# காணிக்கை

போதக மாமுக ஞானசொ ரூபநின்
பொன்னடி போற்றிடுவோம்
புத்தொளி ஆதவ ராயிர ரொத்தவுன்
பூங்கழல் ஏத்திடுவோம்
மோதக மேந்திய கையினை, குன்றெறி
முருகனின் முன்னவனே
மொய்குழ லாதிப ராபரை பெற்றிடு
மூத்தவி நாயகனே
சாதக மாயரு வீந்திடு சங்கரன்
தந்திடு மைங்கரனே
சாற்றிடு நற்றவர் போற்று முரும்பராய்
சார்ந்திடு கற்பகமே
பாதக மோட்டிடு நற்கலை யுமோர்
பள்ளியி னில்மலரும்
பாங்குள விம்மலர் நின்கழல் சேர்த்தனம்
பாலித் தருளுகவே.

UNIVERSITY OF JAFFNA ★ LIBRARY ★

UNIVERSITY OF JAFFNA ★ LIBRARY ★ PERIODICAL DIVISION

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

# உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயக் கீதம்

இராகம் : ஹம்ஸத்வனி தாளம் : ஆதி

### பல்லவி

திருமலி ஈழத் திருப்புகழ் வாழி !
சிவநெறி வாழி தமிழ் — வாழி !!! (திரு)

### அநுபல்லவி

உரும்பரா்ய் சைவத் தமிழ்வித்யா சாலே
உமாபதி போல நனி வாழி (திரு)

### சரணம்

இருளினே யோட்டி ஒளியினே யூட்டும்
இரவிபோல் எங்கலா சாலே — மன
மருளினே யோட்டி அறவொளி தீட்டி
மங்கல மாகவே வாழியவே ! (திரு)

கற்பகப் பிள்ளேயார் காத்திடக் கந்தன்
கருணே கொழிக்கும் கலேக் — கோயில்
அற்புத மாக நவீன அறிவியல்
அனேத்தும் ஓங்கி வாழியவே ! (திரு)

கண்ணியங் கட்டுப்பாடு கடமைக ளாதி
கருத்தினிற் கொண்டு புது — முறையில்
நண்ணிருங் கல்வியில் நாமுந் தழைத்திட
நலந்தரு வாய்கரு ணுகர ஓம் !!! (திரு)

UNIVERSITY OF JAFFNA LIBRARY PERIODICAL DIVISION

# ரைகர் ரிறேடிங் கொம்பனி

புன்னாலைக்கட்டுவன்

விவசாயிகளுக்கு அவசியம் தேவையான

**கிருமிநாசினிகள்**

- பசளை வகைகள்
- சாய்ப்புச் சாமான்கள்
- பலசரக்குச் சாமான்கள்

**தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.**

சேவையே தெய்வம்

## Tiger Trading Company

Punnalaikadduvan South,

CHUNNAKAM

(உரிமையாளர். வி. சண்முகேஸ்வரன்)

# உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயம்

## வைரவிழா மலர்க் குழு

திரு. வி. அரியநாயகம்
திரு. வே. சின்னத்துரை
திரு. அ. பஞ்சாட்சரம்
பண்டிதர் இ. நவரத்தினக் குருக்கள்
திரு. க. பாலசுப்பிரமணியம்
திரு. அ. க. த. கிருஷ்ணராசா
திரு. க. கணபதிப்பிள்ளை
திரு. து. சிவசுப்பிரமணியம்
திரு. வ. நடராசா
திருமதி ச. பரங்கிரிநாதன்
திருமதி தெ. குழந்தைவேலு

UNIVERSITY OF JAFFNA LIBRARY

## வைரவிழா மலர்க்குழு உபசபை

திரு. வி. அரியநாயகம் (தலைவர்)
திரு. அ. பஞ்சாட்சரம்
திரு. அ. க. த. கிருஷ்ணராசா
பண்டிதர் இ. நவரத்தினக்குருக்கள்
திருமதி ச. பரங்கிரிநாதன்

உரும்பராய் — ஊரெழு பட்டணசபையின்

# பத்து அம்சங்கள்

**வரியிறுப்பாளரே !**

1. உங்கள் வீடுகளை, வளவுகளை, குடிக்கும் தண்ணீரை, மலசல கூடங்களை சுகாதார முறைப்படி வைத்திருக்கவும். (வீடுகள், மலசலகூடங்கள், மதில்கள் முதலியன கட்ட முன்னரே, பட்டின சபையின் அங்கீகாரத்தைப் பெறவும்.)

2. சோலை வரி, வியாபார வரி, மின் விநியோகக் கட்டணங்கள் முதலியவற்றைச் செலுத்தவேண்டிய காலத்தில் கட்டினுல் சபை யின் அபிவிருத்தி வேலைகளுக்குதவியாகும்.

3. பட்டணசபை எல்லைக்குள் உற்பத்தியாகும் பொருட்களைச் சந்தைப்படுத்தவோ, கொள்வனவு செய்யவோ சபையின் மத்திய சந்தை உதவி புரியும். (சந்தை அபிவிருத்தி விரைவில் பூர்த்தி யாகும்.)

4. மிகவிரைவில் சபையின் நானுபுறங்களிலுமிருக்கும் விவசாயி களுக்கு மின்சார மூலம் நீர்ப்பாசன வசதிகள் அளிக்கப்படும்.

5. மத்திய நூல்நிலைய மொன்று அமைக்கப்படும்.

6. ஒழுங்கைகளையும் வீதிகளையும் மேலும் சீர்திருத்திப் போக்கு வரத்து வசதிகளை இலகுவாக்கும்.
(அரசுடன் தொடர்பு கொண்டு நிதி உதவி கோருகிறது.)

7. சனசமூக நிலையங்களுடனும், கிராம முன்னேற்றச் சங்கங்க ளுடனும் தொடர்பு கொண்டு சமுதாய வேலைகளில் உதவி புரியும்.

8. சுடுகாடு, இடுகாடு, மற்றும் சபைக்குரிய ஆதனங்களைப் பாது காக்கும்.

9. சபை எல்லைக்குள் இயங்கும் இணக்க சபைக்கு வேண்டிய உதவி புரியும்.

10. **ஏனைய** உள்ளூராட்சி மன்றங்களோடும், வித்தியாலயங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பொதுநலச் சபைக ளுடனும் நெருங்கிய உறவை நாடித் தேடும்.

ஆகவே சமுதாயத்தின் வளர்ச்சிக்கு உங்கள் மனமகிழ்ச்சி யான ஒத்தாசையைத் தரவும்.

உரும்பராய்—ஊரெழு,
பட்டணசபை.

**சி. செல்வத்துரை**
தலைவர்

உ

# உள்ளே . . .


வித்தியாலயக் கீதம்

காணிக்கை

வாழ்த்துரைகள்
— கௌரவ கல்வி அமைச்சர் கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்முத்
— திரு. சி. கதிரவேலுப்பிள்ளை
— Dr. பிரேமதாசா உடகம
— பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை
— திரு. இ. பாஸ்கரலிங்கம்
— ,, க. சிவநாதன்
— ,, வ. சு. ஈசுரபாதம்
— ,, சி. செல்வத்துரை
— ,, கா. மாணிக்கவாசகர்
— ,, அ. இளையதம்பி

அன்ருய்! நீ நிதமும் வாழி! — 'சொக்கன்'

வாழிய பல்லாண்டு — திரு. க. இ. சரவணமுத்து

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலய அதிபரின் அறிக்கை

இசைத்தமிழ் வளர்ச்சியில் நாட்டார் பாடல்களின் பங்கு — கலாநிதி க. கைலாசபதி

அத்துவிதமும் உடனுதலும் — பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

உவந்தெடுக்கும் வைரவிழா ஓங்கிடுக — புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை

சமயத்துறையில் இந்துக்கல்லூரி அதிகாரசபை — திரு. ந. சபாரத்தினம்

ஈழத்திலும் தென்னகத்திலும் தமிழ்க்கல்வி பரப்பிய பெரியார்கள் (ஆறுமுகநாவலர் காலத்திலிருந்து விபுலானந்த அடிகள் காலம் வரை) — பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன்

கல்வித்துறையில் சமய மறுமலர்ச்சி — திரு கி. லக்ஷ்மண ஐயர்

சமயக் கல்வி — கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள்

தாய்மொழிக் கல்வி — திரு. ஆர். கந்தையா

கவின் கலைகள் — பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர்

ஈழத்தின் பத்திரிகைத் துறையும் இலக்கிய வளர்ச்சியும் — திருமதி சித்திரலேகா மௌனகுரு.

ஈழத்தில் தமிழ் இலக்கிய விமரிசனம் (அதன் முதன்மைக்கும் முனைப்புக்குமான காரணங்கள் பற்றிய வரலாறு வழி நின்ற ஒரு குறிப்பு) — திரு. கார்த்திகேசு சிவத்தம்பி

பரிதியோடு நிறைமதி பாருள்ளளவும் வாழ்க — பண்டிதர் ஆ. சின்னத்தம்பி

பொருவில்லா வைரவிழா — திரு. கா. இ. ஜெகசோதி

யா. உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலய பெற்ருேர் ஆசிரிய சங்க வரலாறு

உலகு புகழ் இக் கழகம் உயர்ந்து வாழி — பண்டிதர் நீ. சி. முருகேசு

சைவமும் தமிழும்போல் தழைத்து வாழ்க! — பண்டிதர் செ. சிவப்பிரகாசம்

மாணவர் உவப்புடன் கற்று வாழ்க! — பண்டிதமணி வித்துவான் ந. சுப்பையாபிள்ளை

கற்பகம் போல வாழி! வாழி!! — அருட்கவி சீ. விநாசித்தம்பி

நல் வயிரவிழா வாழி! — பண்டிதர் இ. நவரத்தினக்குருக்கள்

தகவுடையாய்! வைரவிழாவுறும் மேன்மை கண்டாய்! — கவிஞர் திரு. செ. கதிரேசர்பிள்ளை

நாவலரும் நல்லூர்க் கோயில் நிர்வாகமும் — பேராசிரியர் ச. தனஞ்சயராசசிங்கம்

வெளியீட்டுரை


UNIVERSITY OF JAFFNA LIBRARY PERIODICAL DIVISION

அழகிய தங்கப் பவுண் நகைகளுக்குச்
சிறந்த இடம்

★

**செல்லையா அன் சன்ஸ்**

**222, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

---

*With best Compliments*
*from*

**Zenith Watch & Radio Co.**

**56, Kasturiar Road,**
**JAFFNA.**

---

With best

Compliments

from

**Three Coins Hotel**

36, Kasturiar Road,

JAFFNA.

கௌரவ கல்வி அமைச்சர்

கலாநிதி அல்ஹாஜ் பதீயுத்தீன் மஹ்முத் அவர்கள்

# வழங்கிய ஆசியுரை

யாழ்ப்பாணம் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் வைரவிழா கொண்டாடுவதையும் அதனையொட்டி மலர் ஒன்றை வெளியிடுவதையும் அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.



நகரங்களுக்குச் சேய்மையிலுள்ள பள்ளிக் கூடங்களையும் நகரங்களிலுள்ள சிறந்த பள்ளிக் கூடங்களின் தரத்துக்கு விரைவாக உயர்த்துவதே எனது முக்கிய நோக்கங்களிலொன்ருகும். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதன் பொருட்டு நான் கல்வி அமைச்சர் பதவி ஏற்ற காலந் தொடங்கி மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி அளித்து வருவதையும், சேய்மையிலுள்ள பல பள்ளிக்கூடங்கள் துரிதமாக முன்னேறி வருவதையும் யாவரும் அறிவர்.

இந்த வகையில் யாழ். உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலை அண்மைக் காலத்தில் பல துறைகளிலும் விரைந்து விருத்தியடைந்து வருவதும், தொழில் முன்னிலைப் பாடங்கள் போன்ற துறைகளிலே இத் தரத்திலுள்ள பள்ளிக்கூடங்களுள் முன்னணியிலுள்ள ஒன்ருக விளங்குவதும் மகிழ்ச்சிக்குரியன. இப் பள்ளிக்கூட விருத்தியின் பொருட்டு இதுவரை அரும்பணியாற்றிய அதிபர்களையும் ஆசிரியர்களையும் ஆதரவு நல்கிய பெற்ருர்களையும் பள்ளிக்கூடம் வைர விழாவினைக் கொண்டாடும் இத்தருணத்திலே பாராட்டுவதில் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

வைர விழா இனிது நிறைவேறவேண்டுமெனவும் இப் பள்ளிக்கூடம் பல துறைகளிலும் மேன்மேலும் விருத்தியடைந்து மேலும் சிறந்து விளங்கவேண்டுமெனவும் உளமார விழைகின்றேன்.

**அல்ஹாஜ் பதீயுத்தீன் முஹ்முத்**

**VELE TRADERS**
**FOR**
**PAINTS**

**Vele Traders**

8/2. STANLEY ROAD,
JAFFNA

*Leading*
*Distributors for*
**Poultry Feeds**

**Chick & Kine**
Stanley Road,
**JAFFNA**

Security Coverage
for

- Bangalows,
- Shops
- Industrial Establishment etc.

Day & Night Service

*Lanka*
*Security Project*
91/16, Hindu Ladies Lane
**JAFFNA**

அன்பளிப்பு
"அன்பன்"

Four your Medical
**Requirements & Dispensing**
*Please Contact :*
**Puvaneswary**
**Medical Stores**
**No. 69, Power House Road.**
**JAFFNA**

கோப்பாய்த் தொகுதியின் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்

திரு. சி. கதிரவேலுப்பிள்ளை அவர்கள்

# பெருமகிழ்வுடன் வாழ்த்துகின்றூர்

பழைமையும் பெருமையும் வாய்ந்த உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயம் தனது வைரவிழாவினைக் கொண்டாடுவதுடன், சிறப்பம்சமாக வைரவிழா மலர் ஒன்றினை வெளியிடுவதனையும் அறிந்து கோப்பாய்த் தொகுதியின் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் என்ற வகையில் பெருமகிழ்வு கொள்ளுகிறேன்.



1915ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பெற்று இந்துக் கல்லூரி அதிகார சபையின் பரிபாலனத்தின்கீழ் இயங்கிவந்த இப் பாடசாலையின் சரித்திரத்தை நோக்குமிடத்து வரவர வளர்ச்சியடைந்து வந்திருப்பதை உணர முடிகின்றது. அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்றது; வித்தியாலயத்தின் வளர்ச்சி குன்றவில்லை. கற்பக விநாயகர் ஆலய வீதியில், புனிதமானதொரு சூழலில் இப்பொழுது இயங்கிவரும் இவ் வித்தியாலயம் சாதி சமய பேதம் எதுவுமின்றிச் சகல பிள்ளைகளும் கல்வி பயின்று முன்னேறக் கூடிய வகையில், நடுவூர்ப் பழுத்த நன்மரம் போல நாட்டுக்குப் பெரிதும் பயன் செய்து வருகின்றது.

கோப்பாய்த் தொகுதியில் உள்ள கனிட்ட வித்தியாலயங்களில் முக்கிய இடத்தைப் பெறக்கூடிய வகையில் இயங்கிவரும் இவ் வித்தியாலயத்தில் கல்வி பயின்றவர்களில் பலர், ஈழத்தின் பல பகுதிகளிலும் உயர் பதவிகளை வகிப்பதும், தொழிற்றுறைகளில் நல்ல முன்னேற்றங் கண்டிருப்பதும் கண்கூடு.

இவ் வித்தியாலயத்தின் உன்னத வளர்ச்சிக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் கடின உழைப்பும், பெற்றோர்களினதும், அபிமானிகளினதும் பரிபூரண ஒத்துழைப்புமே காரணங்களாகும்.

ஆசிரியர்களும், மாணவர்களும், பெற்றோர்களும், மற்றையோரும் சைவத் தமிழ் வித்தியாலயத்தின் வைரவிழாவினைக் கண்டு மனப்பூரிப் படையும் இவ்வேளையில், யானும் பெரிதும் அகமகிழ்வு கொள்வதுடன், இவ் வித்தியாலயம் மேன்மேலும் வளர்ச்சியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

சி. கதிரவேலுப்பிள்ளை

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
PERIODICAL DIVISION

*WITH BEST COMPLIMENTS*
*FROM*

**R. N. R. Stores**

GENERAL MERCHANTS &
COMMISSION AGENT
**33, Manipay Road,**
**JAFFNA.**
*Telephone:* **342**

Space Donated
By

**The Tora Limited**
32, Kasturiar Road,
JAFFNA.

*With best Compliments*
*From*

A. K. Kanagasabapathy
& Sons
*General Merchants & Commission Agnets*
No. 106, Hospital Road,
JAFFNA.
**Phone:** 457

*Best wishes for the*
*Diamond Jubilee*
*Celebrations*

**New Victors**
23, CLOCK TOWER RD.
JAFFNA.

# *Message from*

## DR. PREMADASA UDAGAMA

*Secretary, Ministry of Education.*

*It is a great pleasure for me to send this Message to the Souvenir published as part of the Diamond Jubilee celebrations of the Urumpirai Saiva Tamil Vidyalayam.*



*For 60 years Urumpirai has served the cause of Saivaism and Tamil education in many ways. Its educational contribution has been an inspiration to the present students of the school. Distinguished old boys hold high office locally and in foreign countries.*

*I am also happy to learn that the parents and the teachers are working together for the improvement of the school. The Department of Education, no doubt has contributed its share to the progressive growth of this school.*

*This school has been quite successful in the implementation of the new Educational Programme and by its great education service, the local community and the nation has benefitted to a great extent.*

*I wish the school greater success in all its future activities.*

**Premadasa Udagama**
*Secretary*

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
PERIODICAL DIVISION

வைர விழா சிறப்படைய
வாழ்த்துகின்றோம்.

★

- அழகான
- துரிதமான
- சிக்கனமான

அச்சு வேலைகளுக்கு
யாழ்நகரிலே சிறந்த ஸ்தாபனம்

**திருமகள் அழுத்தகம்**

**மெயின்வீதி : : சுன்னுகம்**

தொலைபேசி : 315

கொழும்பு அலுவலகம் :
39, சதாம் வீதி, கொழும்பு-1
தொலைபேசி : 25959

உ

# பிரார்த்தனை உரை

## பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்



"சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்கள் நீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமௌலிப் பிரானுர் தந்த
வார்பூத்த அறிவிச்சை தொழிலென் றேதும்
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்."

---

I. "மனத்துக்கண் மாசிலனுதல்" – வள்ளுவரின் மந்திரோபதேசம்.

II "தீதும் நன்றும் பிறர்தர வாரா" — புறநானூற்றுப் பொருண்மொழி.

இவை இரு வைரங்கள்.

இவற்றைச் சிந்தனை என்ற பதக்கத்தில் பதித்து, வாழ்க்கை என்னுஞ் சங்கிலியிற் கோத்து, அதனை இருதயஸ்தானத்தில் அணிசெய்து,

நாடோறும் ஐந்து நிமிஷ நேரமாவது சயனத்துக்கு முன் அவ்விரண்டனையும் தியானித்துச் சிந்திப்பதென்று திடசங்கற்பஞ் செய்வோமாயின்,

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையை அறுபது வருடங்களுக்கு முன் ஆரம்பித்து நடத்திவந்தவர்களுக்கு நன்றிக்கடனும்,

வருஞ்சந்ததி மண்ணில் நல்லவண்ணம் வாழ நல்வழியும்,

செய்து வைத்தவர்கள் ஆவோம்.

நமது திடசங்கற்பம், நம்மளவில் அடங்காது, எங்கும் பரவிப் பயன்செய்வதாக எனவும் திருவருளைப் பிரார்த்திப்போமாக.

"சீர்பூத்த" என்ற விநாயகர் காப்பு, ஆத்மீகமானதும், மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்கு வழிசெய்வதுமாகிய தலைசிறந்த பாடத்திட்டத்தைக் கொண்டது; நாவலர் பெருமான் சிரமேற்கொண்டது.

வருங்காலத்திற் சிந்திக்கவேண்டிய திட்டம் இத்திட்டம்.

குருமார், ஆசிரியர்கள், பெற்றோர் யாவரும் ஒருங்குகூடிச் சிந்தித்து ஆவன செய்தற்கு,

எல்லாம் வல்ல கற்பகப்பிள்ளையாரின் திருவருள் கைகூடுவதாக என்றும் வேண்டுதல் செய்வோமாக.

**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை**

UNIVERSITY OF JAFFNA LIBRARY PERIODICAL DIVISION

# ஸ்ரீ மீனாட்சி வர்த்தகக் கல்லூரி

(பதிவு இல. 5618)

38, 40, சீனிவாசகம் வீதி, கொட்டடி

யாழ்ப்பாணம்

1968ஆம் ஆண்டு தொடக்கம் 1976ஆம் ஆண்டு வரை லண்டன் கணக்கியல் பரீட்சையில் 100க்கு 80% மாணவ மாணவிகள் ஸ்ரீ மீனாட்சி வர்த்தகக் கல்லூரியில் சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்க

— ஒன்றாகும் —

## COURSES OFFERED

1. **Institute of Administrative Accounting (I. A. A.) or (I. B. K.)**
   **(Parts I, II & III)**
2. **International Association of Book - keepers.**
   **(Fountation, Intermediate & Final)**
3. **Pitman Examination's Institute and**
4. **G. C. E. (O/L) வர்த்தகப் பாடங்கள் அனைத்தும்**

கணக்கியல் பாடம் அதிபரின் மேற்பார்வையில் நடைபெறும்.

அத்துடன்

மாணவ - மாணவிகளுக்குத்

தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.

- அரசாங்க ஊழியர்களுக்கும்,
- கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும்

பிரத்தியேகமான மாலைநேர வகுப்புக்களும்,

சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை நேர வகுப்புக்களும்

நடைபெறும்.

**புதிய வகுப்புக்கள் 3-1-1977இல்**
**ஆரம்பமாகின்றன.**

விபரங்களுக்கு:

செ. சத்தியமூர்த்தி, B. Sc. (Maths.), F. C. I. (Lond.)

D. Com. (Bus. Org. & Banking),
T. T. C., A. M. E. C. (Auto. Eng.)
Diploma in Civil Engineering: Justice of the Peace.

# வைரவிழா சிறந்த பெருவிழாவாக அமையட்டும்


## திரு. இ. பாஸ்கரலிங்கம் அவர்கள்

### மேலதிகச் செயலாளர், கல்வி அமைச்சு, கொழும்பு


"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே'.

சமூகத்தில் கல்விமான்களுக்கு எப்பொழுதுமே தனிச் சிறப்பு உண்டு. 'கற்றோர்க்கு மூன்று விழி' என்ற சிறப்பைப் பெறுகின்றார்கள் கல்வியாளர்கள்.

ஒருவரை நல்ல கல்விமானாக்கி, அவரைப் பண்பட்ட மனிதராக நடமாடச் செய்வது கல்வி. இத்துணைச் சிறப்பு வாய்ந்த கல்வியை யூட்டும் கல்வி நிலையங்கள் தேவாலயங்கள் போல்வன. தாம் கல்வியைப் பெறும் வித்தியாலயத்தின் மீது உண்மைப் பற்று வைத்து எவர் கற்கின்றாரோ, அவர் என்றோ ஒருநாள் நாட்டின் தலை சிறந்த பணியாளராய்த் திகழ்வார் என்பதில் ஐயமில்லை. சமூகத்தை அலங்கரிக்கும் பண்பாளர்களை நாட்டுக்கு உற்பத்தி செய்து தரும் வித்தியாலயங்கள் நாட்டின் பிரகாசமான கண்களாய்த் திகழ்வன.



நமது நாட்டில் உள்ள பல பேரறிஞர்கள், உயர்தர உத்தியோகத்தர்கள் உட்படப் பலரை உருவாக்கிய பெருமை உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயத்துக்கு உண்டு, என்று நாம் அறியும்போது பெரும் பூரிப்பு உண்டாகிறது. ஆரம்பத்திலேயே இந்துக் கல்லூரி அதிகார சபையாரின் முகாமையும் இவ்வித்தியால்ய வளர்ச்சிக்கு அடிப்படையாயிருந்ததும் ஒரு தனிச் சிறப்பாகும். தொடர்ந்தும் அரசாங்கத்தின் கவனத்தில் உயர்தர வித்தியாலயமாய்த் திகழ்கின்றது.

நகரம், கிராமம் என்ற வேறுபாடோ, ஏழைகள், பணக்காரர் என்ற பேதமோ இன்றிச் சகல குழந்தைகளுக்கும் கல்வியில் சம சந்தர்ப்பம் வழங்குவதே கல்வி அமைச்சின் பெருநோக்கமாகும். இந்த நல்ல நோக்குக்கு அமைவாக உரும்பராய்க் கிராமத்தின் நடுநாயகமாக விளங்கும் உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயம், புதிய கல்வித் திட்டத்துக்கு அமைவாக இயங்கி வருவது எமக்கு மிக மகிழ்ச்சியைத் தருவதொன்றாகும். வித்தியாலய அறிக்கையில் இருந்து தொழில் முன்னிலைப் பாடங்களுடன் கவின்கலைகளான சங்கீதம், சித்திரம், நாட்டியம் முதலியவற்றில் நல்ல தேர்ச்சி பெறுவதுடன் விஞ்ஞானக் கல்வியையும் குழந்தைகள் இப்பாடசாலையிலேயே கற்கக்கூடிய அளவுக்குப் பரிபூரண வசதி ஏற்படுத்தியிருப்பது மேலும் மகிழ்ச்சியைத் தருவதாகும்.

சான்றோர்களின் நல்லெண்ண அடிப்படையில் ஸ்தாபிக்கப்பெற்ற இவ்வித்தியாலயம், ஸ்தாபிக்கப்பெற்று அறுபது ஆண்டுகள் பூர்த்தியாகி, எழுநூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களைக்கொண்டு இப்பொழுதும் முன்னேற்றப்பாதையில் ஏறுநடை போட்டுச் செல்வதுகண்டு, களிபேருவகை கொள்ளும் அதேவேளையில், குறித்த வித்தியாலயத்தின் வைரவிழா பெருவிழாவாக அமையட்டும் என்று வாழ்த்துகின்றேன்.

**இ. பாஸ்கரலிங்கம்**

## சித்திரை மாதத்தில் தென்னிந்திய யாத்திரை

ஆரம்பம் : சித்திரை நடுப்பகுதியில் 14 நாட்கள்

போகுமிடங்கள் : திருச்சி, பூனா, திருச்செந்தூர், கன்னியா குமரி, திருவனந்தபுரம், திருப்பதி, பாஞ்சாலங்குறிச்சி, ஆறுபடைவீடுகள், இன்னும் புண்ணிய தலங்கள்.

முக்கிய குறிப்பு : பிரத்தியேக பிரயாணப் பத்திரங்கள் பெற்றுக் கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு :

**சத்தியா றவெல்ஸ்**

224A, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி: 7677

உயர்ந்த

புகைப்படங்களுக்குச்

சிறந்த இடம்

**"ஸபாஸ்"**

தங்கள் திருப்தியே

எங்கள் நோக்கம்

**"ஸபாஸ்"**

படப்பிடிப்பாளர்

ஸ்ரான்லி வீதி

யாழ்ப்பாணம்.

நவீன பாடசாலைப்

புத்தகங்கள்

உபகரணங்கள்

(புதினப்) பேப்பர்

முதலியவற்றைப் பெற்றுக்கொள்ளச்

சிறந்த இடம்

செறெண்டிப்ட்ரேட்

சென்டர்

560, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்

# பாராட்டுரை

## திரு. க. சிவநாதன் அவர்கள்

**மேலதிக கல்விப் பணிப்பாளர், கல்வித் திணைக்களம், வடமாநிலம்**

யாழ்ப்பாணத்துக் கல்வி வளர்ச்சி வரலாற்றில் இந்துக்கள் தம் சைவ சமயச் சூழலில் எங்கும் சைவத் தமிழ் வித்தியாலயங்களையும், இந்து ஆங்கிலக் கல்லூரிகளையும் அமைத்துப் பரிபாலிக்கத் தொடங்கிய காலம் குறிப்பிடத்தக்க ஓர் எழுச்சிக் காலக்கட்டமாகும்.



அக் காலத்திலே உரும்பராயில் உருவான இந்து ஆங்கிலக் கல்லூரியின் ஆரம்பக் கல்விப் பிரிவாகத் தோன்றிய இச் சைவத் தமிழ் வித்தியாலயம், பின்னர் இடம் மாறினாலும் இலக்கு மாறாமல் தனக்கெனவும் ஒரு பாரம்பரியத்தைக் கட்டிக் காத்துக்கொண்டும், தரம் உயர்ந்து வளர்ச்சி பெற்றுக்கொண்டும் வந்திருப்பதை அறிந்து, இப்போது நடைபெறும் இதன் வைரவிழாவுடன் அமையாது, பல நூற்றாண்டு விழாக்களையும் கண்டு, இந் நாட்டின்கண்ணே வளர்ந்து வரும் உத்தம மாணவ பரம்பரையினரைப் பெற்ற ஒரு நற்றாயாக மேலும் மிளிர வேண்டுமென்று மனமார வாழ்த்தி இவ் வைர விழாவினைச் சிறப்பாக நடத்தும் அதிபர், துணைஅதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பழைய மாணவர்களை மகிழ்ச்சியுடன் பாராட்டுகிறேன்.

**க. சிவநாதன்**

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
PERIODICAL DIVISION

## யானை மார்க்
## நல்லெண்ணெய்

இலங்கை எள்ளில் சுத்தமாக
சுகாதார முறைப்படி
தயாரிக்கப்பட்டது.

தொகையாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

18, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 225

பலசரக்குச் சாமான்கள்
குழந்தை உணவுகள்
அழகு சாதனப் பொருட்கள்
பாடசாலை உபகரணங்கள்
புதினப் பத்திரிகைகள்
வாழ்த்திதழ்கள்
சாய்ப்புச் சாமான்கள்

நிதான விலையிற்
பெற்றுக்கொள்ளலாம்.

## ஐங்கரன்
பலசரக்கு மாளிகை
280 (102), கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

விழாச் சிறப்புற
வாழ்த்துகின்றோம்!

## தம்பியப்பா அன் சன்ஸ்
339 (149), கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சுவை தரும்
பிஸ்கெற் வகைகள்

※

நல்ல ரகப்
பாண் வகைகள்

உடன் தயாரிப்பாளர்கள்

## முருகன் பேக்கறி
196, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி

திரு. வ. க. ஈசுரபாதம் அவர்கள்

# விடுக்கும் ஆசி

உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தினது வைர விழா மலர் மலர்வதையிட்டு நான் பெரும் மகிழ்வு கொள்ளுகின்றேன்.



1915ஆம் ஆண்டு ஆரம்பமான இப்பாடசாலை உரும்பராய் இந்துக் கல்லூரி வளவில் இருந்து இப்பொழுதுள்ள இடத்துக்கு மாறும்பொழுது 300 பிள்ளைகளையும் 11 ஆசிரியர்களையும் கொண்டதாயிருந்தது. கற்பகதருவென மதிக்கப்படும் இந்த ஸ்தாபனம் பல்லாற்றானும் வளர்ச்சியடைந்து இன்று 750க்கு மேற்பட்ட மாணவர்களையும் 30 ஆசிரியர்களையும் பொருந்தியிருப்பது இந்நிலையத்தின் வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதாயுள்ளது.

இக்கால எல்லையில் இந்த ஸ்தாபனம் எத்தனையோ கல்விமான்களையும், உயர் அதிகாரிகளையும் உருவாக்கி உரும்பராய்ப் பதிக்கு உயர்வளித்துள்ளது. உயர்நீதிமன்ற நீதியரசர்களான அமரர்கள் திரு. செ. நாகலிங்கம், பொன். ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரினதும், சட்டமேதை திரு. எஸ். நடேசன், கியு. சி. போன்றவர்களதும் நல்லாதரவு இக்கல்வி நிலையத்துக்குக் கிடைத்தமை பாராட்டுதற்குரியது.

இவ்வித்தியாலயத்தினை உருவாக்கி ஆதரித்து ஆவன செய்த கொடைவள்ளல்களையும் பொதுமக்களையும் இன்று நினைவு கூருதல் சாலவும் பொருத்தமாகும். அவர்களின் அரும்பணியின்றேல் இந்நிறுவனம் இன்று இந்நிலைக்கு வந்திருக்கமுடியாது.

அரசாங்கம் பொறுப்பேற்ற பின்பும் இதன் வளர்ச்சியில் அதிகம் முன்னேற்றம் உண்டு. புதிய கல்வித் திட்டத்தினை, கல்வி அமைச்சினது நோக்கங்களுக்கு இணங்க நன்கு அமுல் செய்து வருவது போற்றுதற்குரியது. தேசிய கல்விப் பொதுத் தராதரப் பத்திர வகுப்புவரை புதிய கல்வித் திட்டம் இங்கு நன்கு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

நல்லதொரு அதிபரையும், ஒத்துழைக்கும் உதவி அதிபரையும், ஊக்கத்தோடு தொண்டாற்றும் உதவியாசிரியர்களையும், பின்னின்று உழைக்கும் பெற்றார் ஆசிரியர் சங்கத்தினையும் இவ்வித்தியாலயம் கொண்டுள்ளமை பெரும் பாக்கியமாகும்.

வாழ்க உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயம்!
வளர்க பன்மடங்கு!

வ. க. ஈசுரபாதம்

*Visit*

For All Your Modern Printing Requirements

**Kalaivani Printing Works**

LEADING PRINTING IN THE NORTH

**No. 10, MAIN STREET, JAFFNA.**

Phone: 221, 3196

*With the best Compliments from*

**Peninsula Glass Works & Industries**

25, STANLEY ROAD, JAFFNA.


*Telephone:* 7657

உரும்பராய் – ஊரெழு பட்டணசபைத் தலைவர்

திரு. சி. செல்வத்துரை அவர்கள்

# வாழ்த்துகின்றார்

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயம், உரும்பராய் ஆங்கில பாடசாலையோடு இணைந்திருந்த காலத்தில் மூன்றும் வகுப்புவரை படித்தவர்கள் ஆங்கில பாடசாலைக்கு விடப்பட்டனர். 1927ஆம் ஆண்டு நான்காம் வகுப்புத் தொடங்கியது. அவ் வகுப்பில் மூன்று ஆண்களும், சில பெண்களும் கற்று வந்தனர். இவர்களில் யானும் ஒருவன். அக்காலத்தில் உபாத்தியாயர்களாக விளங்கியவர்கள் மாணவர்களின் கல்விக்காக மிக மிகப் பாடுபட்டனர் என்பது யாவரும் அறிந்த உண்மை.



சைவத்தமிழ் வித்தியாலயம் பிரிந்து இவ்விதமாக வேறு ஓர் இடத்தில் அமைந்து கல்வித்துறையில் பெரும் முன்னேற்றம் கண்டிருப்பது வியப்புக்குரியது. பெற்றோர், ஆசிரியர், மாணவர்கள், நண்பர்கள், அபிமானிகள் கொடுத்த பேராதரவை நான் அறிவேன்; அதை மெச்சுகின்றேன்.

மேலும் இவ் வித்தியாலயத்துக்கூடாக மாணவர்கள் பல துறைகளிலும், பல இடங்களிலும் பட்டம் பதவி வகித்ததையிட்டுச் சந்தோஷப்படுவதோடு, தொடர்ந்தும் இவ்வித்தியாலயம் சமய சமூக நலனை நாட்டுதற்குரியவர்களைத் தருமென வாஞ்சித்துக் கொண்டாடும் இவ் வைர விழாவினை இறைவன் ஆசீர்வதிப்பாராக.

"இருதயத்தில் ஞானம் உள்ளவன் விவேகி யெனப்படுவான்;
உதடுகளின் மதுரம் கல்வியைப் பெருகப் பண்ணும்".

**சி. செல்வத்துரை**



UNIVERSITY OF JAFFNA
LIBRARY
PERIODICAL DIVISION

உ

கருணாகரன் துணை

உரும்பராய்

சைவத் தமிழ் வித்தியாலய வைரவிழா

சிறப்புற நிகழ வாழ்த்துகிறோம்.

# வேலுப்பிள்ளை ஸ்ரோர்ஸ்

**வியாங்கொடை**

தொலைபேசி : 245

கிளைகள் :

## கணேசன் ஸ்ரோர்ஸ்

திவிலப்பிட்டியா

தொலைபேசி: 895

## தங்கவேல் மாளிகை

உரும்பராய்


கோப்பாய் உதவி அரசாங்க அதிபர்

திரு. கா. மாணிக்கவாசகர் அவர்களது

(இலங்கை நிர்வாக சேவை)

# ஆசிச்செய்தி

உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயம் வைரவிழா எடுப்பதையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகிறேன். ஏதோ ஒன்று போற்றப்படுகிறது என்பது தெரிகிறது. அயராது உழைக்கும் மன உறுதிப் பாடே அதுவாயிருக்கலாம். ஒரு நிறுவனத்தை உருவாக்கி அதனைப் பாதுகாத்து வளர்ப்பதென்றால் மிகமிகக் கடுமையான பணி. அறுபது ஆண்டுகள் காலமாக எதிர்ப்பட்ட இன்னல்களை எல்லாம் தூக்கி எறிந்துவிட்டு இன்னும் வீறுநடை போடுகிற தென்றால் வைரவிழா எடுப்பது சாலப் பொருத்த மாகும். அது மட்டுமல்ல, ''எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'' என்னும் கூற்றின் உணர்வுக்கு இவ் விழா எடுத்துக்காட்டாகிறது.



நூலறிவும், வாலறிவும் நிரம்பிய உரும்பராய் மக்கள், தமது எதிர்கால வழித்தோன்றல்கள் வசதியாக நூலறிவைப் பெறவேண்டும் என்னும் வாஞ்சையாலே இவ் வித்தியாலயத்தைப் பேணி, கண்போன்று காத்து வருகிறார்கள். இவ் வித்தியாலயம் சைவக் கோவிலுக்குப் பக்கத்தில் அமர்ந்ததே ஒரு தனிச் சிறப்பு. தமிழ், சைவம், உண்மை எல்லாம் ஒரு பொருளையே குறிக்கும். இவை அன்றும் இன்றும் என்றும் உள்ள பொருட்கள். ''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'' என்றார் ஒரு ஞானி. ''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்'' என்றார் ஒரு பெரியார். இவற்றால் இவ் வித்தியாலயத்தின் சிறப்பினை உணரலாம்.

இத்தகைய சிறப்பியல்புகளை உள்ளடக்கிய சைவத்தமிழ் வித்தியாலயத்தின் வளம் குன்றாது பற்பல கல்விமான்களை இன்னும் ஈன்று கன்னியாகவே பொலிவுடன் திகழவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

கா. மாணிக்கவாசகர்

UNIVERSITY OF JAFFNA LIBRARY

உத்தரவாதமும்,
உறுதியும்,
நவீன வேலைப்பாடும்
உள்ள
அழகிற் சிறந்த
தங்க நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்

செ. கந்தசாமி அன் சன்ஸ்
206, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்.

வைரவிழாச் சிறப்புற
வாழ்த்துகின்றோம்

N. வைத்திலிங்கம்
அன்
கொம்பனி லிமிடெட்.
138, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்

மருந்துச் சரக்கு வகைகளும்,
கோயில்களுக்குத் தேவையான
அபிஷேகத் திரவியங்களும்,
வாசனைத் திரவியங்களும்
சகாயமாகப்
பெற்றுக்கொள்ளலாம்

க. செ. கணபதிப்பிள்ளை
அன் சன்ஸ்
51, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்

வைரவிழாச் சிறப்புடன்
நடைபெறத் திருவருளை
வேண்டுகின்றோம்.


V. M. பரமநாதன்
அன் சன்ஸ்
47, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்

373·05
URU
BP

# உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயம் வைர விழா

## திரு. அ. இளையதம்பி அவர்கள்
*(ஷெ வித்தியாலயப் பெற்றோர் ஆசிரியர் சங்க முன்னைநாள் தலைவர்)*

இவ் வித்தியாசாலை உரும்பராய் இந்துக்கல்லூரி வளவிலிருந்து இட நெருக்கடி காரணமாக இவ்விடத்துக்குக் கொண்டுவரப்பட்டபோது இடவசதி, கட்டடவசதி, தளபாட வசதி முதலான பல நெருக்கடிகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. அப்போது இருந்த தலைமை ஆசிரியர் திரு. ஆ. கந்தையா அவர்கள் மிகவும் சாதுரியமுள்ளவர்கள். அவரும், உள்ளூர் ஆசிரியர் சிலரும், பெற்றோரும் மனப் பூரணமான ஆதரவுடனும், ஒத்துழைப்புடனும் இவ் வித்தியாலய வளர்ச்சிக்கு வித்திட்டார்கள்.



முகாமையாளர்களாக இருந்த யாழ். இந்துக்கல்லூரி அதிகாரசபையார், இவ் வித்தியாசாலைப் பெற்றோர் ஆசிரிய சங்கத்திற்கு ஓரளவு மதிப்பும், சுயாட்சியும் கொடுத்திருந் தார்கள். கல்வி கற்பிப்பதில் சனி, ஞாயிறு விடுமுறை யெனப் பாராது, ஆசிரியர்கள் பிரயாசைப்பட்டு வேலை செய்து புலமைப் பரீட்சைகளிலும், ஏனைய பரீட்சைகளி லும், மாணவர்கள் சிறப்பாகச் சித்திபெற உழைத்தனர். பரீட்சை முடிபுகள், பிள்ளைகளை அதிகரிக்கச் செய்ய, பெற்றோரும் ஆசிரியரும் ஒன்று சேர்ந்து ஊர் மக்களினதும் அபிமானிகளினதும் பொருள் கொண்டு கட்டிடங்களை நிறுவி தளபாடம், முதலாகப் பல வசதிகளையும் தேடி அளித் தனர். நாடக மேடை ஒன்றை நிறுவி கலை நிகழ்ச்சிகளை வைத்துப் பெற்றோரை வர வழைத்து அவர்களின் ஆதரவையும், அபிமானத்தையும் பெற்றனர். பிள்ளைகளின் வழி பாட்டிற்காக ஒரு சிறு ஆலயத்தை வித்தியாலயக் கிழக்கு மண்டபத்தில் அமைத்தனர். தண்ணீர்த்தாங்கி ஒன்று அமைப்பித்து வகுப்பறைகளுக்கு முன்னாலேயே தண்ணீர் குடிக்கக் கூடியதாகக் குழாய்களை அமைத்து வசதி செய்தனர். தொழிற்கல்வி ஊட்டும் நோக்கத்துடன் பன்னவேலை பயிற்றுவித்தனர். இதனால் வெங்காயக்கூடுகள் செய்து கணிசமான அளவு பொருளைப் பிள்ளைகள் சம்பாதிப்பதற்கு வசதி ஏற்படுத்தினர்.

பாடசாலை, 5ஆம் வகுப்பிலிருந்து 10ஆம் வகுப்புவரை உயர்ந்தது. ஒரு காலத்தில் 1000 மாணவர்கள் வரை இடாப்பில் இருந்தனர்.

இப்போது விஞ்ஞானகூடமிருக்கும் கட்டடத்தைத் தன் செலவில், உரும்பராய் வாசியும் தற்பொழுது மலாயாவிலிருப்பவருமான திரு. தம்பு குமாரசாமி என்னும் பெரியார் கட்டி உபகரித்தார். மேலும், விஞ்ஞான கூடத்தை விஸ்தரிப்பதற்கும் உதவி அளிப்பதாக வாக்களித்துள்ளார். அவருக்கு உரும்பராய் மக்கள் என்றென்றும் கடமைப் பட்டவர்கள். இன்னும் எத்தனையோ பெரியார்கள் பள்ளிக்கூடத்தின் வளர்ச்சிக்குப் பொருள் உதவி உட்படப் பல்வேறு உதவிகளையும் புரிந்தனர்.

205491

ARCHIVES

பெற்றார் ஆசிரிய சங்கத்தின் அங்கத்தவனுகவும், பல ஆண்டுகள் அச்சங்கத்தின் தலைவனுகவும் பணியாற்றும் பெரும் பேறு பெற்ற யான், அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்ற காலகட்டத்தில் வித்தியாபகுதியின் சுற்றுநிருபத்திற்கமைய பெற்றார் ஆசிரிய சங்கங்களுக்கு வித்தியாலய அதிபரே தலைவராக இருக்கவேண்டுமென்ற நிபந்தனைக்கேற்ப விலக நேர்ந்தது. யான் பெற்றோர் அல்லாத காரணத்தினல் நிருவாகசபை அங்கத்தவராய் இருக்கும் வாய்ப்பினையும் இழந்துவிட்டேன். ஆயினும் பாடசாலைமீது கொண்ட கரிசனை சிறிதும் குறையவில்லை.

அரசாங்கம் பொறுப்பேற்றபின் பழைய கட்டடங்கள் நீக்கப்பட்டு, பலமான புதிய கட்டடங்கள் நிறுவப்பெற்றன. விஞ்ஞானகூட உபகரணங்கள் வித்தியாபகுதியால் வழங்கப்பட்டன. தொழில் முன்னிலைப் பாடங்களைப் படிப்பிப்பதற்கு ஆசிரியர்கள் நியமனமாகினர். பிள்ளைகள் விளையாடுவதற்கு மைதானம் இல்லாததும், விவசாயம் செய்வதற்குப் போதிய நில வசதி இல்லாததும் வித்தியாலய வளர்ச்சிக்குத் தடையாக உள்ளன. இத்தடைகளும் விரைவில் நீங்குமென்று நம்புகிறேன்.

இப் பள்ளிக்கூடத்தை உரும்பராய்க்கு ஒரு பிரத்தியேக பெண்கள் கல்லூரியாக்க எடுத்த பிரயத்தனங்கள் வெற்றி அளிக்கவில்லை.

அதிர்ஷ்டவசமாக இப் பள்ளிக்கூடத்தைத் தங்கள் சொந்தப் பொருள்போலக் கரிசனை வைத்துக் கவனித்து வரும் ஆசிரியர் பரம்பரை இன்றும் தொடர்ந்து வருகிறது. பெற்றார் ஆசிரியர் ஒத்துழைப்பு நெடுகவே இருந்து வந்திருக்கிறது.

தொழில் முன்னிலைப் பாடங்களைப் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தி வருவது மக்களுக்குப் பெரும் நன்மையை அளிக்கப்போகும் திட்டமாகும். பொருளாதாரத்தை நல்க, பிள்ளைகளிடத்தில் ஒழுக்கம், பண்பாடு மலர ஒளவைப்பிராட்டியின் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி முதலான சிறு புத்தகங்களை மாணவர்கள் படிக்கக்கூடிய ஒழுங்கினை அரசுசெய்வது பெரிதும் விரும்பத்தக்கது.

'நாட்டுப் பள்ளிக்கூடங்களில் விஞ்ஞானக் கல்வி குறைவு' என்று கருதி வசதி படைத்த சிலர் தம் பிள்ளைகளைப் பெரிய நகரத்திலுள்ள பெரிய கல்லூரிகளுக்கு அனுப்பி வைப்பதற்கு விழைந்த காலம் மலையேறிவிட்டதென்றே சொல்லலாம். உள்ளூர்ப் பாடசாலைகளில் சகல வசதிகளோடும் கூடிய விஞ்ஞானப் படிப்பிற்கு இப்பொழுது ஒழுங்கு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஒழுங்கு ஏழைப் பிள்ளைகளுக்குப் பெருநன்மை பயக்குமென்பதிற் சந்தேகமேயில்லை.

பாடசாலைகள் அல்லாத இடங்களில் நடைபெறும் பிரத்தியேக வகுப்புக்களுக்கு மாணவர்கள் கூட்டம் கூட்டமாகச் செல்வதை இப்பொழுது பலரும் அவதானிக்கலாம். இம்முறை எழுந்ததின் காரணத்தைக் கல்விமான்களாய் உள்ளவர்கள் நன்கு பரிசீலனை செய்து வருங்காலச் சந்ததியினர் நல்வாழ்வு பெற வழி காண்பார்களாக.

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயம் மேலும் மேலும் ஓங்கி வளர எனது ஆசி உரித்தாகுக!

**அ. இளையதம்பி**

உ

முருகன் துணை

கலைமகள் ஆசிரியர், வாகீச கலாநிதி

ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் அவர்களது

உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலய

# வைரவிழா வாழ்த்து

உடலுக் குழைப்பார் பலமக்கள்;
உளத்துக் குழைப்பார் பலமனிதர்;
அடலுக் குரிய ஆன்மாவுக்
காக உழைப்பார் மிகச்சிலரே;
இடருக் குரிய மரணத்தை
இந்தப் பூவிற் பிறப்பதனை
விடலுக் கேது வழியென்று
விரும்பி யோர்ந்து செயல்செய்க!

உணவால் உடலை வளர்த்திடலாம்;
உள்ள மதனைக் கல்வியினால்;
அணவா ருயிரை இறைவன்றன்
அருளால் வளர்க்க லாகும்;இதை
உணர்வார் வாழ்வில் அவனருளை
உடைமை யாகப் பெறுவதற்குத்
தணவா முயற்சி செய்துநலம்
சார்வார் முத்தி தனைச்சார்வார்.

உயிர்க்கு நன்மை யளிக்கின்ற
உயர்ந்த கல்வி சிவக்கல்வி;
பயிர்க்குத் தண்ணீர் விடுதல்போல்
பாலைக் குழவிக் கருத்துதல்போல்
செயிர்க்குள் ளாகும் உயிர்காக்கச்
சிறப்பார் இறைவன் அருள்பற்றிப்
பயிற்சி செய்யும் கல்வியினைப்
பரப்பல் இன்றி யமையாதால்.

UNIVERSITY OF JAFFNA LIBRARY
205491
UNIVERSITY OF JAFFNA LIBRARY PERIODICAL DIVISION

உய்வைத் தருமிச் செய்தியறிந்(து)
உரும்ப ராயில் அன்பர்கள்
சைவத் தமிழ்வித் யாலயத்தைத்
தாபித் தினிது வளர்க்கின்றார்;
மெய்வைத் திடுநற் சைவத்தின்
வியனார் சிறப்பை அறிவித்து
நைவைத் தருநற் பாக்களெலாம்
நன்கு பயிற்றி நலம்செய்தார்.

செயிர்தீர் கல்வி சிவக்கல்வி;
சிவனே நந்தம் பிறவிநோய்
மயலைத் தீர்க்கும் பெருங்கடவுள்;
வணங்கி யவனைப் பணிவதுவே
உயரும் செயலென் றுணர்த்துமிந்த
வித்தியா லயம்மேல் ஓங்கியின்று
வயிர விழாவை நிகழ்த்துவதை
மகிழ்ந்து கேட்டு மனங்குளிர்ந்தேன்.

மன்னும் சிவச்செந் நெறிவளர்த்து
மாணக் கர்க்கு நன்னெறியில்
துன்னு மாற்றைக் கற்பித்துச்
சுடரும் தமிழின் நயம்காட்டிப்
பன்னும் புகழ்மேல் ஏறிவரப்
பலதொண் டுகளை ஆற்றியிது
பின்னும் பற்பல ஆண்டுநனி
பிறங்கி வாழி வாழியவே.

கி. வா. ஜகந்நாதன்

உ

# அன்னாய்! நீ நிதமும் வாழி!

'சொக்கன்'

## காப்பு

ஓங்காரத் துட்பொருளே! உள்ளொளிரும் மெய்ப்பொருளே!
ஆங்காரத் தாரறியா அற்புதமே! — ரீங்கார
வண்டணைதார் கற்பகத்து வாரணமே! தாளிணைகள்
கொண்டணையும் மார்க்கம் குறி.

சைவமொடு செந்தமிழுஞ் சால்புற் றோங்கச்
சகத்தினுள கலைகளெலாம் நிறைவுற் றோங்கத்
தெய்வவருட் டிருமுறைசாத் திரங்கள் ஓங்கத்
திருமலியும் உரும்பராய் ஊரின் கண்ணே
எவ்வெவரும் போற்றஅறு பதிற்றாண் டின்முன்
எழில்பெறவே தோற்றுவித்த கலையின் நங்காய்!
சைவநெறித் தமிழ்வித்யா லயமே! நின்சீர்
சாற்றியுனை ஏத்திடுவோம் தழைத்தே வாழி! 1

செல்வமிலா மிகஏழைச் சிறுமா ணாக்கர்
செல்வமெனக் கல்வியினைத் தேடி நாளும்
நல்லவராய் வல்லவராய் வாழ்தற் கான
நற்கல்வி ஊட்டுகின்ற பணியை ஆற்றிப்
பல்வளமும் சுரக்கின்ற உரும்ப ராயாம்
பதிக்குவிழி எனஅமைந்த பண்புச் செல்வி!
கல்வியினிற் சிறந்துபலர் உயரச் செய்தாய்
கவினுறவே பலஊழி வாழி! வாழி! 2

எழில்நிறைநல் வாழ்வமைக்க ஏற்ற கல்வி
ஏட்டினிலே கற்பதொடு நிற்கா தென்றும்
தொழில்பலவும் பயிலுதலும் உழவின் நுட்பம்
துகளறவே அறிவதுமே குறிக்கோ ளாகப்
பொழில்திகழும் உரும்பராய் ஊர்மா ணாக்கர்
பொற்புறவே புதுக்கல்வித் திட்டம் ஏற்றுப்
பழியறவே கடமைஉயிர் என்ன ஆசார்
பயிற்றுகின்ற கலைக்குயிரே! பாரில் வாழி! 3

புலமையுறு பரிசில்பெறப் போட்டி இட்டுப்
புகழ்நாட்டிப் புன்மைகளை நாளும் வீட்டி
நலமமையக் கலைகற்று நாளும் ஓங்கி
நாட்டிற்கே அச்சாணி என்னத் தக்க
பலபதவி பட்டங்கள் அணியாய்ப் பெற்ற
பகர்வைத்ய கலாநிதிகள் பொறியில் வல்லார்
நிலைபெறுநல் லாசிரியர் பலரை ஆக்கி
நிலவுபுகழ் அன்னாய்!நீ நிதமும் வாழி! 4

கடல்கடந்து மலேசியாஆ பிரிக்கா மற்றும்
கவினார்ந்த அமெரிக்கா இங்கி லாந்து
திடமுடனே அங்கெல்லாம் சென்று மேலாம்
திருப்பெற்றுத் திகழ்பதவி திறனோ டேற்றுத்
தடைகளினைத் தாண்டிஉயர்ந் தொளிருந் தீபத்
தன்மையினார் மாணாக்கர் உன்றன் மக்கள்
அடலரிகள் அனையார்கள் வணங்கி ஏத்த
அமர்ந்தவளே! தேவிநீ அகத்தே வாழி! 5


வைரவிழாக் காண்கின்ற மாட்சி உற்றாய்
வானோங்கு புகழிற்கும் உரிமை பெற்றாய்
தைரியமாய் நிலைநின்று தலைமை உற்றாய்
தாய்உன்னைச் சேய்நாங்கள் தலைமேற் கொண்டோம்
கைரவம்போல் விழியுடைவெண் கமலச் செல்வி
காதலுற்றுன் மடியினிலே அமர்ந்தி ருக்கப்
பைரவிபோற் கோலோச்சிப் பண்பு காக்கும்
பரிவுடையாய் பார்போற்ற வாழி! வாழி! 6

## வாழிய பல்லாண்டு

**திரு. க. இ. சரவணமுத்து அவர்கள், ஆசிரியர்**


திருமருவு முரும்பைநகர் செய்ததவப் பேறாய்ச்
சிவநெறியுந் தமிழ்மொழியுஞ் செழித்திடவே யூட்டிப்
பெருமையுடன் வாழவழி காட்டுமுயர் கல்விப்
பேரமுத நிலையமெனப் பிறங்கும்பா ராட்டக்
குருபரனின் திருவருளால் வைரவிழாக் காணுங்
கோதறுசை வத்தமிழ்வித் யாலயமாம் மாதா
தருமநெறி தவறாது நவீனமுறைக் கல்விச்
சாதனைகள் பலநிகழ்த்தி வாழியபல் லாண்டே.

உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயம்
அதிபர்



திரு. வி. அரியநாயகம் அவர்கள்

உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயம்
துணை அதிபர்



திரு. அ. பஞ்சாட்சரம் அவர்கள்

## உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயம்

# அதிபரின் அறிக்கை

பல்வகைச் சிறப்புக்களும் பொருந்திய உரும்பராய்ப் பதியின் வளர்ச்சிக் கென்றே இவ்வூர் மண்ணிற் பிறந்த நல்லறிஞர்களின் பெருமுயற்சியால் 1915ஆம் ஆண்டு மார்கழி மாசம் 3ஆம் திகதி ஸ்தாபிக்கப்பெற்ற உரும் பராய் சைவத் தமிழ் வித்தியாலயம் இன்று இந்த உன்னத நிலைக்கு வளர்ந் திருப்பது கண்டு யாரும் மகிழாமல் இருக்க முடியாது.

பாடசாலையின் முகாமையாளர்களாயிருந்த இந்துக்கல்லூரி அதிகார சபையாரின் சீரிய மேற்பார்வையும், தலைமையாசிரியர்களாயும், உதவியாசிரியர்களாயும் கடமையாற்றியவர்களின் கரிசனையான உழைப்பும், பெற்றோர்களின் பரிபூரணமான ஒத்துழைப்புமே பாடசாலை வளர்ச்சிக்குக் காரணமாயிருந்திருக்கவேண்டும். அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்ற ஒரு காலகட்டத்தில் இவ் வித்தியாலயத்தையும் சுவீகரித்தபோதும், வளர்ச்சியில் மேலும் முன்னேற்றம் கண்டுள்ளமை பெரிதும் மகிழ்ச்சிக் குரியதாகும். ஒரு சில பிள்ளைகளுடன் ஆரம்பமான இப் பாடசாலை, இன்று எழுநூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களையும், முப்பது ஆசிரியர்களையும் கொண்டதாய் இலங்கையிலுள்ள கனிஷ்ட வித்தியாலயங்களுக்குள் முன்வரிசையில் வைத்து மதிக்கப்படுகிறதென்றால், இங்கே கல்வி சீராக வளர்கிறது என்பதுதான் கருத்து. இணைபிரியாதனவாய சைவமும், தமிழும் வளருகின்ற நிலையமாதலினாலன்றோ இக் கல்விக் கூடத்துக்குச் சைவத் தமிழ் வித்தியாலயம் என்று நாமகரணஞ் சூட்டினர் போலும்!

இக் கல்லூரியின் பழைய சரித்திரங்களைச் சற்றே திரும்பிப் பார்ப்போமானால், பல உண்மைகளை யாம் காணக்கூடியதாயிருக்கும். இவ் வித்தியாலயம் ஆரம்பித்து அறுபது ஆண்டுகள் பூர்த்தியாகி வைரவிழாவும் கொண்டாடுகின்றதென்றால் இதன் பொருட்டு உழைத்த சான்றோர்கள் என்றும் நன்றிக்குரியவர்களே. இவ் வித்தியாலயத்தின் வளர்ச்சியே தம் மூச்சு எனக் கருதிய பெரியார் திரு. ஆ. கந்தையா அவர்கள் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் தலைமையாசிரியராயிருந்து ஆசிரியர், மாணவர், பெற்றோர் அனைவரதும் பேரபிமானத்துக்குப் பாத்திரராய் உழைத்திருக்கின்றார். அவரின் தூய்மையான உழைப்பின் பயனே இன்றைய வித்தியாலயத்தின் வளர்ச்சி என்று விஷயமறிந்த பலர் கூறக்கேட்டு யானும் ஓர் ஆசிரியன் என்ற வகையில் பெருமித மடைகின்றேன். சுமார் மூன்று தலைமுறையானவர்களுக்குக் கல்வியூட்டிய பெருமையைப் பெறுகிறார் முன்னைநாள் தலைமையாசிரியர் திரு. சி. பொன்னுத்துரை அவர்கள்.

இவர். உதவியாசிரியராய், சிரேட்ட முதலுதவியாசிரியராய், தலைமையாசிரியராய் சுமார் முப்பது ஆண்டுகளுக்கு மேல் இங்கு பணியாற்றிப் பெருஞ் சிறப்புப் பெற்றார். முதல் நியமனத்தில் இருந்து ஓய்வு பெறும்வரை தமது சேவையை உரும்பராயில் உள்ள இவ் வித்தியாலயத்துக்கே அர்ப்பணித்தவர் சிரேட்ட ஆசிரியை திருமதி தங்கமணி இராமுப்பிள்ளை அவர்கள். ஆசிரியர் தொழிற்சங்க உலகில் அந்தக் காலத்திலேயே மிகப் பிரபலம் பெற்றவர் திரு. சு. குமாரசேகரம் அவர்கள். 'நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே' என்று பேசும் நக்கீர பரம்பரையைச் சேர்ந்தவர். அவர்கள் இவ் வித்தியாலயத்தின் அதிபராயிருந்து பணியாற்றிய காலம் பொற்காலம் என்று பலரும் சொல்வதை அறிந்திருக்கின்றேன். இன்னும் திருவாளர்கள் கு. சபாரத்தினம், க. கதிரவேல் முதலானவர்களும் அதிபர்களாய்ச் சேவையாற்றிய காலம் சிலவருடங்களேயாயினும் நிறைவான வேலைகளைச் செய்திருப்பது தெரிய வருகிறது. எனக்கு முன்னர் திருவாளர்கள் ச. கதிரவேலு, க. நடராசா என்போர் முறையே இவ் வித்தியாலயத்தின் அதிபர்களாகவும் திரு. செ, சின்னத்துரை துணை அதிபராகவும் அவ்வப்போது சில காலங்கள் கடமை புரிந்தார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன். மேலே குறிப்பிட்ட ஆசிரியர்கள் பணியாற்றிய காலங்களில் வித்தியாலயத்தில் நடந்தேறிய விழாக்கள், வட்டார வேலைகள், கல்விச் சேவைகள் பற்றிய மேம்பாடுகளைப் பாடசாலை அறிக்கைகளில் இருந்து அறிய முடிகிறது.

**1972க்குப் பின் :**

பாடசாலைகளை அரசாங்கம் கையேற்ற பின்னர், கல்வித்துறையில் படிப்படியாகப் பல முன்னேற்றங்களைச் செய்துவந்தது. 1972இல் நடைமுறைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட புதிய கல்வித்திட்டம், பிரதான இடத்தை வகிக்கின்றது. புதிய கல்வித் திட்டத்துக்கு அமைவாகப் பாடசாலைகள் புனரமைப்புச் செய்யப்பட்டபோது, இவ் வித்தியாலயம் ஏழை மாணவர்களது குடும்ப வசதிகளுக்கேற்ப நீண்டகாலம் பத்தாம் வகுப்புவரை இயங்கிவந்த காரணத்தினால், ஒன்றுதொடங்கி ஒன்பதாம் வகுப்புவரை இயங்கும் (1—9) கனிட்ட வித்தியாலயமாக வித்தியாபகுதியால் அங்கீகரிக்கப்பெற்றது. இவ் வித்தியாலயத்துக்குப் பிரபலஸ்தர்களான நீதியரசர் திரு. செ. நாகலிங்கம், திரு. செ. சுந்தரலிங்கம், செனட்டர் திரு. நடேசன், கியூ. ஸி., நீதியரசர் ஸ்ரீ பொன். ஸ்ரீஸ்கந்தராசா முதலானவர்களது ஆதரவு பூரணமாகக் கிடைத்தமையும் பாராட்டக்கூடியதே.

இப்பாடசாலை ஒன்று தொடங்கி ஒன்பதாம் வகுப்புவரை இயங்கும் வித்தியாலயமாக அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டமை, இச் சூழலில் உள்ள குழந்தைகளுக்குப் பெரும் வரப்பிரசாதமாகும்.

புதிய கல்வித் திட்டத்தின் பயனாக மாணவர்களுக்கு முன்னிருந்தே கற்பிக்கப்பட்டுவந்த பனந்தொழில், விவசாயம் முதலிய பாடங்களுடன் புடைவையும் உடை அமைத்தலும், தென்னந்தும்புத்தொழில் ஆதியனவும் அறிமுகஞ் செய்துவைக்கப்பட்டன.

கவின்கலைப் பாடங்களாக, ஏற்கெனவே கற்பிக்கப்பட்டுவந்த சங்கீதம், சித்திரத்துடன் நடன ஆசிரியரும் 1976இல் நியமிக்கப்பட்டு அத் துறையிலும் மாணவர் ஈடுபட்டுப் பயிற்சி பெறுகின்றமை சிறப்பம்சமாகும்.

இலங்கையில் உள்ள சகல பாடசாலைகளிலும் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் எல்லா மாணவர்களும் சமவாய்ப்புடன் கல்விபெற அரசாங்கம் ஒழுங்குசெய்துள்ளது. இத்துறையிலும் உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயம் முன்னணியில் திகழ்கின்றது. உரும்பராய் அன்பரும் தற்போது மலேசியாவில் வசிப்பவருமான திரு. தம்பு குமாரசாமி அவர்கள் விஞ்ஞான கூடத்துக்குப் பயன்படக்கூடிய வகையில் 1969ஆம் ஆண்டிலேயே ஒரு மண்டபத்தைக் கட்டிக் கொடுத்தார். புதிய கல்வித் திட்டம் அறிமுகஞ் செய்யப்பட்ட நாளில் இருந்தே சகல வசதிகளோடும் கூடியதாய், விஞ்ஞானகூடம் செயற்பட்டு வருகிறது. வேண்டிய வேண்டியபோது, வேண்டிய விஞ்ஞான கூட உபகரணங்களைக் கல்விப் பகுதி தந்ததுடன், விஞ்ஞானம், கணிதம் கற்பிக்கக்கூடிய விசேட ஆசிரியர்களையும் நியமித்தமை குறிப்பிடத்தக்கது. ஆறும் வகுப்பில் இருந்தே விஞ்ஞானம், கணிதம் போதிப்பதில் எவ்வித இடர்ப்பாடுகளும் ஏற்பட்டதில்லை. தேசிய கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையிற் பொதுவாகப் பலர் சித்தியடைந்தபோதிலும், விஞ்ஞானம், கணிதம் இவற்றில் சிறப்பாக மாணவர்கள் சித்திபெற்றிருப்பது விசேடமாகக் குறிப்பிடத்தக்கது. மேல் வகுப்புகளில் மாணவர்கள் தொகை அதிகரித்து வருவதனுல், விஞ்ஞான கூடத்தை மேலும் விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இங்கு ஆங்கிலம், சமூகக்கலை முதலாம் பாடங்களைக் கற்பிக்கக் கூடிய விசேட தகுதிபெற்ற ஆசிரியர்களையும், பட்டதாரி ஆசிரியர்களையும் கல்விப்பகுதி நியமித்ததினுல் அப் பாடங்களும் சிறப்புற நடைபெற்று வருகின்றன. இப் பாடசாலையின் வளர்ச்சிக்கு உழைத்த ஆசிரியர்கள் பலர் ஓய்வு பெற்றுவிட்டார்கள். சிலர் மாறிச் சென்றுவிட்டார்கள். இவ்வறிக்கையின் இறுதிப் பகுதியில் இவர்களது விபரம் உண்டு.

**கலாசார செயற்றிட்டங்கள்:**

வழமைபோல நால்வர் குருபூசை, சிவராத்திரி, நவராத்திரி விசேட பூசைகள், நாவலர், வள்ளுவர் குருபூசைகள் முதலியவற்றையும், ஏனைய சமய விழாக்களையும் கொண்டாடி வருகின்றோம். பாடசாலையில் உள்ள பாலசுப்பிரமணியர் ஆலயத்தில், வெள்ளிதோறும் விசேட ஆராதனையும், சமயச் சொற்பொழிவுகளும் நடைபெற்று வருகின்றன.

“நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்.”

என்றார் உமாபதிசிவம். எமக்கெல்லாம் தோன்றாத் துணையாயிருந்து நல்வழிப்படுத்தி வருகின்ற தன்னேரிலாத தலைவரே கற்பக விநாயகர். கற்பக விநாயகர் ஆலய விழாக் காலங்களில் முக்கிய விழாக்களுக்குப்

பாடசாலையை விடுதலையாக்கி, ஆசிரியர்களும் மாணவர்களும் சேர்ந்து கற்பக விநாயகர் திருப்பாதங்களை இறைஞ்சுவது சம்பிரதாயமாகும். இரதோற்சவ வழிபாடு முக்கியமாய்க் குறிப்பிடத்தக்கது. இவ்வூரிலுள்ள ஆலய விழாக்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

**கலாமன்றம்:**

பாடசாலைக் கலாமன்றம் சிரேட்ட ஆசிரியர் திரு. இ. சரவணமுத்து அவர்களின் மேற்பார்வையில் சிறப்பாய் இயங்கி வந்துள்ளது. மாதம் ஒருமுறை கலாமன்றம் கூடி இயல் இசை நாடகமாகிய முத்துறைகளில் நிகழ்ச்சியை நிறைவேற்றி வந்துள்ளது. இப்பொழுது இப் பணியில் உழைத்து வருபவர் இவ் வித்தியாலயத்தின் இசையாசிரியர் சங்கீதபூஷணம் திரு. நா. கனகலிங்கம் அவர்களாவர்.

**மாணவர் மன்றங்கள்:**

பாடசாலையில் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மாணவர் மன்றங்கள் இயங்குகின்றன. மாதம் இருமுறை மன்றங்கள் கூடி பேச்சு, பாட்டு, நடனம், நாடகம், விவாதம் முதலாம் நிகழ்ச்சிகளை நடாத்தி வருகின்றன. மேற்பிரிவு மாணவர் சங்கம் 'கற்பகம்' என்ற சஞ்சிகை யைச் (கையெழுத்துப் பிரதியில்) சிறப்பம்சமாக வெளியிட்டு வருகிறது.

**நூலகம்:**

எமது பாடசாலையில் 1976ஆம் ஆண்டில் சிறிய நூலகம் ஒன்று ஆரம் பிக்கப்பட்டு இயங்கிவருகிறது. ஆசிரியர் திரு. எம். எம். மயில்வாகனம் தமது கடமைகளுடன் நூலகப் பொறுப்பையும் ஏற்று நடாத்திவருகிறுர்.

வசதிப் பணத்திலிருந்து வாங்கிய புத்தகங்களுடன் கல்வித் திணைக் களத்திஞல் தரப்பட்ட நூல்களும், பிரமுகர்களிஞல் அன்பளிப்புச் செய் யப்பட்ட புத்தகங்கள், சஞ்சிகைகளும் நூலகத்தை அலங்கரிக்கின்றன.

**விளையாட்டு, கலைநிகழ்ச்சிகள்:**

வட்டார நிலையில் சகல நிகழ்ச்சிகளிலும் கிரமமாகப் பங்குபற்றியுள் ளோம். விளையாட்டு, பேச்சு, நடனம் முதலாம் போட்டிகளில் மாவட்ட நிலையிற் பங்குபற்றிப் பரிசில்கள் பெற்ற சந்தர்ப்பங்கள் பல. மாணவர் களை உற்சாகப்படுத்தும் வகையில் பாடசாலை மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகள், கலை விழாக்கள், பொருட்காட்சிகள் இடம்பெற்றன. பல வகைப் போட்டிகளையும், அவ்வப்போது பெற்ற விருதுகளையும் விரிக்கின் இந்த அறிக்கை நீண்டோடிவிடும்.

**பரீட்சைகள்:**

இவ் வித்தியாலய மாணவர்கள் விவேகானந்த சபையாராலும், இந்து சமய விருத்திச் சங்கத்திஞலும் நடாத்தப்பட்ட பரீட்சைகளுக்குப் பெரு மளவில் தோன்றி உயர்சித்திகளைப் பெற்றனர். இப்பொழுதும் இப் பரீட்சைகளுக்குத் தோற்றிக்கொண்டே இருக்கிறுர்கள்.

பத்து ஆண்டுகளுக்கு மேலாக கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் (G. C. E. O./L.) கணிசமான அளவுக்குச் சித்திகளைப் பெற்றதுடன் மேற்படிப்பிலும் ஈடுபட்டுள்ளனர். ஒரு பகுதியினர் உத்தியோக வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர்.

தேசிய கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சைக்குச் (N. C. G. E.) சென்ற இரு ஆண்டுகளில் தோற்றியவர்களில் ஒரு பகுதியினர், விஞ்ஞானம், கணிதம், தொழில் முன்னிலைப் பாடங்கள் உட்படப் பல பாடங்களில் நல்ல சித்திகளைப் பெற்று உயர் வகுப்புத் தொடரத் (H. N. C. E.) தகுதி பெற்றுள்ளமை ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

**தேவைகள் :**

புதிய கல்வித் திட்டத்திற்கமையத் தொழில் முன்னிலைப் பாடங்களைத் தனித்தனியே நடாத்த தொழிற்கூட வசதிகள் போதியதாக இல்லை.

மாணவர்கள் விளையாட்டுத்துறையில் நன்றாக முன்னேறுவதற்கு வாய்ப்பாகப் பரந்துபட்ட ஒரு விளையாட்டு மைதானம் இல்லாத குறை நீண்டகாலமாகவே உண்டு.

தற்போதுள்ள நூலகம் தற்காலிகக் கட்டடத்தில் உள்ளது. இதற்கு நிரந்தரக் கட்டடம் இருப்பது விரும்பத்தக்கது.

பாலர் பாடசாலைக் கட்டடம் புதிய கல்வித் திட்டத்துக்கு அமைய நவீன முறைகளைக் கையாண்டு திருத்தம் செய்யப்பட வேண்டியது அவசியம்.

மாணவர் சமுதாயம் விரிவடைந்து வருவதுடன் இப் பாடசாலையின் அறுபதாண்டுச் சரித்திர வளர்ச்சியை மனதிற் கொண்டு காலகதியில் தேசிய உயர்கல்விப் பொதுத் தராதரப் பத்திர வகுப்பினை (H. N. C. E.) வைப்பதற்கு முயற்சி எடுப்பது நல்லது.

இச் சிறு குறைகளை நிவிர்த்திக்க பெற்றோர் ஆசிரியர் சங்கமும், பெற்றோர்களும், அபிமானிகளும், வித்தியாபகுதியும் முன்வர வேண்டுமென்பது எமது பணிவான வேண்டுகோள்.

**புதிய ஆசிரியர்கள் :**

1975 ஜனவரியில் யான் (வி. அரியநாயகம்) இப் பாடசாலைக்கு அதிபராக இடமாற்றம் பெற்று வந்தபோது, புதியவனுன எனக்கு அப்போது பொறுப்பாயிருந்த பிரதி அதிபர் திரு. அ. பஞ்சாட்சரம் அவர்களும், ஆசிரியர் எல்லோரும் சேர்ந்து சகல துறைகளிலும் பூரண ஒத்துழைப்பு நல்கினர். அவர்களுக்குப் பாராட்டுத் தெரிவிக்கும் அதே நேரத்தில், யான் கடமையேற்றபின் மாற்றம் பெற்றுச் சென்றவர்கள் பற்றியும், நியமனம் பெற்றுப் பணிபுரிய வந்தவர்களைப் பற்றியும் இச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடுவது பொருத்தமாகும்.

1975ஆம் ஆண்டு ஜனவரியில் திருவாளர்கள் செ. சின்னத்தம்பி அவர்களும், கா. வ. சுப்பிரமணியம் அவர்களும், மாசியில் சா. சிங்கராசா அவர்களும் மாற்றம்பெற்று வந்தனர். விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. ப. ஜெகநாதன் அவர்கள் பலாலி ஆசிரிய கலாசாலைக்குப் பயிற்சிக்குச் செல்ல, இவரின் இடத்துக்கு செல்வி வ. செல்வத்துரை அவர்கள் நியமனமானுர். ஆசிரியர் திரு. த. தேவராசா அவர்கள் மாற்றமாகிச் சென்ருர். நீண்டகால முயற்சியின் பயனுய் 1975ஆம் ஆண்டு ஐப்பசியில் நடன ஆசிரியராய் நியமனம் பெற்ற செல்வி ந. இராசதுரை அவர்கள் இந்த ஆண்டு ஆரம்பத்தில் ஆசிரிய பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டார். 1976இல் செல்வி அ. சின்னத்தம்பி விஞ்ஞான ஆசிரியையாக இப் பாடசாலைக்கு மாற்றலாகி வந்தார். திருமதி கா. இராஜகோபால் அவர்கள் கொழும்பிலிருந்து மாற்றம் பெற்று வந்ததும், திருமதி லலிதா மகேந்திரன் அவர்கள் பட்டதாரி உதவியாசிரியர் திட்டத்தின்கீழ் இங்கு நியமனமாகி இருப்பதும் குறிப்பிடத்தக்கது. நடன ஆசிரியரின் இடம் காலியானதினுல், மாணவர்கள் தொடர்ந்தும் நடனக் கல்வியைப் பயில என்ன செய்யலாம் என்று எண்ணிய இச் சந்தர்ப்பத்தில், கார்த்திகா ஆடற்கலை மன்ற மாணவி செல்வி நிர்மலா நடராசா அவர்கள் உதவி புரிய முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

**இப் பாடசாலை வளர்ச்சிக்கு உழைத்த உதவி ஆசிரியர்கள்:**

திரு. அ. சின்னப்புச் சட்டம்பியார். திரு. மு. அமுதலிங்கச் சட்டம்பியார், பண்டிதர் நீ. சி. முருகேசு, திரு. த. சந்திரசேகரம், திரு. ரி. பொன்னையா, திருமதி ஞானமணி, திருமதி பெ. சின்னம்மா, திரு. எம். பொன்னுத்துரை, திரு. சி. எஸ். இராசையா, திரு. மு. வே. நவரத்தினம், திரு. செ. ஐயாத்துரை, திரு. க. சபாபதிப்பிள்ளை, திருமதி ப. சின்னத்துரை, திருமதி ம. சரவணமுத்து, திருமதி த. இராமுப்பிள்ளை, திரு. சி. அப்புத்துரை, திரு. இ. சரவணமுத்து, திரு. நா. இராசையா, திரு. செ. சின்னத்துரை, திரு. வே. குலசேகரம்பிள்ளை, திரு. க. ஆறுமுகம், திருமதி சி. ஆறுமுகம், திரு. வீ. ஆறுமுகம், திரு. க. சோதிலிங்கம், திருமதி ச. சிவபாலசிங்கம், திரு. மு. விசுவலிங்கம், திருமதி இ. அப்புத்துரை, திரு. ஆர். இளையதம்பி, திரு. வி. மயில்வாகனம், பிரமஸ்ரீ சோ. சதாசிவ ஐயர், திருமதி ஈ. கணேசமூர்த்தி, பண்டிதர் இ. நவரத்தினம், பண்டிதர் த. சுப்பிரமணியம், திரு. ச. முத்தையா, திரு. சி. தாமோதரம்பிள்ளை, பண்டிதர் ஆ. சின்னத்தம்பி, திரு. க. பொன்னுச்சாமி, திரு. சி. சிவராமலிங்கம், திருமதி மு. சிவராமலிங்கம், திரு. கே. கே. காசிப்பிள்ளை, திரு. இ. ஜெகசோதி, திரு. க. இராமுப்பிள்ளை. திரு. இ. ஆ. நாகலிங்கம், திருமதி த. சுப்பிரமணியம், திரு. ச. கதிரவேலு, திரு. சி. க, அருணுசலம், திருமதி ப. அழகரத்தினம், திரு. மு. நல்லையா, திரு. செ. குணசிங்கம், திரு. இ. தம்பித்துரை, திரு. வ. மதியாபரணம், திருமதி, இ. கந்தையா, திருமதி. அ. நேசதுரை, திரு. தி. ஐயாத்துரை, திருமதி ம. பண்டித

வரதன், செல்வி ச. குலநாயகம், திருமதி ப, நவரத்தினசிங்கம், திரு. த. சதாசிவம், திரு. மு. ஆறுமுகம், திரு. மு. கந்தப்பு, திரு. ந. சின்னத்தம்பி, திருமதி ப. கந்தையா, திரு. ம. பாக்கியநாதன், திரு. எஸ். சண்முகரத்தினம், திருமதி ச. பேரின்பநாதன், செல்வி ஞா. இராசையா, திரு. ப. ஜெகநாதன், திருமதி நீ. அமுதசாகரன், திருமதி பு. கந்தையா, செல்வி தி. வேலுப்பிள்ளை, திரு. த. தேவராசா, செல்வி ந. இராசதுரை.

## பாடசாலையில் பாரம்பரியமாக நடைபெற்றுவரும் செயற்பாடுகளும் ஆசிரியர் குழுக்களும் 1977

**சமய சன்மார்க்கம்**

திரு. அ. பஞ்சாட்சரம்
திரு. க. பாலசுப்பிரமணியம்
திருமதி ஞா. சிவசுப்பிரமணியம்
திருமதி வ. சிவப்பிரகாசம்

**லீவு, சுற்றுநிருபங்கள், இடாப்பு வேலை**

திருமதி ச. பரங்கிரிநாதன்
திருமதி பொ. ஜெகநாதன்
திருமதி தெ. குழந்தைவேல்
செல்வி வ. செல்வத்துரை

**கலாமன்றம், இசை, நடனம, நாடகம்**

திரு. நா. கனகலிங்கம்
திரு. க. கணபதிப்பிள்ளை
திரு. இ. நாகலிங்கம்
திரு. ம. ம. மயில்வாகனம்
திருமதி ஞா. சிவசுப்பிரமணியம்
திருமதி சீ. அன்னலட்சுமி
திருமதி மு. தர்மராசா
திருமதி ல. மகேந்திரன்
திருமதி கா. இராசகோபால்

**பாடசாலைச் சுத்தம்**

திரு. க. பாலசுப்பிரமணியம்
திரு. சா. சிங்கராசா
திரு. கா. வ. சுப்பிரமணியம்
திருமதி தெ. குழந்தைவேல்
திருமதி கி. சோமசுந்தரம்
திருமதி வ. சிவப்பிரகாசம்
திருமதி சி. கணபதிப்பிள்ளை
செல்வி அ. சின்னத்தம்பி
செல்வி வ. செல்வத்துரை

**நீர் விநியோகம்**

திரு. அ. நாகரத்தினம்
திரு. கா. வ. சுப்பிரமணியம்
திரு. து. சிவசுப்பிரமணியம்
திரு. த. சிவசுப்பிரமணியம்
திருமதி மு. தர்மராசா
திருமதி சீ. அன்னலட்சுமி
திருமதி ல. மகேந்திரன்
செல்வி அ. சின்னத்தம்பி

**வரலாற்றுக் குறிப்பு, மதிப்பீடுகள்**

திரு. செ. சின்னத்தம்பி
திருமதி பொ. ஜெகநாதன்
செல்வி சி. சண்முகநாதன்

**ஆங்கிலப் பகுதி**

திரு. ம. ம. மயில்வாகனம்
திருமதி கா. இராஜகோபால்
திருமதி ச. பரங்கிரிநாதன்

**தொழிற்றுறைப் பகுதி**

திரு. செ. சின்னத்தம்பி
திரு. து. சிவசுப்பிரமணியம்
திரு. அ. நாகரத்தினம்
திரு. சா. சிங்கராசா
திரு. த. சிவசுப்பிரமணியம்
திருமதி மு. தர்மராசா
திருமதி ஞா. சிவசுப்பிரமணியம்
திருமதி சி. கணபதிப்பிள்ளை
திருமதி பொ. ஜெகநாதன்
திருமதி த. வெற்றிவேல்
திருமதி சீ. அன்னலட்சுமி
செல்வி சி. சண்முகநாதன்

**விஞ்ஞானம் & கணிதம்**

செல்வி அ. சின்னத்தம்பி
செல்வி வ. செல்வத்துரை

**மாணவர் மன்றம்**

திரு. அ. பஞ்சாட்சரம் (மேற் பிரிவு)

திரு. து. சிவசுப்பிரமணியம் (மத்திய பிரிவு)

திரு. க. பாலசுப்பிரமணியம் (கீழ்ப் பிரிவு)

**சுகாதாரம், உடற்கல்வி, விளையாட்டு**

திரு. த. சிவசுப்பிரமணியம்
திரு. செ. சின்னத்தம்பி
திரு. அ. நாகரத்தினம்
திரு. இ. நாகலிங்கம்
திரு. க. பாலசுப்பிரமணியம்
திருமதி சி. கணபதிப்பிள்ளை
திருமதி வ. சிவப்பிரகாசம்
திருமதி தெ. குழந்தைவேல்
திருமதி சீ. அன்னலட்சுமி
திருமதி ச, பரங்கிரிநாதன்

**நன்றி:**

எமது பிரதி அதிபர் திரு. அ. பஞ்சாட்சரம் எனது பொறுப்புக்களிலே பங்குகொண்டு தமது இதய பூர்வமான ஒத்துழைப்பினை வழங்குகின்றார். ஏனைய ஆசிரியர்கள், ஆசிரியைகள் தங்கள் ஒத்துழைப்பினைப் பூரணமாக நல்கி வருகிறார்கள்.

பாடசாலை வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமாய் இயங்கி வரும் பெற்றார் ஆசிரியர் சங்கம் வேண்டிய ஒத்துழைப்பை அளித்து வருவது குறிப்பிடத்தக்கது.

பாடசாலையின் வளர்ச்சி கருதிய விஷயங்களில் பல வழிகளில் உதவி புரிந்த உரும்பராய்—ஊரெழு பட்டணசபைத் தலைவர் அவர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் கோப்பாய்த் தொகுதியின் தேசியப் பேரவை உறுப்பினர் அவர்களுக்கும் உளங்கனிந்த நன்றி.

பாடசாலையின் முக்கிய தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்துதவும் வடமாநிலக் கல்வி அதிபதி அவர்களுக்கும், அவரது அலுவலக உயர்மட்ட உத்தியோகத்தர்களுக்கும் ஏனையோருக்கும் எமது மனப்பூர்வமான நன்றி.

பாடசாலை வேலைகளிலும், பாடசாலையோடு தொடர்புடைய புற வேலைகளிலும் நல்லாதரவு தந்துதவும் கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வ. க. ஈசுவரபாதம் அவர்களுக்கு விசேட நன்றி.


வித்தியாலயம் என்றென்றும் மேன்மேலும் வளர்ச்சியடைய எல்லாம் வல்ல இறைவனின் திருவடிகளைப் பிரார்த்தித்து எனது அறிக்கையைப் பூர்த்தி செய்கின்றேன்.

வணக்கம்


சைவத் தமிழ் வித்தியாலயம்,
உரும்பராய்,
1-4-77.

**வி. அரியநாயகம்**
அதிபர்

உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு உழைத்த அதிபர்கள்



திரு. சி. பொன்னுத்துரை அவர்கள்




திரு. சு. குமாரசேகரம் அவர்கள்



திரு. ஆ. கந்தையா அவர்கள்



திரு. கு. சபாரத்தினம் அவர்கள்



திரு. க. கதிரவேல் அவர்கள்

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
PERIODICAL DIVISION



தும்புத் தொழில் வேலையில் ஆசிரியர் மாணவர்களை நெறிப் படுத்திக்கொண்டிருக் கின்ருர்.



மாணவிகள் பன்ன வேலைப் பயிற்சியில் ஈடுபட்டிருப்பதை ஆசிரியை மேற் பார்வை செய்கின் ருர்.



புடைவையும் உடை அமைத்தலுக்குமான பொருட்காட்சிக் கெனப் பல்வகைத் தையல் வேலைகளில் மாணவிகளும் ஆசிரி யைகளும் ஈடுபட்டி ருக்கின்ருர்கள்.

JAFFNA LIBRARY REFERENCE DIVISION

# இசைத்தமிழ் வளர்ச்சியில் நாட்டார் பாடல்களின் பங்கு

கலாநிதி க. கைலாசபதி அவர்கள்,
தலைவர்,
இலங்கைப் பல்கலைக்கழக யாழ் வளாகம்.

தமிழ் மக்கள் தொன்றுதொட்டே இசைக்கலையைச் சிறப்பாகப் போற்றிப் பேணி வளர்த்து வந்திருக்கின்றனர். மும்மைத் தமிழ் பற்றிய வழக்கிலே இசையை நடுவண் அமைத்துச் சென்றிருக்குமாற்றை அறிஞர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். வீரயுகம் என வழங்கப்படும் சங்க காலத்திலே பாணர், கூத்தர் முதலிய இசைக் கலைஞர்கள் 'தாவுகின்ற பரிமாவின் மீதிவர்ந்து' சென்றே தளர்நடை நடந்தோ தரணிபரும் அரசியரும் உருக இசைபொழிந்தமைக்குச் சான்றோர் செய்யுள்கள் சான்று பகர்கின்றன. அக்காலத்திலிருந்து இன்றுவரை இசையும் இசைநுணுக்க நூல்களும் ஆற்றல்வாய்ந்த கலைஞர்களினால் அமைக்கப்பெற்று வந்துள்ளன. கர்நாடக இசை சம்பந்தமாகத் தென்னாட்டிலே சிறந்த நூல்கள் இயற்றப்பட்டமையைப்போலவே, முற்காலத்திலும் இசைநுணுக்கம், இந்திரகாளியம், இசைமரபு, பரதசேனாபதியம் முதலிய பல கலைநுணுக்க நூல்கள் இயற்றப்பட்டன. இடைக்கால உரையாசிரியர்கள் இசையும் கூத்தும் சேர்ந்த பலதிறத்து நூல்களைக் குறிப்பிட்டிருத்தல் இலக்கிய மாணவர் நன்கறிந்த செய்தியே. காலத்துக்குக்காலம் தோன்றிய இசைமேதைகள் அக்கலையைப் பற்றிய சாத்திர நூல்கள் எழுதியமையினால் தமிழர் வளர்த்த இசை செம்மை சான்றதாய், உலக இசை நிலைக்கு உயர்ந்ததொன்றாய் அமைந்து விளங்குகிறது. பழங்காலத்தில் மன்னரும், குறுநிலத் தலைவர்களும், வள்ளல்களும் ஆதரித்த கலைஞர் இசையாலே தமக்கு இசை தேடிக்கொண்டனர்; அமரத்துவம் அடைந்துவிட்டனர். அவர்தம் கலைமரபு இன்றும் குறிப்பிடத்தக்க அளவு உயிராற்றலுடன் வாழ்கிறது. இக்கலை மரபு செழித்து வளர்வதற்குப் பல சக்திகளும் கூறுகளும் பங்களிப்புச் செய்துள்ளன. தமிழிசையின் பருப்பொருள் வடிவமாய்த் திகழும் இசைப் பாடல்களின் — இசைத் தமிழின் — வரலாற்று வளர்ச்சியை உற்றுநோக்குமிடத்துப் பல்வேறு காலப்பகுதிகளிலே தமிழ் நாட்டில் வழங்கிவந்த நாட்டுப்புறப் பாடல்கள் உயிராதாரமாயும் உந்து சக்தியாயும் அமைந்து அவ்வளர்ச்சிக்கு ஏதுவாயிருந்தமை எளிதிற் புலனாகும்.

பழந்தமிழ்நாட்டு இசைக் கலைஞர்களான பாணன், பாடினி, கூத்தர், விறலியர் முதலியோர் ஆதியில் மக்களது கூட்டு வாழ்க்கையின் அடிப்படையிலே தோன்றியோராவர். வாய்மொழி இலக்கியமே அக்காலத்தில் வழக்கிலிருந்தது. பெரும்பாலும் குழுமுறையில் இயங்கிய அக்கலைஞர்கள் அடிக்கடி வறுமையால் வாடி வதங்கிய நாட்டுப்புறக் கலைஞராவர். ஊர்களிலே விழாக்கள் நடக்கும்பொழுது அங்கெல்லாம் சென்று மக்களையும் பின்னர் மன்னரையும் அவர்கள் மகிழ்வித்தனர். மக்களது ஆதரவிலிருந்து தமது கலைக்கு ஜீவசத்துப் பெற்றவர்கள். பல சுவைகளையும் தழுவிய இசையை அவர்கள் உருவாக்கினர். அதனடியாகவே நமது முற்பட்ட இசைவடிவங்களான பண்கள் முகிழ்த்தன. கூத்துடன் கூடி வளர்ந்த இசைக் கலை தொடக்கத்திலிருந்தே நாட்டார் இலக்கியங்கள், பாடல்கள், கூத்து இவற்றிலிருந்து வளம்பெற்றது.

ஆனால், காலப்போக்கிலே தமிழ்ச் சமுதாயத்திலே தவிர்க்க இயலாதவாறு ஏற்பட்ட வர்க்க வேறுபாடுகளின் விளைவாகவும் பிரதிபலிப்பாகவும் இசையிலும் உயர்கலை, பாமரர் கலை என்னும் பாகுபாடு எழுந்தது. இப் பாகுபாட்டின் தருக்கரீதியான வெளிப்பாடாகவே வேத்தியல்,

பொதுவியல் என்ற வழக்காறும் கலையுலகில் காணப்படலாயிற்று. சமுதாயத்திலே உழுதுண்போர், உழுவித்துண்போர் என்னும் அடிப்படையான வர்க்கப் பிரிவினை உண்டாகியதன் பின்னர், கூட்டுவாழ்க்கையிலிருந்து அந்நியப்பட்ட உயர்வர்க்கம் தோன்றியது. உழைப்பிலிருந்து விடுபட்ட அவ்வர்க்கத்தினர், ''தூயகலை''களையே சுவைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இது பொதுவான சமுதாய நியதியாகவிருந்தது. அக்காலத்திலிருந்து இன்றுவரை சிற்சில கலைஞர்கள் உயர்வர்க்கத்தினரை மட்டுஞ் சார்ந்துநின்று அவர்களது பொழுதுபோக்குக்காகவும் மகிழ்ச்சிக்காகவும் கலைவடிவங்களைப் படைத்து வந்துள்ளனர். ஆனல் காலத்துக்குக்காலம் தோன்றிய ஆற்றல் மிக்க கலைஞர்கள் மக்கள் கலைகளையும் தழுவிக்கொண்டே தமது ஆக்கங்களைப் படைத்தளித்தனர். இளங்கோ, கம்பர், பாரதி முதலியோரை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

வீரயுகத்திற்குப் பின்னர் வர்க்க வேறுபாடுகள் வலுவும் முனைப்பும் பெற்றுவிட்ட காலப்பகுதியிலே இயற்றப்பட்ட சிலப்பதிகாரம் இவ்விடத்திலே குறிப்பிடத்தக்கது. புராதனத் தமிழ்நாட்டிலே கூட்டுவாழ்க்கையில் ஈடுபட்டிருந்த மக்களின் சொத்தாக—அவர் விட்டுச்சென்ற அருஞ்செல்வமாகத் தமது காலத்திலும் வழங்கிய—'தாழ்ந்த' நிலையில் இருந்த 'பாமர' மக்களிடையே நிலவிய—இசைக்கோலங்களை ஆதாரமாய்க் கொண்டே, குன்றக்குரவை, வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை முதலிய அற்புதமான இசைப்பாடற் பகுதிகளை ஆக்கினுர் இளங்கோவடிகள் என்பதில் எவர்க்கும் கருத்துவேறுபாடில்லை. தெ. பொ. மீனுட்சிசுந்தரம், தி. நா. சுப்பிரமணியன் முதலிய ஆய்வாளர்கள் சிலம்பிற் காணப்படும் நாட்டுப்புறக் கலைகளின் செல்வாக்கினைத் தெளிவாக்கியிருக்கின்றனர். ஊர்சூழ்வரி, அம்மானைவரி, கந்துகவரி, ஊசல்வரி என்பனவும் நாட்டுப்புறப் பாடல்களிலிருந்து அமைக்கப்பெற்றனவே. வாழ்க்கையையும் தத்துவத்தையும் இணைத்துக் காப்பியஞ் செய்ய முற்பட்ட கலைஞருக்கு மக்கட் பண்பாட்டியற் கூறுகள் உயிர்நிலையாக அமைந்து அவரது படைப்பிற்கு உறுதியும் உயர்வும் அளித்தன.

காலப்போக்கில் பல்வேறு வரலாற்றுக் காரணங்களின் அடிப்படையில் தமிழ் மக்கள் வடநாட்டு மக்களுடன் நெருங்கிய கலாசார உறவுகளை ஏற்படுத்திக்கொண்டதன் விளைவாகவும் குறிப்பாக வடமொழிக் கலப்புக் காரணமாகவும் இசைத்துறையில் சிற்சில வளர்ச்சிகள் உண்டாயின. உதாரணமாக, காந்தாரம், கௌசிகம், சாதாரி, தக்கேசி, மேகராகம் முதலிய பண்வகைகள் தமிழிற் புகுந்தன. செந்தமிழ் வளர்ச்சியடைந்ததைப் போலவே, செவ்விய இசையும் பல்லவர் காலத்திலே பெருவளர்ச்சியுற்றது. விருத்தப்பாவிலே எண்ணற்ற சந்த வேறுபாடுகள் எழுந்தன. இவையெல்லாம் உயர்மட்டத்தில் காணப்பட்டமாற்றங்கள். ஆயினும் இவ்வளர்ச்சிகளின் உடனிகழ்ச்சியாக, ஆழ்வாரும் நாயன்மாரும் தமது ஆக்கங்களுக்கு ஆதாரமாக நாட்டார் பாடல் வடிவங்கள் பலவற்றைக் கைக்கொண்டனர். தேவாரங்களிலும் திவ்விய பிரபந்தத்திலும் நாட்டார் பாடல்களின் செல்வாக்கு எத்துணை ஆழமாகக் காணப்படுகிறது என்பதனை விபுலாநந்த அடிகளாரும் அவருக்குப் பின்வந்த ஆய்வாளர் சிலரும் எடுத்துக்காட்டியுள்ளனர். பக்தி இயக்கம் பொதுமக்களிடையே பரவலாகச் செல்வாக்குப் பெற்றிருந்தமையால் அவர்கள் வாழ்வில் இடம்பெற்றிருந்த கலை வடிவங்களும் இசைக்கோலங்களும் பக்திப் பாடல்களில் எதிரொலித்தல் இயல்பே. தாழ்ந்த சாதியினராய்க் கருதப்பட்ட ஆனுயநாயனுரும், திருநீலகண்ட யாழ்ப்பாணரும், திருப்பாணுழ்வாரும் இசை பாடியும் யாழ்மீட்டியும் இறைவனைத் துதித்தபொழுது, அவரெல்லாம் தமக்குப் பரிச்சயமான பாடல்வகைகளையும் பயன்படுத்தியிருப்பர் என்பது எதிர்பார்க்கக் கூடியதன்ருே? அதுமட்டுமன்று; பக்திப் பந்தரில் இசைமாரி பொழிந்த இறையடியார்கள் குறிஞ்சி, சீகாமரம், செவ்வழி, நட்டபாடை, வியாழக்குறிஞ்சி முதலிய பண்களிலே தமது பாடல்கள் பலவற்றை அமைத்த அதேவேளையில், வழிவழிவரும் நாட்டார் பாடல்களாம் கும்மிப்பாட்டு, ஊஞ்சற்பாட்டு, வள்ளைப்பாட்டு, வரிப்பாட்டு, தெம்மாங்கு முதலியவற்றையும் ஏற்றவாறு பயன்படுத்தியிருக்கின்றனர். அன்றியும், கழல், பந்து, அம்மானை,

சுண்ணம், சாழல், தெள்ளேணம், பூக்கொய்தல் முதலாய மக்கள் விளையாடல்கள் — சடங்குகள் — இவற்றுடன் தொடர்புடைய பாடல்களிலிருந்தும் ஓசைநயங்களைப் பெற்றனர் என்பதும் வெளிப்படை. நாட்டுப்புற மக்கள் (குறிப்பாக மகளிர்) விளையாட்டுக்களேயன்றி, நாட்டார் பாடல்களில் உள்ள அமைப்பியல் கூறுகளும் பக்திப் பாடல்களில் குறிப்பிடத்தக்க விதத்திலே அமைந்துள்ளமையை ஆய்வாளர்கள் சுட்டியுள்ளனர். சொல்வளம், யாப்பமைதி, பாடல்வடிவம் என்னும் அம்சங்களிலெல்லாம் பக்திப் பாடல்கள் நாட்டார் இலக்கியத்தின் செல்வாக்கிற்குச் சான்றுபகருகின்றன.

விசயநகரப் பேரரசு தென்னாட்டிலே இந்துப் பேரரசாக நிலைநாட்டப்பெற்ற காலப்பகுதியிலே அரசவைகளிற் கன்னடமும் தெலுங்கும் சிறப்பிடம் வகித்தன. அதையடுத்துத் தமிழ்நாட்டிலும் கருநாடக இசை ஓங்கி வளரலாயிற்று. கருநாடக இசையின் கொடுமுடிகளான நூல்கள் இக்காலப் பகுதியையடுத்தே எழுந்தன. ஆயினும், தமிழ்நாட்டிலே 'மூவேந்தரு மற்று முடியற்றுச் சங்கமற்றுப் பாவேந்தர் காற்றில் 'இலவம் பஞ்சாகப்' பறந்த காலத்திலே குடைநிழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோர் நடைமெலிந்தனர்; உயர்கலைஞர் அரசறிய வீற்றிருந்த வாழ்வு வீழ்ந்தது.

அரசியற் சமூகக் குழப்பங்களுக்கு மத்தியில் பொதுமக்களே ஓரளவாவது நம்பிக்கையுடனும் உழைப்புறுதியுடனும் வாழ்ந்தனர். உழவரும், குறவரும், பள்ளரும் இலக்கியக் கதாபாத்திரங்களாக உயர்த்தப்பட்ட அக்காலப்பகுதியிலே இசைநாடகங்கள் பல தோன்றின. குறம், குறவஞ்சி, உழத்திப் பாடல், பள்ளு முதலிய இலக்கியவகைகள் தோன்றுதற்குப் பாமரராகக் கொள்ளப்பட்ட மக்கள் வாழ்க்கையே அடிநிலையாக அமைந்தது என்பதை எவரும் மறுக்கமுடியாது. கற்றோர் மட்டுமன்றி மற்றோரும் அனுபவித்து இன்புறத்தக்க வகையில் இன்றுவரை நின்று நிலைக்கும் மதுரைமீனாட்சி குறம், திருக்குற்றாலக் குறவஞ்சி, முக்கூடற் பள்ளு முதலிய இசைதழுவிய நூல்கள் நாட்டார் இலக்கியங்களை ஆதாரமாசக் கொண்டு தோன்றி அவற்றினூடாக அவர்தம் வாழ்க்கையையும் அழகுணர்ச்சியுடன் காட்டுகின்றன. முற்பட்ட யாப்பு நூல்களும் பாட்டியல்களும் கூறாத பாவினங்கள் பிற்காலத்திலே பரிணமித்ததைப் போலவே, சிந்து, கும்மி, கீர்த்தனை, தரு முதலிய தமிழ் இசை வடிவங்கள் பாமரரையும் தழுவி எழுந்த உயிர்த் துடிப்புள்ள ஒலி உருவங்கள். குறிப்பாக இடைக்காலத்தில் (அதாவது 16, 17, 18ஆம் நூற்றாண்டுகளிலே) இலக்கியஞ் செய்த 'பெரும்' புலவர்கள்கூட ஏதோவொருவகையிற் பாமரர் பாடல்களால் ஈர்க்கப்பெற்றவராகவே காணப்படுகின்றனர். இன்னொரு வகையிற் கூறுவதானால், பொதுவாகவே சோழப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர், நாட்டார் இலக்கியமும் இசையுமே ஆக்க சக்திக்கு அடிப்படை ஆதாரமாய் விளங்கின எனலாம். உணர்ச்சியினால் உந்தப்பட்டுப் பாடப்பெற்ற பக்தி பூர்வமான பாடல்கள் மட்டுமன்றித் தத்துவச் சார்புடைய நூல்களும் நாட்டார் பாடல்களினால் பாதிக்கப்பெற்றுள்ளன. புராண இலக்கியங்கள், சித்தர் பாடல்கள் முதலியன இதற்கு உதாரணங்கள். எனினும் கூற்று விளக்கத்திற்காக விசேஷமாக ஓர் ஆசிரியரை இவ்விடத்தில் எடுத்துரைத்தல் பொருத்தமாயிருக்கும்.

205491

பதினாறும் நூற்றாண்டிலே தமிழ்நாட்டில் வாழ்ந்தவராய்க் கருதப்படும் தத்துவராய சுவாமிகள், வேதாந்த நெறியைத் தமிழில் திறம்பட எடுத்துரைத்தவர். சிறப்பாக வடமொழித் தொடர்புடன் இருந்துவந்த வேதாந்த நெறியைத் தமிழ்மயப்படுத்தி நூல்கள் பல இயற்றிய சாத்திர வல்லுநர் தத்துவராயர். திரு. மு. அருணாசலம் குறிப்பிட்டிருப்பதுபோல, ''பிற்காலத்தில் வேதாந்த நூல் செய்வாருடைய திருத்தமில்லாத தமிழ்நடைபோலன்றி, தத்துவராயருடைய தமிழ் மிகவும் சிறப்பான இலக்கிய நயம் பொருந்திய செந்தமிழ்நடை''. அவ்வாறிருக்கவும், சுவாமிகளுடைய சில நூல்களைப் படிக்கும்பொழுது நாட்டார் இலக்கியங்கள் ஏற்படுத்தியுள்ள பாதிப்பின் ஆழமும் தன்மையும் தெற்றெனப் புலப்படும். அவரியற்றிய பாடுதுறை என்னும் பாடற்றொகுப்பிலே எத்தனையோ நாடோடிப் பாடல் வகை

ARCHIVES

களைக் காணலாம். அருமையான பாட லமைதிகள் இந்நூலில் அமைந்துள்ளன.

திரிகூடராசப்பக் கவிராயர், அருணா சலக் கவிராயர், கோபாலகிருஷ்ண பாரதியார், முத்துத்தாண்டவர், அண்ணா மலை ரெட்டியார், இராமச்சந்திர கவி ராயர், சிவக்கொழுந்து தேசிகர், வேத நாயகம்பிள்ளை, தெ. அ. துரையப்பாபிள்ளை முதலிய கவிஞர்கள் ஜனரஞ்சகமான பல இசைப்பா வடிவங்களை நமக்களித்துள்ள னர். நவயுகத்தின் தலைமைக் கவிஞனாக நம்மவராற் போற்றப்படும் மகாகவி பாரதி யார் நாட்டார் இலக்கியங்களையும் தழுவியே அற்புதமான பாடல்களை ஆக்கி னார். வழிநடைச் சிந்துகள் முதல் வண்டிக் காரர் பாட்டுகள் வரை சமூக வாழ்க்கை யில் வழங்கிய பாமரர் பாடல்களையெல்லாம் பற்றுக்கோடாகக் கொண்டு புதிய புதிய பொருளுக்கு அவ்வடிவங்களுக்கு ஏற்ற வகையிற் பயன்படுத்தினார். இதனையெல் லாம் மனங்கொண்டே பாரதிதாசன் பாரதி யைப் பற்றிப் பாடுகையில் ''சிந்துக்குத் தந்தை'' என்றார். பாரதிக்குப் பின் வந்த புலவரெல்லாம் இசைதழுவிய இலகுவடி வங்களையே அதிகமாய்க் கையாண்டுள்ள னர். இதனை இவ்விடத்தில் விரித்தல் இயலாது. புதிய சந்தவகைகளுக்கும் பாவகைகளுக்கும் பிற்காலத்துப் பாட் டியல்காரர் அமைதிகாண முயன்றமை போலவே, நூதனமான வெகுஜனச் சுவை பொருந்திய இசைவடிவங்களுக்கும் இசை வல்லுநர் ஏற்ற இடமளித்துள்ளனர்.

இந்தச் சந்தர்ப்பத்திலே நாட்டார் இலக்கியங்களினால் இசைபெற்ற ஒரு சிறப் பியல்பினைக் குறிப்பிடுதல் பொருத்தமா யிருக்கும். இசைப்பாக்களை (சாகித்தியங் கள்) இருபெரும் பிரிவுகளாகச் சிலர் வகுப்பர். உரையியல் பாக்கள், இசையியல் பாக்கள் என அவ்விரு பிரிவையும் சார்ந்த பாடல்களை வழங்குவர். முன்னதில் உரை நடை மிக்கும் இசைநடை குறைந்தும் காணப்படும் என்றும், பின்னதில் நிலை யெதிர்மாறாக இருக்கும் என்றும் கூறுவர். முன்னதிற்குச் சிறந்த உதாரணமாகத் தியாகராஜருடைய கிருதிகளையும், பின் னதிற்குச் சான்றாகக் கவிகுஞ்சர பாரதி யார், புரந்தரதாசர் போன்றோர் இசைப் பாடல்களையும் (கீர்த்தனங்கள்) கொள்வர்.

உரையியல் பாக்களுக்கு உதாரண மாகவே, தில்லானா, நொண்டிச்சிந்து, பதம், வண்ணம், விருத்தம் முதலாய செறிவுள்ள பாடல்களைக் கூறுவர். சாஸ் திரீய சங்கீதம் இசையியல் பாக்களையே சிறப்பாகப் போற்றும்; மக்கள் இசை உரை யியல் பாக்களைப் போற்றும். இவற்றுக் கிடையில் உயர்வு தாழ்வு காண்பதில் அர்த்தமில்லை. உரையியல் பாக்களைக் கேட்போர், இசையுடன் பொருளையும் உணர்ந்து உருகுவதனால் பரந்த மக்கட் கூட்டத்தினர் இசைக்கலையின் பயனைப் பெற்று அனுபவிக்க வழிபிறக்கிறது. நாட் டார் பாடல்களைத் தழுவி எழுந்த இசைப் பாடல்கள் இத்துறையிற் சிறந்து விளங்கு கின்றன. இசைத்தமிழின் வரலாற்றை நோக்குமிடத்து, ''உயர்ந்த'' இசை ஒடுங்குதசையிலிருந்த காலத்திலே, நாட்டு மக்களுடைய இசையுணர்ச்சிக்கு உருவங் கொடுத்து, நமது இசைமரபைப் பேணிப் பாதுகாத்த பெருமை நாட்டார் இசைக் குண்டு. மக்கள் பேச்சு வழக்கிலிருந்து சொற்களையும், பேச்சோசையையும் பெற் றுக் கவிஞர் தமது செய்யுள்களை வலிமை யுள்ளனவாய் அமைப்பதுபோலவே, இசை யாளரும் பொதுமக்கள் இசைக் கூறுகளி லிருந்து வளம்பெற்றனர். இது ஒரு பொது விதி என்றே கூறுதல் தகும். இருபதாம் நூற்றாண்டிலே இலக்கியத்திற்கு ஈடிணை யற்ற வகையில் வளமூட்டிய அமரகவி பாரதியார், குயில்பாட்டு என்னும் குறுங் காவியத்தில் மேல்வருமாறு பாடியிருக் கிறார்:

ஏற்றநீர்ப் பாட்டின்
இசையினிலும் நெல்லிடிக்கும்
கோற்றொடியார் குக்குவெனக்
கொஞ்சும் ஒலியினிலும்
சுண்ண மிடிப்பார்தஞ்
சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணை மடவார்
பழகுபல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள்
வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி யிசைத்திடுமோர்
கூட்டமுதப் பாட்டினிலும்
...........................................

நாட்டினிலுங் காட்டினிலும்
நாளெல்லாம் நன்றொலிக்கும்
பாட்டினிலும் நெஞ்சைப்
பறிகொடுத்தேன் பாவியேன்.

கவிஞரும் இசைவல்லுநரும் நெஞ்சைப் பறிகொடுப்பனவற்றைப் பற்றிக் கவிஞர் குறிப்பிட்டுள்ளார். இது எக்காலத்திற்கும் ஏற்றவோர் பேருண்மையாகும்.

பொதுமக்கள் மத்தியில் பரிமாறப்படும் பொழுதுதான் இசை கலையாகிறது. அவர்களும் கலைகளைச் சுவைக்கும் நிலையிலே தாம் அவை முழுமையும் நிறைவும் அடைகின்றன. இதனடிப்படையிலேயே இசை வளர்ச்சியிலே காலத்துக்குக் காலம் நாட்டார் நாவில் நடமிடும் ஒலிநயங்கள் இடம்பெற்றுவிடுகின்றன.

கடந்த சில காலமாகத் தமிழ்த் திரைப் படங்களில் இடம்பெறும் பாடல்களும் இசையும் மக்கள் மனதைக் கவ்விப் பிணித்துள்ளன. இந்திப் படங்களில் இடம்பெற்ற மெட்டுக்களைப் பின்பற்றிய ''டப்பா'' இசையின் கோர ஆட்சிக்குப் பின்னர், கடந்த பதினைந்து இருபது வருடங்களாகத் தமிழ் மரபில் மலரும் திரைப்பாடல்கள் பல இடம்பெற்றுவருகின்றன. குறிப்பாக பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் திரைப்படப் பாடல்கள் இயற்றுவதில் பெருமாற்றத்தினைப் புகுத்தினார். தஞ்சாவூர்க் கிராமத்தின் பின்னணியிலிருந்து வந்த கல்யாணசுந்தரம், நாட்டுப் பாடல்களைத் தழுவிப் பல பாடல்களை இயற்றினார். பாரதிக்குப் பின் வந்த ஆற்றல் மிக்க கவிஞரில் ஒருவராக இப்பொழுது கருதப்படும் அவர், நாட்டுப் பாடல்களைத் திரையுலகிற் புகுத்தியதால் அது வளம்பெற்றது. மருதகாசி, கொத்தமங்கலம் சுப்பு, கண்ணதாசன் முதலியோரும் அவ்வப்போது நாட்டுப் பாடல்களை எதிரொலிக்கும் திரைப்பாடல்களை இயற்றியிருக்கின்றனர். பாடலாசிரியர்களைப் போலவே இசை இயக்குநர்கள் சிலரும் மக்கள் இசையின் நலத்தைத் தக்கபடி பயன்படுத்தி வந்துள்ளனர். கே. வி. மகாதேவன், விஸ்வநாதன், இளையராஜா, எம். பி. சீனிவாசன் ஆகியோர் இத்தொடர்பிற் குறிப்பிடத் தக்கோராவர். நாட்டுப் பாடல்களின் இசை நயங்களைத் தழுவிய இலகு சங்கீதம் ஜனசங்கீதமாக மாறக்கூடிய சூழ்நிலை இக்காலத்திலே தோன்றியுள்ளது. இன்னும் இக்காலத்திலே வானொலியிலும் நாட்டுப் பாடல்கள் பலவிதங்களில் இடம்பெறுகின்றன.

இவற்றையெல்லாம் கூர்ந்து கவனிக்கும்போது தமிழிசைப் பாடல்களின் வளர்ச்சியிலே ''பாமரர்'' இலக்கியத்தின் பங்கு குறிப்பிடத்தக்கது என்று ஐயத்துக்கிடமின்றிக் கூறலாமல்லவா? மனிதனைப் பற்றியும் சமூகத்தைப் பற்றியும் நாம் அறிந்துகொள்ளவேண்டிய பல முக்கியமான செய்திகள் நாட்டார் இலக்கியத்திலே ''இன நினைவு''களாக எஞ்சி நின்று சமூகவியல் ஆராய்ச்சியாளருக்குப் புலப்படுவதுபோல, பல்வேறு காலத்து உழைக்கும் மக்களின் தொழிற் பாடல்களும், சடங்குப் பாடல்களும் வழிவழி வரும் அற்புதமான இசை நயத்துடன் மறைந்து கிடக்கின்றன. அவற்றிலே வலிமையும் எளிமையும் இனிமையும் பொருந்தியவற்றை எடுத்து இன்றைய இசையாக்கத்திற்குப் பயன்படுத்தும்பொழுது புதிய உயிர்ச்சத்து இசைக்குக் கிடைக்கிறது. கலையின் வளர்ச்சிக்கு அது வழிகாட்டுகிறது. வேத்தியல், பொதுவியல் என்று முன்னாளில் நாட்டியத்தை வகுத்தனர் ஆசிரியர்கள். அது இசையையும் தழுவிய பாகுபாடே. அதுவே வேறு வடிவத்தில் சாஸ்திரீய சங்கீதம், சாமானிய மக்களுக்கான சங்கீதம் என்று இன்று வழங்குகிறது. இரண்டும் முக்கியமானவையே. ஒன்று மற்றொன்றைப் பிரிந்து இயங்குதல் சாலாது. வரலாற்று அடிப்படையில் நோக்கினாலும், நமது காலத்தின் தேவைகளை மனங்கொண்டாலும் கலை இலக்கியத்தின் வளர்ச்சிக்கு நாட்டார் வளர்த்த கலைத்துறைகள் இன்றியமையாதனவாகும், இரண்டும் இணைந்து வளர்ந்தாற்றான் இசை பூரணத்துவம் அடையும் என்பதுறுதி.

அழகிய புகைப்படங்கள் எடுப்பதற்கு

புகழ்பெற்ற ஸ்தாபனம்

# ஞானம்ஸ் ஸ்ரூடியோ

*

புளொக்குகள் தயாரிப்பாளர்

★

# GNANAMS

- PHOTOGRAPHERS
- BLOCK MAKERS
- PHOTOSTAT PRINTERS
- PICTURE FRAMERS

&

**DEALERS IN GLASS WARES**

301, Clock Tower Road,
JAFFNA.

*Branch :*

**81, Stanley Road, JAFFNA.**

Telephone: 7067

# அத்துவிதமும் உடனுதலும்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

அத்துவிதம் அத்வைதம் எனவும்படும். அத்துவிதம் 'இருமையின் ஒருமை'. அஃதாவது இரு பொருள்களின் ஒருமைப் பட்ட தொடர்பு விசேடம். இந் நிலையை,

'ஒன்ருகாமல், இரண்டாகாமல், ஒன்று மிரண்டும் இன்ருகாமல் இருக்கும் நிலை யென்று விளக்கஞ் செய்கின்றது, இருபா இருபஃது.

உடலையும் உயிரையும் எடுத்துக் கொள்ளுவோம், உயிர் உடலோ டத்து விதப்பட்டிருக்கிறது. அவ்வாறே உயிர்க் குயிர் உயிரோடத்துவிதப்பட்டிருக்கின்றது. உயிர்க்குயிர் இறைவனுகிய பேரொளிப் பிழம்பு.

உயிர் உடம்போடத்துவிதப்பட்டிருப்ப தற்கும், உயிர்க் குயிர் உயிரோடத்து விதப்பட்டிருப்பதற்கும் வேறுபாடு பெரிது.

முந்தியது (உயிர் + உடல்) ஆதியு மந்தமும் உள்ளது. மற்றையது (உயிர்க் குயிர் + உயிர்) அநாதியானது; அந்தம் இல்லாதது; நித்தியமானது,

உயிர் சார்ந்ததன்வண்ணமாய் அதனு ளடங்கியிருப்பது. 'வசித்திட வரும் வியாபி' என்பது சித்தியார், உயிர் எங்கு வசித்தலைச் செய்கின்றதோ, அங்கு வசித் தலால் உளதாகும் வியாபகத்தை உடைய தென்பது கருத்து. இதனுல் உயிர் உடம் பொடு படும் அத்துவிதம் 'உடனுதல்' எனப்படும். சார்ந்ததனுடன் அதுவாய் விடுதல் என்பது கருத்து. உயிர் தன்னை உடலாகவே கருதுகிறது.

உயிர்க்குயிர் உயிரைத் தன் வண்ண மாக்குவதன்றி உயிர் வண்ணமாவதில்லை. அன்றி உயிரில் அடங்கியிருப்பதுமில்லை; அப்பாலாயு மிருப்பது.

உயிர்க்குயிர் உயிர்வண்ணமாய் உயிரே யாய் இருப்பினும், அந் நிலை உடனுதல் போல்வதன்றி உடனுதலாகாது. உயி ரியல்வு வேறு; உயிர்க்குயிரினியல்பு வேறு, உயிர் உடலோடு உடனுதல், உயிர்க்குயிர் உடலோடு உடனுதலினுலேதான் நிகழ முடியும்.

உயிர் உடலோடு உடனுதற்கு, உயிர்க் குயிர் உடலோடு உடனுதல் செய்ய வேண் டியதே. அவ்வாறு செய்யினும், உயிரின் பொருட்டு உடனுதல் செய்த உயிர்க் குயி ரின் உடனுதல், உடனுதல் போல்வதன்றி உடனுதல் அன்ரும்.

உடற் சுத்தத்தின் பொருட்டு உயிர் உடலுடன் முழுகுகின்றது. முழுகியது உடலே; உயிர் முழுகியும் முழுகவில்லை. உயிர்க் குயிரின் உடனுதல் அத்துவிதம் எனப்படும்.

உயிரின் அத்துவிதம் உடனுதல் எனப் படும். ஆகவே சீவாத்மாவின் அத்துவித மும் பரமாத்மாவின் அத்துவிதமும் ஒன் றுக் கொன்று வேருதல் காண்க.

✲ ✲ ✲

I. 'ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடன்' ஒன்று மேலிடின் ஒன்று ஒளிக் கும், கொடிக்கவி.

'ஒன்றே இடன்' என்பதில் ஒன்று உயிர். ஒளி — இறையொளி, இருள் அறி யாமையாகிய ஆணவ இருள்.

✲ ✲ ✲

II. கேவலத்தில் இருள் மேலிட்டிருப் பது உயிர்.

✲ ✲ ✲

III. இறைஒளி உள் இருப்பவும் இருள் மேலிடுமா? ஆம், மேலிடும். எங்ஙனம்? 'ஊமன் கண்போல் ஒளியும் மிக இருளே யாம்.'' திருவருட்பயன்.

துயில்வோனுக்குச் சூரிய ஒளி பயன் படாதவாறு போல, இருளில் முழுகிய உயிருக்கு இறையொளி பயன்படுகின்

றிலது. அம்மட்டோ! அன்றிப் பேரொளியே பேரிருளாயும் இருக்கின்றது.

☼ ☼ ☼

IV. இறை ஒளியும் இருளைப் பெருக்கு மானல், உயிருக்கு உய்தி இல்லையா? உண்டு. எங்ஙனம்? 'ஒன்று மிகினும் ஒளி கவராதேல் உள்ளம் என்று மகலா திருள்'. திருவருட்பயன்.

ஒன்று — இருள், இருள் மிக்கிருந்தாலும் ஒளி கவரும். உள்ளம் - உயிர். கவராதேல் என்பதனுல் கவரும் என்பது வருவிக்கப்படும். 'கவராதேல் என்றும் அகலா திருள்' என்றவாறு.

ஆகவே ஒளியாகிய சித்துச் சடமாகிய இருளை வென்றே தீரும் என்றவாறு.

☼ ☼ ☼

V. 'காந்தங்கண்ட பசாசத்தவையே' என்பது சிவஞானபோதம்.

உயிர்கள், பசாசம் (இரும்பு). இறை ஒளி காந்தம்; ஆகவே ஒளியாகிய காந்தத்தால் உள்ளமாகிய உயிர் கவரப்படும் என்றவாறு.

☼ ☼ ☼

VI. 'ஆணவத்தொ டத்துவித மான படி மெய்ஞ்ஞானத் தாணுவினே டத்துவித மாகுநா ளெந்நாளோ' என்று ஏங்குகின்றுர் தாயுமானவர்.

ஆணவத்தோடு கேவலத்தில் அத்துவிதமாயிருக்கும் உயிர், ஒரு காலத்தில் சுத்தாவஸ்தையில் ஒளி மேலிட்டு ஒளியாகிய இறையோடு அத்துவிதம் ஆகுமென்றவாறு. அதுதான் சுத்தாத்துவிதம்; பரமுத்தி.

---

கல்வியை நல்லாசிரியரிடத்தே சந்தேகமும் விபரீதமும் அறக் கற்றல் வேண்டும். சந்தேகமாவது இதுவோ அதுவோ என ஒன்றிலே துணிவுபிறவாது நிற்றல். விபரீதமாவது ஒன்றை மற்றென்ருகத் துணிதல். வியாதி வறுமைகள் இல்லாமையும், பொருள், இளமை முதலியவைகள் உண்மையும், கல்விகற்றற்குச் சிறந்த கருவிகள். மிகச் சிறந்த கருவி ஆசிரியருடைய உள்ளத்திலே, அருள் உண்டாகும்படி நடத்தல். ஆதலினுலே, கல்வி கற்கும் மாணுக்கர் ஆசிரியரை விதிப்படி சிரத்தையோடு வழிபட்டே கற்றல் வேண்டும். வழிபாடாவது இன்சொற் சொல்லல், வணங்குதல், உற்றவிடத்துதவுதல் முதலாயின.

கல்வியிலே தேர்ச்சி யடையவேண்டுமாயின் இடைவிடாது கற்றல் வேண்டும். ஒரு நாள் ஊக்கமாகவும் மற்றொருநாள் சோம்பலாகவும் இராமல், எப்பொழுதும் தங்கள் தங்கள் சத்திக்கு ஏற்பக் கல்வியிலே பயிலல் வேண்டும். சோர்வு அடையாமல் நாடோறும் கிரமமாகச் சிறிதாயினும் நன்ருகக் கற்கின்றவர் எப்படியும் அறிவுள்ளவராவர். தாம் அதிக சமர்த்தர் என்று நினைத்து ஒவ்வொரு வேளையில் மாத்திரம் கற்கின்றவர் அதிகமாகத் தேர்ச்சி அடையமாட்டார். மணற் கேணியைத் தோண்டுந்தோறும் ஊற்றுநீர் சுரந்து பெருகிக்கொண்டே வருதல் போல, கல்வியைக் கற்குந்தோறும் அறிவு வளர்ந்துகொண்டே வரும்.

— நாவலர்

சகலவித

இரும்பு, பித்தளைச் சாமான்களும்

பல வர்ண மை வகைகளும்

குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

இன்றே விஜயஞ் செய்யுங்கள்!

சிங்கப்பூர் கம்பெனி

THE MALAYAN TRADING COMPANY

128–130, கே. கே. எஸ். வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 547

- மோட்டோர் வண்டிகள்
- லொறிகள்
- ஸ்கூட்டர்கள்
- எஞ்ஜின்கள்

திறம்படத் திருத்துதல்

அழுத்தமான 'டிங்கர்' வேலைகள்

குறைந்த நேரத்தில் சிறந்த வேலைக்குப் பெயர்பெற்றவர்கள்

**சத்தியபாலன் கராஜ்**

பலாலி வீதி : உரும்பராய்



*With best Compliments from*

**Leyden Industries Ltd.**

MANUFACTURERS OF QUALITY SOCKS & BANIANS

No. 7, Hospital Road,
JAFFNA.

*T'Phone:* 279

# உவந்தெடுக்கும் வைரவிழா ஓங்கிடுக

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள்
முன்னைநாள் தமிழ்ப் பேராசிரியர்

உலகறிந்த பேரறிஞர் பலர்பிறந்த சீரூர்
உண்மைவளர் நூல்கள்பல படைத்தோர்வாழ்ந் துயரூர்
நிலவுலகும் வானுலகும் நீண்டபுகழ்ப் பேரூர்
நிலைகலங்காத் தமிழ்வீரம் நிலைநாட்டும் நிறையூர்
பலகலையும் வளர்த்துநன்கு வாழுமரும் பொருளூர்
பரமனடித் தொண்டுபுரிந் தேத்துதிரு வருளூர்
அலகில்புகழ் யாழ்ப்பாண அன்னைதிரு முகத்தில்
அணிதிலகம் போன்றிலங்கும் உரும்பராய்த் திருவூர். 1

மணிவிழாக் கண்டபல மாண்புடையோர் வாழூர்
வளர்பிறையா யிரங்கண்ட மாபெரியோர் உறையூர்
அணிதிரண்டு சிவநெறியும் தமிழ்நெறியும் வளர்த்தே
ஆங்கிலமும் பிறமொழியும் அளந்தறிந்தோர் சேரூர்
அணுவளரும் விஞ்ஞான சத்தியருட் சத்தி
ஆக்கமென உணர்ந்துகண்ட அருள்பெருகும் நல்லூர்
திணிவளரும் நெஞ்சுடையோர் வாழ்சிறப்பி னாலே
செயல்திறமை பெற்றுயரும் உரும்பராய்த் திருவூர். 2

உண்ணுமுண விற்பருகும் நீரில்உயி ரதனில்
ஓம்பிவளர் தமிழ்வித்தி யாலயத்தி னுயர்வைக்
கண்ணெனவுட் கருத்தெனநல் எண்ணமென வளர்த்துக்
கண்டுகுறிக் கோளதனைக் கொண்டகுதூ கலத்தால்
உண்ணிறைந்த உணர்ச்சியுட னொருங்கினிது கூடி
உவந்தெடுக்கும் வைரவிழாக் கொண்டாட்ட மதிலே
அண்ணிநின்று மானசமாய் அன்பருடன் கலந்தே
ஆசியும்பா ராட்டுமன்பாய்க் கூறியமை கின்றேன். 3

With Best Compliments
from

**Rathi Watch Works**
&
**Stores**
(44, 46, 48, Kasthuriyar Road)

AND

Stanley Furnishing Mart
Stanley Road, Jaffna.

வைரவிழாச் சிறப்புற
வாழ்த்துகின்றோம்!

**ஸ்ரீ ராஜன்ஸ்**
உரும்பராய்

வைரவிழாச் சிறப்புற
வாழ்த்துகின்றோம்!

**பாஸ்கரன் மரக்காலை**
உரும்பராய்
உரிமையாளர்: செ. செல்லோா.

வைரவிழாச் சிறப்படைய
வாழ்த்துகிறோம்!

**பிரகாஸ் ஸ்ரோர்ஸ்**
31, 33, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# சமயத்துறையில் இந்துக் கல்லூரி அதிகாரசபை

**திரு. ந. சபாரத்தினம் அவர்கள்**
யாழ். இந்துக் கல்லூரியின் முன்னைநாள் அதிபர்

'சமயம் கலவாத கல்வி முடத் தன்மை யுடையது, அறிவியல் கலவாத சமயம் குருட்டுத் தன்மை வாய்ந்தது' என்பர் பேரறிஞர் அல்பெர்ட் ஐன்ஸ்டைன், 'அருளியலோடு இயைபில்லாத அறிவியல், மூடநம்பிக்கை பொருந்தியது' என்பர் பேரறிஞர் இராதாக்கிருஷ்ணன்.

'வெறும் அரைகுறை அறிவே இறை யுண்மையை மறுத்துப பேசும்; ஆழ்ந்து நிறைவுற்ற அறிவோ சமய உணர்வில் தலைப்பட்டுத் தழைத்து நிற்கும்' என்று மொழிந்தவர் பிரபல ஆங்கில விஞ்ஞானி பிரான்சிஸ் பேக்கன்.

'மனிதனில் இயல்பாக அமைந்திருக் கும் தெய்வீகத்தை வெளிப்படுத்துவதே சமயம்' என முழங்கியவர் சுவாமி விவே கானந்தர்,

அமெரிக்காவில் நடைபெற்ற சர்வ சமய பாராளுமன்றத்தில் இந்து சமயத் தின் தத்துவத்தை, தனித்துவம் நிறைந்த முறையில் விளக்கி அமெரிக்க மக்களைத் திகைக்க வைத்தவர் சுவாமி விவேகானந் தர். வெற்றிவாகை சூடி நாடு திரும்பும் வழியில், இலங்கைக்கு விஜயம் செய்த போது யாழ்ப்பாணம் வந்த சுவாமிகள், இந்துக் கல்லூரி ஒன்றில்தான் தமது சம யப் பிரசங்கத்தை நிகழ்த்தினர். சுவாமி களின் அரிய கருத்துக்களுக்கமைந்த சூழ் நிலை அக் கல்லூரியில் நிலவிய பெருமை அதைத் தாபித்த சைவ பரிபாலன சபைக் கும், நிர்வாகப் பொறுப்பை ஏற்ற இந்துக் கல்லூரி அதிகார சபைக்குமே உரியது.

மேலே கூறப்பட்ட மாமேதைகளின் கருத்துக்கிணங்கச் சைவ பரிபாலன சபை 1888-ம் ஆண்டு தாபிக்கப்பட்டதென்பது தெளிவு. சட்ட வல்லுனரும் திருவனந்த புரம் உயர் நீதிபதியாகக் கடமையாற்றிய வருமான திரு. தா. செல்லப்பாபிள்ளை அவர்கள், திரு. V. காசிப்பிள்ளை அவர் கள், இந்துக் கல்லூரியைக் கட்டி எழுப் பிய திரு, மு. பசுபதிச் செட்டியார், பிர பல அப்புக்காந்து திரு. சி. நாகலிங்கம் போன்ற இலட்சிய புருஷர்கள் மகா வீரர் கள் மட்டுமல்ல, கல்வி, சமயம் பற்றி ஆழ்ந்த ஞானம் படைத்த தீர்க்கதரிசிகள் என்றே கொள்ளவேண்டும்.

இவர்களின் ஞானம் எங்கிருந்து வந் தது? இவர்கள் சுடர்களானல் இவர்க ளுக்கு மேலே ஒரு சோதி திகழ்ந்தது. ஒவ்வொரு பிள்ளைக்கும் அப் பிள்ளையின் சமய அடிப்படையிற் கல்வி கற்பிக்க வேண்டு மென்ற நீதியை நிலைநாட்ட வந் தவர் ஆறுமுகநாவலர். சைவப் பள்ளிக் கூடங்கள் மருந்துக்கும் கிடையாத அக் காலத்தில், நாவலர் பெருமான் தொடங் கிய இயக்கம் படிப்படியாய்ப் பலம் பெற் றுச் செயற்பட்டது.

வீட்டில் பூசிய திருநீற்றை மிஷன் கல்லூரிக்குப் போகமுன்னரே நெற்றியில் இருந்து நீக்கிவிட வேண்டிய நிர்ப்பந்தம் அக் காலத்தில் ஆங்கிலக் கல்வியைத் தேடி அலைந்த மாணவர்களுக்கு இருந்தது. இந்த நெருக்கடியைத் தீர்க்கவே உடனடியாக ஆங்கிலக் கல்லூரி ஒன்று அவசியமாயிற்று. மனேஜர் திரு. நாகலிங்கத்தின் பொறுப் பில் இருந்த 'Town High School' 'Hindu High School' ஆக மாறி, காலப் போக் கில் யாழ் இந்துக் கல்லூரியாக வளர்ந்து வந்தது. இது ஒரு வீரக் கதை.

சைவ மக்கள் கிறிஸ்து மார்க்கத்தில் சேருவதற்குச் சிறந்த துணையாகவுள்ள மிஷனரிமார் நடாத்திய ஆங்கிலக் கல்லூரி களுக்கும், ஆங்கில தமிழ் வித்தியாசாலை களுக்கும் தலையில் போட்ட அடிதான் யாழ் இந்துக் கல்லூரியும் அதன் கிளைக ளாகிய ஆங்கில தமிழ்ப் பாடசாலைகளும்.

'சோதியே சுடரே சூழொளி விளக்கே' எனச் சிவபெருமானைத் திருப்பெருந்துறையில் விழிக்கின்றார் மாணிக்கவாசக சுவாமிகள். இருள் நிறைந்த எமது சமுதாயத்தின் அவல நிலையை அகற்றி, சைவ மக்கள் தம் பிள்ளைகளைத் தாம் தலைமுறை தலைமுறையாக வழிபட்டு வந்த சிவபெருமானின் அருள் நோக்கால் உருவான உண்மை நெறியில் வளர்க்க உதவி வரும் யாழ் இந்துக் கல்லூரி—அதன் கிளைகளாகிய ஆங்கில பாடசாலைகள் — அவைக்கு ஆதாரமான ஆரம்ப பாடசாலைகளாம். கலைக்கூடங்களைப் பார்த்து நாம் 'சோதியே சுடர்களே சூழொளி விளக்குகளே' என்று இன்று பெருமித மடைவது பொருத்தமாகும்.

கொக்குவில், உரும்பராய், வட்டுக்கோட்டை, காரைநகர், சாவகச்சேரி, தொண்டமனாறு போன்ற பல இடங்களில் பாடசாலைகள் தாபிக்கப்பட்டன. சைவ ஆரம்ப பாடசாலைகள் போதியளவு இல்லாமையால் மிஷன் பாடசாலைகளில் கல்வி தொடங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது, ஆரம்பக் கல்வி சமய அடிப்படையில் அமையாத நிலை ஒரு ஆபத்தான நிலை. முதல் முன்று வருடங்களும் ஒரு மிஷன் பாடசாலையில் படிக்க வேண்டிய கதி எனக்கு நேர்ந்தது. பைபிள் படித்து பரிசு பெற்ற நினைவும் எனது மனதில் பசுமையாயிருக்கின்றது. நல்ல காலம்! நான்காம் வருடம் இந்துக் கல்லூரி அதிகார சபையினர் தொடங்கிய ஆங்கில பாடசாலைக்கு அனுமதிபெற்ற பாக்கியம், ஈற்றில் யாழ் இந்துக் கல்லூரியின் தலைமைப் பீடத்திற்கு வழிகோலியது. என்னே இறைவனின் திருவிளையாடல்!

சூழொளி விளக்குகளில் ஒன்றான, இன்று வைரவிழாக் காணும் உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயம் எத்தனை எத்தனை மாணவர்களைச் சைவசமய சீலர்களாய், நல்ல அறிவாளிகளாய், கல்விமான்களாய் நாட்டிற்கும் தம் சமூகத்திற்கும் அரிய தொண்டினைப் புரியும் அடியார்களாக உருவாக்கியிருக்கின்றது! இன்று சிந்தனைக்குரிய விடயம் இது!

நெருக்கடியில் உதயமான இயக்கம் எதுவும் நெருக்கடி நீங்கிய நிலையில் தனது வலிமை, பெருமையை இழக்க நேரிடுவது இயல்பு. இந்தியாவுக்குச் சுதந்திரம் தேடிக் கொடுத்த இந்திய தேசிய காங்கிரஸ் இன்று படும்பாடு இந்த உண்மைக்குச் சான்று அளிக்கும். எனவே 'அத்திபாரக் கல்வி சமய அடிப்படையில் அமைய வேண்டும்' என்ற பெருநோக்கில் 1915-ம் ஆண்டு உருவான உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயம், இன்று ஒரு சிறந்த கனிஷ்ட வித்தியாலயமாகச் செயற்படுவதில் எவ்வித வியப்பும் இல்லை. தன்னலமற்ற, தியாக சிந்தனையுள்ள தலைமையாசிரியர்களும், சக ஆசிரியர்களும் சமய ஒழுக்க நடையே முக்கிய மென்ற அடிப்படையில் தம் சேவையை ஆற்றியதன் பயன் இது. இதனை மறந்த நாம் இன்று நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளோம்.

இந்துக் கல்லூரி அதிகார சபையினரின் கனவு இன்று வைரவிழாக் காணும் இவ் வித்தியாலயத்தின் வளர்ச்சியில் நனவாயிற்று. அத்துடன் இன்னொரு வெற்றி! சைவமும் தமிழும் இரண்டென்பர் அறிவிலார். தமிழே சைவம் என்ற நிலை இன்று வளர்ந்து வருவது நாமெல்லோரும் போற்றத்தக்கது. இதற்கு அரசு ஆதரவளிக்கின்றது.

விஞ்ஞானத்துக்கும் சமயத்துக்கும் ஏற்படவேண்டிய பொருத்தம் பற்றிய பேரறிஞர்களின் கூற்றுடன், இக் கட்டுரையைத் தொடங்கினேம். இக் கருத்தைச் சாதனை செய்து முன்னணியில் நிற்கின்ற யாழ் இந்துக் கல்லூரி நாவலர் இட்ட வித்து, 1890ஆம் ஆண்டு ஒரு சிறந்த கலைக் கோயிலாகப் பரிணமித்தது. சுவாமி விவேகானந்தர், கலாயோகி ஆனந்தக்குமார சுவாமி, மகாத்மாகாந்தி போன்ற உத்தம புருஷர்களின் ஆசி பெற்ற இக் கல்லூரியின் சாதனை, அதனைத் தாபித்த அதிகாரசபையினரின் சமயத் தொண்டை உலகுக் கெடுத்துரைக்கும்! பேராதனை வளாகத்தில் குன்றக் குமரன் கோயில், பல்கலைக் கழகப் பாடத் திட்டத்தில் 'இந்து நாகரிகம்' என்ற பாடம் இன்று நாம் காணக்கூடியதானுல், இந்துக் கல்லூரி ஒரு காரணப் பெயர் என்பதை நிரூபிக்கும் ஓர் அரிய எடுத்துக்காட்டாகும்.

சமயத் துறையில் இடுக்கண் இல்லாத காலம் என்றுமே இல்லை. ஆகையால் அதிகாரசபையினரின் மகத்துவத் தொண்டை நிலைக்க வைக்கும் வகையில் நாம் என்றும் விழிப்பாயிருப்பது சாலவும் நன்று,

விக்கினம் எதையும் பொடிபடுத்த வல்ல கற்பக விநாயகர், உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயம் தனது பணியை வருங்காலத்தில் தொடர அருள் புரிவாராக.

சுவைத்திட

தித்திக்கும்

உயர்ந்த ரகம்

நிறைந்த சுவை தருவது

'கலா பிஸ்கட்ஸ்'

உரும்பராய்

♣

'Kala Biscuits'

Urumpiray

- பாடசாலை உபகரணங்கள்,
- புதினப் பத்திரிகைகள்

குறைந்த விலையிற் கிடைக்கும்.

◆

**கற்பக விநாயகர் ஸ்ரோர்ஸ்**

பலாலி வீதி :: உரும்பராய்

மின்சார உபகரணங்கள்

மற்றும் பாவனைப் பொருட்கள்

பாடசாலை உபகரணங்கள்

மலிவாகப்

பெற்றுக்கொள்ளலாம்.

**செல்வா ஸ்ரோர்ஸ்**

பலாலி வீதி,

உரும்பராய்.

# ஈழத்திலும் தென்னகத்திலும் தமிழ்க்கல்வி பரப்பிய பெரியார்கள்

## ஆறுமுகநாவலர் காலத்திலிருந்து விபுலானந்த அடிகள் காலம்வரை

பேராசிரியர் கலாநிதி சுப்பிரமணியம் வித்தியானந்தன் அவர்கள்,
இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதனை வளாகம்.

ஆங்கிலேயர் ஆட்சியிற் பல மிஷன்கள் கல்வி விருத்தியில் ஈடுபட்டு வந்தன. ஆனல் அக் கல்லூரிகளில் சைவசமயப் பண்பாட்டடிப்படையிற் கல்வி புகட்டப் படவில்லை. அரசாங்க உத்தியோகத்திஞற் பலர் சமயம் மாறி இக் கல்லூரிகளில் விசேட கல்வி பயின்றனர். ஆட்சிமொழி ஆங்கிலமாயிருந்தமையால் ஆங்கிலக் கல்வியே செல்வாக்குப் பெற்றது. தொடக்கத்தில் அரசாங்கம் ஆங்கிலப் பாடசாலைகளைத் தாபித்து, சில ஆண்டு நடத்தி வந்தது. அவற்றிற் கிறித்தசமய நூலொன்றும் படிப்பிக்கப்படவில்லை. அங்கு சைவ சமயப் பிள்ளைகள் எல்லோரும் திருநீறு பூசிக்கொண்டே படித்து வந்தனர். ஆனல் மிஷனறிமார் துரைமாரைத் தம்வசப் படுத்தி அரசாங்கத்திடமிருந்து அப் பள்ளிக்கூடங்களை எடுப்பித்து அரசாங்கம் அவற்றிற்குச் செலவழிக்கும் பணத்தைத் தங்கள் பள்ளிக்கூடங்களுக்கு ஆக்குவித்துத் தமது சமயப்பிரசாரம் செய்து தமது சமய நூல்களையே படிப்பித்து வந்தனர்.

1842ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ஆம் நாள் யாழ்ப்பாணத்திலுள்ளஇந்துப் பெரியார் பலர் ஓரிடத்தில் ஒன்றுகூடிச் சைவசமய அடிப்படையிற் கல்லூரி ஒன்றை நிறுவ முடிவு செய்தனர். இதன் பயனக ஒக்டோபர் மாதம் 22ஆம் நாள் சைவக் கல்லூரி தொடக்கப்பட்டது. ஆனல் இது போன்ற தமிழ்க்கல்லூரியில் மிஷனறிமார் நிறுவிய கல்லூரிகளுடன் போட்டியிட முடியவில்லை. தமிழ்ப் பள்ளிக்கூடங்களின் நிலை இரங்குதற்குரியதாயிருந்தது. மாணவர் தம் ஆசிரியருக்குச் சிறு ஊதியமும் கொடுக்க இயலாதிருந்தனர். அவர்கள் தாம் பயிலுவதற்குத் தமிழ்ச் சுவடிகள் கிடைக்கப்பெருது அலைந்து வருந்தினர். மிஷனறிமார் நடத்திய பள்ளிக்கூடங்களுக்கு அரசாங்கம் ஒழுங்காகப் பணஉதவி செய்து வந்தது. அப் பள்ளிக்கூட ஆசிரியருக்கு மாதம் மாதம் சம்பளம் தவருமற் கிடைத்தது. அப்பள்ளிக்கூடங்களிற் கற்றுத் தேறிய மாணவருக்கு அரசாங்கம் உத்தியோகம்வழங்கியது. மிஷனரிமார் மாணவர் பலருக்கு உடையும் இலவசக் கல்வியும் அளித்தனர். அவர்களின் கல்விக்குத் தேவையான நூல்களைத் தாமே அச்சடித்து வெளியிட்டனர்.

இந்தச் சூழ்நிலையில் ஆறுமுகநாவலர் தோன்றினர். தமிழ்க் கல்வியும் சைவ சமயமும் வளர்ச்சி அடைவதற்குக் கருவிகள் முக்கிய தலந்தோறும் வித்தியாசாலை தோற்றுவித்தலும் சைவப்பிரசாரம் செய்வித்தலுமேயாம் என உணர்ந்தார். அக் காலத்தே வீழ்ச்சியுற்றுக் கிடந்த தமிழ் மக்களை எழுச்சிபெறச் செய்யவல்ல கருவி தமிழ்மொழியே எனத் தெளிந்தார். ஒவ்வொருவர் உள்ளத்திலும் தமிழ்ப் பற்றும் தமிழ் ஆர்வமும் எழச்செய்ய வேண்டுமென எண்ணினர். மக்களிடம் மொழி உணர்ச்சியை உண்டாக்கி விட்டாற் சமயப்பற்றை எளிதில் வளர்க்கலாமென உணர்ந்தார். எனவே தமிழர் வாழும் இடங்களிலே தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் தோற்றுவிக்க வேண்டுமெனக் கருதினர்.

அழகிய நூல்களை அச்சிட்டு மாணவர்க்களித்து ஆசிரியருக்குத் தக்க ஊதியம் ஈந்து உயர்ந்த பதவிகளில் அமரச் செய்து வரும் பாதிரிமார் கையாண்ட முறைகளைப் பின்பற்றித் தாமும் தொண்டாற்றத்

தொடங்கினுர். முதலில் 1845ஆம் ஆண்டிலே தாமே ஓரிடத்திற் சில மாணவருக்குத் தமிழ் கற்பிக்கத் தொடங்கினுர். தன்னிடம் கல்வி கற்க வரும் மாணவர் வசதியையே கருதி இரவு பகலாகப் பாடங்களைப் போதித்து வந்தார். கைமாருக எவ்வுதவியும் பெருமற் சில ஆண்டுகள் உழைத்து வந்தார். இம் முயற்சியில் வெற்றி கண்டார்.

அனைவருக்கும் கல்வியை ஒரே சமயத்திற் புகட்டும் கல்வி நிலையங்களை ஊர் தோறும் தோற்றுவிக்க வேண்டும் என்ற அவா மிகுந்துகொண்டே வந்தது. எவ்வாறேனும் ஒரு கல்வி நிலையமாயினும் நிறுவ வேண்டுமென உறுதி கொண்டார். அவ்வுறுதியின் பயனுக 1848ஆம் ஆண்டு ஆவணி மாதம் 5ஆம் நாள் யாழ்ப்பாணத்தில் வண்ணுர்பண்ணையிலே சைவப்பிரகாச வித்தியாலை என்னும் பெயருடன் செந்தமிழ்க்கழகம் ஒன்று நிறுவப்பட்டது. ஆறுமுகநாவலரின் மாணவனுகிய சதாசிவம்பிள்ளை அவர்களே இக் கல்வி நிலையத்துக்கு ஆசிரியராகத் தொண்டாற்றினுர். தமிழ்மக்களின் உயிர்நிலை யென்று போற்றுகின்ற சிதம்பரத்திலும் கல்வி நிலையம் ஒன்றினைச் சைவப்பிரகாச வித்தியாசாலை என்னும் பெயரில் 1864ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 28ஆம் நாள் நிறுவினுர். கிறித்தவக் கல்லூரிகளில் ஆங்கிலம் கற்கச் செல்லும் சைவசமயப் பிள்ளைகளைத் தடுக்கும் பொருட்டு 1872ஆம் ஆண்டு தைமாதம் ஒரு சைவஆங்கிலக் கல்லூரியை நிறுவினுர். அடுத்த ஆண்டிற் கோப்பாயிலும் புலோலியிலும் இரு தமிழ்ப் பாடசாலைகளைத் தொடக்கி வைத்தார். அச்சுயந்திரம் நிறுவி மாணவர் கல்விக்கு வேண்டிய நிகண்டு, பாலபாடம், நீதிநூல்கள், சமயநூல்கள் முதலியவற்றை அச்சிட்டு வெளியிட்டார். வண்ணுர்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையிற் சமயக் கொள்கை, ஒழுக்கம் என்னும் இவற்றை மாணவர் கைக்கொண்டு ஒழுகுவதற்குரிய கல்வி புகட்டப்பட்டது. சிதம்பரத்திலுள்ள சைவப்பிரகாச வித்தியாசாலையும் மிக உன்னத நிலையில் இருந்தது. இத்தகைய கல்லூரிகள் வாயிலாக தமிழர் கல்வியை அவர்கள் வாழ்க்கையோடு பிணைத்து வளர்த்து வந்தார் ஆறுமுகநாவலர்.

ஆறுமுக நாவலரைப் பின்பற்றி வேறு பல பெரியோரும் வீமன்காமம், கந்தரோடை, மாதகல், மல்லாகம், வேலணை, காரைதீவு போன்ற இடங்களிலே தமிழ்ப் பாடசாலைகளை நிறுவினர். பாடசாலைகளிற் கல்வி புகட்டுவதற்குத் தகுதிவாய்ந்த ஆசிரியரைப் பயிற்றுவதற்கென ஓர் ஆசிரிய கலாசாலையும் கீரிமலையிற் கைலாசபிள்ளை அவர்களால் நிறுவப்பட்டது. மேலும் அக்காலத்திற் பெருப்பணி செய்துவந்த இந்து வாலிபர் சங்கத்தின் தூண்டுதலினுலே சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் சைவ வித்தியாபிவிருத்திச் சங்கம் ஒன்றினைத் தொடக்கி வைத்தார். அச் சங்கத்தின் பொறுப்பை ஏற்றுச் சைவப்பாடசாலைகளையும் நடத்தி வந்திருக்கின்ருர் வழக்கறிஞர் சு. இராசரத்தினம் அவர்கள்.

ஈழத்திலிருந்து பெரியார் பலர் தென்னிந்தியாவிற்குச் சென்று கல்வி புகட்டி வந்தமையையும் இங்கு குறிப்பிடல் வேண்டும். அவருள் முதன்மையானவர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள். இவர் சென்னையிலுள்ள பிரசிடென்சிக் கல்லூரியிலே தமிழ் விரிவுரையாளராகக் கடமையாற்றினுர். ஆறுமுகநாவலர் யாழ்ப்பாணத்திலிருந்து தென்னிந்தியாவுக்குப் பல தடவைகள் சென்றதுண்டு. அத் தடவைகளில் ஆங்கிருந்த திருவாவடுதுறை ஆதீனம், மதுரைத் திருஞானசம்பந்த ஆதீனம், திருவண்ணுமலை ஆதீனம், கும்பகோண ஆதீனம் போன்ற மடங்களில் உள்ளவர்கள் நாவலரைத் தமது மடங்களுக்கு அழைத்துச் சித்தாந்த நூல்களிலும் இலக்கண இலக்கியங்களிலும் தமக்கிருந்த சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்வர்.

அக்காலத்தில் தென்னகத்திலே சில மடங்களுக்குத் தலைவராகவும் தர்மகர்த்தராகவும் இருந்து இந்துசமயத்தையும் தமிழ்க் கல்வியையும் வளர்த்தவர் ஈழத்தவரே. சிதம்பரத்திலிருந்த கட்டளை மடங்களுள் எட்டு மடங்கள் யாழ்ப்பாணத்து மடங்கள். அம் மடங்களுக்குத் தலைவராக இருந்தவர் யாழ்ப்பாணத்தவர். திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம், திருவண்ணுமலை ஆதீனம் போன்ற ஆதீனங்களிற் பண்டைக்காலம் முதற் தம்பிரான்களாய் இருந்தவர்களுட் பலர் யாழ்ப்பாணத்தவர்.

திருகோணமலையைச் சேர்ந்த கனக சுந்தரம்பிள்ளை அவர்களுக்கும் இந்தியாவிற் பெருமதிப்பு இருந்தது. சென்னை பச்சை யப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் கந்தசுவாமி முதலியார் தமிழ்ப் பண்டித மணி திருநாவுக்கரசு முதலியார் முதலி யோர் இவரிடம் கல்வி கற்றவர். இவர் மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வுக்காரருள் ஒருவராகவும், கிறித்தவக் கல்லூரியிலும் பச்சையப்பன் கல்லூரியிலும் தமிழ்த் தலை மைப் புலவராகவும் இருந்தார்.

இலக்கணக் கொட்டர் என அழைக் கப்பட்ட முருகேசு பண்டிதர் தென்னாட்டிற் சிதம்பரம், கும்பகோணம், சென்னை, திருப்புற்றூர் முதலிய இடங்களிலே தமி ழாசிரியராக இருந்து தமிழ்க் கல்வியை வளர்த்து வந்தார். வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை வேதாரணியம், தேவகோட்டை முதலிய இடங்களிற் சில காலம் வாழ்ந்து தமிழ்க் கல்வியைப் புகட்டி வந்தார். இந்தியாவிலுள்ள பலர் இவரிடம் கற்றனர்.

கோப்பாயைச் சேர்ந்த சபாபதி நாவ லர் அக்காலத்திற் கல்வியிற் பெரிதும் சிறந்து விளங்கினர். ஆறுமுகநாவலர் சிதம் பரத்தில் தாம் நிறுவிய சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு இவரைத் தலைமை ஆசி ரியராக அனுப்பினர். பின்னர் திருவாவடு துறை ஆதீன வித்துவ சிகாமணியாக விளங்கினர். நாவலர் என்ற பட்டமும் இவருக்கு அவ்வாதீனத்தால் அளிக்கப் பட்டது. இவர் பலகாலம் சென்னையில் வாழ்ந்து தமிழையும் சைவத்தையும் வளர்த்து வந்தார். தமிழ் நாட்டிலுள்ள மடாதிபதிகளும் கோயில் அதிபதிகளும் இவரைப் புகழ்ந்து போற்றினர்.

மேலைத்தேய கலைகளைத் தமிழில் அறிவு றுத்தி விஞ்ஞானத்தையும் செந்தமிழாய்த் துய்க்கத் துணைசெய்து, உருவங்கூடத் தெரி யாதவாறு மறைந்து கிடந்த பழைய யாழின் நுட்பங்களை நுணுகி ஆராய்ந்து வெளியிட்டு யாழ் நூலாசிரியர் என உலகப் புகழ்பெற்ற உயர்திரு. விபுலானந்த அடிகள் தமிழ் நாட்டிலே தமிழ்ப் பேராசிரியர் என்ற பதவியினை முதன்முதலாகப் பெற்ற பெருமைக்குரியவர். மட்டக்களப்பைச் சேர்ந்த காரைதீவு என்னும் பதியைப் பிறப்பிடமாகக் கொண்ட விபுலானந்த அடிகள், அண்ணாமலையிற் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டபோது அண்ணாமலைச் செட்டி யார் அழைப்பை ஏற்று 1931ம் ஆண்டில் அப்பல்கலைக் கழகத்தின் முதலாவது தமிழ்ப் பேராசிரியராகப் பதவி வகித்தார். இந்தியாவிலுள்ள பல்கலைக் கழகங்களிலே தமிழ்த் துறைக்குப் பேராசிரியப் பதவி முதன்முதல் அமைக்கப்பெற்றது அண்ணா மலைப் பல்கலைக் கழகத்திலேயே. எனவே பாரத நாட்டின் முதற்றமிழ்ப் பேராசிரிய ராக நியமிக்கப்பட்ட சிறப்பு ஈழத்து விபு லானந்த அடிகளைச் சாரும். பாரதியின் பாடல்களைத் தமிழ்ப் பேசும் மக்களிடத் துப் பரவச்செய்த பெருமை அடிகளாரைச் சாரும்.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சித்துறை தொடர்பாக 1938ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு வில் விபுலானந்த அடிகளுக்குச் சிறப்பிடம் கொடுக்கப்பட்டது. பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சிபற்றி விரிவான ஒரு திட்டத்தை வகுத்துக் கொடுத்தவரும் இவரே. சென்னைச் சைவ சித்தாந்த மகாசமாஜம் திருவண்ணாமலையில் 1935ஆம் ஆண்டு மார்கழித் திங்களில் ஆண்டுவிழா நடத்திய போது அம் மகாநாட்டுக்குத் தலைமை தாங்கியவர் ஈழத்து விபுலானந்த அடிகளே; தமிழ் மொழியையும், தமிழ்க் கல்வியையும் பேணி வளர்க்கும் நோக்கத்தோடு நிறுவப் பட்ட கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் 22ஆவது ஆண்டு நிறைவை மாநாடாக நடத்தியபோது அம் மகாநாட்டுக்குத் தலைமை தாங்கிச் சிறப்பித்தவரும் அடிக ளாரே. 1942ஆம் ஆண்டு ஆவணித்திங்கள் முதல்நாள் மதுரைமா நகரிலே தொடங் கிய முத்தமிழ் விழாவில் இயற்பகுதிக்குத் தலைமைதாங்கிச் சிறந்த விரிவுரை நிகழ்த் தியவர் விபுலானந்த அடிகளே.

தமிழ்க்கல்வி விருத்திக்கு வேண்டிய கலைச்சொற்கள் பிறப்பதற்குச் சிறந்த தொண்டாற்றிய பெருமையும் விபுலானந்த அடிகளுக்குரியது. தமிழ்ச்சொல்லாக்கக் கழகம் உருவாக்கிய சொற்களை ஆராய்ந்து முடிவுகட்டுவதற்காக 1933ஆம் ஆண்டிற் சென்னையிற் கூட்டப்பட்ட மகாநாட்டுக்குப் பொதுத் தலைவராக அடிகளார் தலைமை தாங்கி, ஆக்கப்பட்ட கலைச்சொற்களை

ஆராய்ந்து வேண்டாதவற்றை விடுத்தும் புதியனவற்றைச் சேர்த்தும் கலைச்சொற்கள் என்ற நூலைத் தமிழ் உலகிற்கு அளித்தனர்.

இவ்வாறு பலவகையில் இந்தியாவில் ஈழத்திற்குப் புகழ் ஈட்டிக் கொடுத்த விபுலானந்த அடிகள் கிழக்கிலங்கையின் ஆறுமுகநாவலராகவும் விளங்கினுர். சைவத்தையும் தமிழையும் இருகண்மணிகளாகப் போற்றி வளர்த்த நல்லூர் ஆறுமுகநாவலரிடத்து ஒரு தனிப்பட்ட மதிப்பு அடிகளாருக்கு இருந்தது. 1925ம் ஆண்டு கிழக்கிலங்கையின் இராமக்கிருஷ்ண மிஷன் பாடசாலைகளின் முகாமைக்காரப் பதவி அடிகளாரிடம் ஒப்படைக்கப்பட்ட காலத்திலிருந்து அடிகளார் கிழக்கிலங்கையின் ஆறுமுகநாவலராகத் திகழ்ந்தார். கீழ் மாகாணத்தில் அக்காலத்திற் கல்வி நிலையங்களை நடத்தி வந்தவர்கள் மெதடிஸ்ற் மிஷனையும் கத்தோலிக்க மிஷனையும் சேர்ந்த பாதிரிமாரே. கிறித்தவரால் நடாத்தப்பட்ட இப்பாடசாலைகளிற் குறித்த சமய அடிப்படையிலேயே கல்வி புகட்டப்பட்டது. இக்குறையை நீக்கும் நோக்கமாக ஆறுமுகநாவலரை முன்மாதிரியாகக்கொண்டு சைவத் தலங்களில் இராமகிருஷ்ண மிஷன் பாடசாலைகளை நிறுவினர். அவற்றுட் காரைதீவு சாரதா வித்தியாலயமும் கல்லடி உப்போடை சிவானந்த வித்தியாலயமும் முதன்மை பெற்று விளங்கின.


விபுலானந்த அடிகள் பிறந்து வளர்ந்த காரைதீவில் இராமகிருஷ்ணரின் மனைவி சாரதாதேவியின் பெயரால் பெண்களுக்கென ஒரு கல்லூரி அடிகளாரால் 1925ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இன்று இக் கல்லூரி கிழக்கிலங்கையிலே தமிழ் மொழியையும் பெண் கல்வியையும் வளர்க்கும் சிறந்த கல்வி நிலையமாகத் திகழ்கின்றது.

கிழக்கிலங்கையின் சாந்திநிகேதனம் என விளங்குவது சிவானந்த வித்தியாலயமாகும். மட்டக்களப்பிற் சைவசமயம் தழைக்கவேண்டுமாயின் ஓர் ஆங்கிலக் கல்லூரியாயினும் நிறுவப்படவேண்டும் என உணர்ந்த அடிகளார், கதிர்காமத்தம்பி உடையார், சபாபதிப்பிள்ளை உடையார் ஆகியோர் உதவியுடன் 1926ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 5ஆம் நாள் இக்கல்லூரியை ஆரம்பித்தார். தம் குருநாதராகிய சிவானந்தரின் பெயரை இக் கல்லூரிக்கு இட்டு அதனை இயங்கவைத்தார். பண்டிதராகவும், பயிற்சிபெற்ற ஆசிரியராகவும், விஞ்ஞானப் பட்டதாரியாகவும், ஆங்கில இலக்கிய அறிஞராகவும் விளங்கிய விபுலானந்த அடிகளே இவ் வித்தியாலயத்தின் தலைவராகச் சிலகாலம் இருந்து பலதுறைகளிலும் முன்னேற்றம் அடையச் செய்தனர். ஆங்கிலப் பாடசாலையாக விளங்கியபோதும் இக் கல்லூரியிலே தேசிய உடையும் தேசியக் கலையும் சிறப்பிடம் பெற்றன. தமிழ் இலக்கண இலக்கியங்களைச் சிறப்பாகக் கற்றுக்கொடுக்கப் புலவர் வகுப்புத் தொடக்கப்பட்டது. சம்ஸ்கிருத வகுப்பும் உடன் நிறுவப்பட்டது.

விபுலானந்த அடிகள் துறவியாக முன், மானிப்பாய் இந்துக்கல்லூரியின் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றியதும் இங்கு குறிப்பிடற்குரியது. 1920ஆம் ஆண்டு இப் பதவியை ஏற்றுத் தமிழரின் கல்விக்காக உழைத்தார். அக்காலத்திலே தமிழ்மொழியின் வளர்ச்சிக்காகப் பல ஆக்கவேலைகளைச் செய்து யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தைச் சீரான முறையிற் புதுக்கி அமைப்பித்தார். பிரவேச பண்டிதத் தேர்வு, பாலபண்டிதத் தேர்வு, பண்டிதத் தேர்வு ஆகிய தேர்வுகளை ஏற்படுத்தித் தேர்வு முதல்வராகவும், மேன்மையான உறுப்பினராகவும் விளங்கினர். இப் பெரியார் அன்று புதுக்கி அமைத்த ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம், ஈழநாட்டிற் பல பண்டித மணிகளை உருவாக்கியுள்ளது. திருகோணமலையில் உள்ள சைவசமய மக்களுக்கென ஓர் ஆங்கிலக் கல்லூரி அமைப்பதற்கு 1927ஆம் ஆண்டில் அடிகளார் அத்திவாரக்கல் நாட்டினர். அதன் தலைமையாசிரியராகச் சிலகாலம் அடிகளார் தொண்டாற்றினர்.

இவ்வாறு நாவலர் சென்ற வழியிற் பல சைவசமயக் கல்லூரிகளை நிறுவியும், கொண்டு நடத்தியும், தலைமையாசிரியராகப் பதவியேற்றுக் கல்வி புகட்டியும், ஈழத்துத் தமிழரின் கல்வியை விருத்தி செய்த இப் பெரியார் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியராகவும் தொண்டாற்றினர். தமிழகத்து முதற் றமிழ்ப் பேராசிரியர் என்ற சிறப்பைப் பெற்ற விபுலானந்த அடிகளுக்கு ஈழத்து முதற் றமிழ்ப் பேராசிரியர் என்ற பெருமையும் உண்டு.

## உரும்பராய் சைவத் தமிழ் வித்தியா




1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை கல்



6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை கல்

சைவத் தமிழ் வித்தியாலய மாணவர்கள்



ல் 5ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவர்கள்



ல் 9ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவர்கள்

# கல்வித்துறையில் சமய மறுமலர்ச்சி

திரு. கி. லக்ஷ்மண ஐயர் அவர்கள்,
வித்தியாதிபதி, கல்வி அமைச்சு

I. உலக நாடுகள் அனைத்துள்ளும் நமது நாடாகிய இலங்கையில் மட்டுமே சமயபாடம் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் கட்டாய பாடமாகப் போதிக்கப்பட்டு வருகின்றது. சமயப் பெருமை பெற்ற இந்திய உபகண்டத்திலேகூட, ஒவ்வொரு மாணவனுக்கும் அவனவனுடைய சமயம் பள்ளிக்கூடங்களிலே கட்டாய பாடமாகப் போதிக்கப்படுவதில்லை. சமயக்கல்விக்கு உலகில் வேறு எங்குமே கொடாத அளவு முதன்மையை நம் நாடு கொடுத்திருப்பதைப் பலர் அறியாமலிருக்கலாம். சமயக் கல்விக்கு நம் நாடு கொடுத்திருக்கும் முக்கியத்துவத்தை நாம் வியந்து பேசுகிறோம். அதைப்பற்றிப் பெருமைப்படுகிறோம்; மகிழ்ச்சியுமடைகிறோம்.

சமயக் கல்வியைக் கட்டாயப்படுத்தியமைபற்றிப் பெருமை பேசும் அதே சமயத்தில், நாம் ஆழ்ந்து சிந்திக்கவேண்டிய முக்கியமான விஷயமும் ஒன்றிருக்கின்றது. சமயக் கல்வியின் நோக்கம் என்ன? அந்த நோக்கம் எவ்வளவுதூரம் கைகூடிவருகின்றது என்பதே நாம் சிந்திக்கவேண்டிய முக்கிய விஷயம். ஏனைய பாடங்கள் பலவும் மதிநுட்பம், செயற்றிறன் ஆகியவற்றை விருத்திசெய்யவே பெரும்பாலும் பயன்படும். ஆனல் சமயபாடத்தின் நோக்கம் நேர்மை, தியாக சிந்தை, பொதுநலம் பேணல் போன்ற அருங்குணங்களை வளர்த்து உயர்வை உருவாக்குவதேயாம்.

இந்த அடிப்படையிலே நோக்கும்போது சமய பாடத்தைக் கட்டாய பாடமாகப் போதித்துவரும் நம் நாட்டின் ஒழுக்க நிலை என்ன? கட்டாய சமயக் கல்வியின் விளைவாக நம் நாட்டு ஒழுக்க நிலை எவ்வளவு தூரம் உயர்ந்துள்ளது? சமயக் கல்வியை முறையாகப் போதியாத நாடுகளிலே நேர்மை முதலிய நற்பண்புகள் அதிகமாகக் காணப்படுகின்றன எனவும், சமயத்தைக் கட்டாய பாடமாகப் போதித்து வரும் நாட்டிலே நேர்மையீனங்களும் வன்செயல்களுமே அதிகமாகக் காணப்படுகின்றன எனவும் சிலர் கருதுகின்றனர். இக் கருத்திலே ஓரளவாவது உண்மையிருக்குமாயின் இது பெரும் வியப்புக்கும் வேதனைக்குமுரியது. இதற்குரிய காரணங்களை ஆராய வேண்டியது மிக அவசியம். காரணங்கள் பலவாயிருக்கலாம். பல கோணங்களிலிருந்தும் ஆராயவேண்டியனவுமாகலாம். யாவற்றையும் இங்கு ஆராய்வது இலகுவான செயலன்று. இரண்டொன்றை மட்டும் இங்கு குறிப்பிடுவோம்.

சமயபாடம் கற்பிப்போர் அப் பாடத்தைக் கற்பிப்பதன் நோக்கத்தைப் பூரணமாக உணர்ந்துள்ளனரா என்பது முதலில் ஆராயப்படவேண்டும். இதுவரை சமய பாடம் பெரும்பாலும் ஒரு பரீட்சைப் பாடமாக மட்டுமே கற்பிக்கப்பட்டு வருகின்றது. சமய நூல்களின் பெயர்கள், அவற்றை இயற்றியவர்களின் பெயர்கள், சமயாசாரியர்களின் பெயர் விபரங்கள், அவர்கள் பாடிய பாசுரங்களின் விபரங்கள் போன்றவற்றை மாணவன் மனனம் பண்ணச் செய்து, பரீட்சையில் அவற்றை எழுதச் செய்வதே முக்கிய நோக்கமாகக் கருதப்பட்டு வந்துள்ளது. உயர்ந்த லட்சியங்களும், கருத்துக்களும் மாணவனுடைய உள்ளத்திலே சுவறவும் பதியவும், அவற்றின்மூலம் அவனது மனப்பாங்கு உயரவும், வாழ்வு உயரவும் வழி செய்வதே முக்கிய நோக்கமென்பது போதிய அளவு உணரப்பட்டதாகத் தெரியவில்லை. இவை யாவற்றையும் கருத்திற் கொண்டே கல்வி அமைச்சு சமய பாடங்களைக் கற்பிக்கும் நோக்கத்தை, அதிக பயனுள்ளதாக்கவும் அதற்கேற்ப பாடநூல்களை எழுதும் முறை, பயிற்றும் முறை, பரீட்சிக்கும் முறை ஆகியவற்றிலே படிப்படியாகப் பெருமாற்றங்களைச் செய்யவும் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

II. சமயக் கல்வித் துறையிலே இன்னுமொரு பெரும் திருப்பமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுவரைகாலமும் ஒரு சமயத்

தைப்பற்றி மற்றச் சமயத்தவர்கள் தவருன கருத்துள்ளவர்களாகவும் உதாசீன மனப் பாங்குள்ளவர்களாகவுமே பெரும்பாலு மிருந்து வந்திருக்கின்றனர். ஒருவரது சமயம், சமய விழாக்கள் ஆகியவற்றின் அடிப்படைத் தத்துவங்களை மற்றச் சமயத் தவர்கள் ஓரளவாவது சரியாக விளங்கிக் கொள்ள வழிசெய்வதே இந்த நிலையை நீக்குவதற்கும் இதன் விளைவாக எல்லாச் சமயங்களுக்கிடையேயும் நன்மதிப்பு, நல் லெண்ணம், நல்லிணக்கம் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கும் தக்க வழி எனக் கருதிய அமைச்சு ஒரு சமயப் பாட நூலிலே மறு சமயங்களைப் பற்றியும் சில விளக்கக் கட்டுரைகளைச் சேர்க்க ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

III. சமயக் கல்வித் துறையிலே கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ள மற்றுமொரு முக்கிய நிகழ்ச்சி சென்ற இரண்டு மூன்று ஆண்டுகளாக நடைபெற்று வரும் பொதுக் கருத்தரங்குகளாகும். எல்லாச் சமய பாட ஆலோசனைச் சபையினரும் சம்பந்தப்பட்ட சிரேஷ்ட ஆசிரியர்களும் ஒருங்குசேர்ந்து கருத்தரங்குகளை நடத்துவதற்கு அமைச்சு ஒழுங்கு செய்து வந்துள்ளது. இவற்றின் விளைவாக மூன்று பெரும் நன்மைகள் ஏற் பட்டுள்ளன எனக் கொள்ளலாம்.

(1) ஒரு சமயத்தவருக்கு மற்றச் சமயத் தவர் தம்தம் சமய அடிப்படைகளை விளக்கிச் சொல்லும் வாய்ப்புகள் ஏற் படுத்தப்பட்டன. இதன்விளைவாகச் சமயங்களுக்கிடையே நல் விளக்கமும் பரஸ்பர மதிப்பும் ஏற்பட வழி கோலப்பட்டுள்ளது.

(2) இதுவரையும் ஒருவர்க்கொருவர் தம்மைப் பெரிதும் அந்நியராகக் கருதிவந்த பல சமயத்தவர்களும் ஒருங்கு உறையவும், ஒருங்கிருந்து உண்ணவும், கலந்துரையாடவும், வாய்ப்புகள் ஏற்பட்டமையால் அவர் களுக்கிடையேயிருந்த மனத்திரைகள் சிறிது சிறிதாக அகலவும், அந்நி யோன்னியம் ஏற்படவும் இக் கருத் தரங்குகள் பெரிதும் பயன்பட் டுள்ளன.

(3) நவீன உலகிலே சமய பாடங் கற்பிப் பதிலே எல்லாச் சமயங்களுக்கும் பொதுவான பிரச்சினைகள் பல உள் ளன. இவை பெரும்பாலும் விஞ்ஞான உலகினுல் எழுப்பப்படுவன. சமயத் துக்கு மாருனவர்களும், சமயமே தேவையில்லை என்பவர்களும் சமயங் கள் எல்லாவற்றுக்குமே எதிரான ஆட்சேபனைகள் பலவற்றைக் காலத் துக்குக்காலம் எழுப்புகின்றனர். இவற்ருல் ஏற்படும் எதிரொலிகள் குறிப்பிட்ட ஒரு சமயத்தைச் சேர்ந்த மாணவர்கள் மத்தியில் மட்டுமன்றி, எல்லாச் சமய மாணவர்கள் மத்தியி லும் எழக்கூடியவை. இத்தகைய பொதுப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும், அத் தீர்வுக்காகக் கையாள்வதற்கேற்ற வழிவகைகளைப் பற்றிக் கலந்தாலோசிப்பதற்கும் இப் பொதுக் கருத்தரங்குகள் நன்கு பயன்படுகின்றன.

IV. ஏனைய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் அப்பாடங்களிலே ஏதாவ தொரு பரீட்சையிலாவது சித்தியெய்தி யிருத்தல் வேண்டும் என்பது நியதி. குறிப் பாக இந்துசமய பாடத்தைப் பொறுத்த மட்டில் அத்தகைய நியதி எதுவும் அனுட் டிக்கப் படுவதில்லை. இந்துசமயத்திலே எதுவித தகைமையோ தேர்ச்சியோ பெருத வர்களும் பல சந்தர்ப்பங்களிலே இந்து சமயம் கற்பிக்க நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குறையை நீக்குவதற்கான வழிவகைகளைச் செய்வதற்கும் கல்வி அமைச்சு ஆரம்பித்துள்ளது. இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகத்திலே இந்து சமயத்திலும், இந்துப் பண்பாட் டிலும் பயிற்சிகள் அளிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. பட்டதாரிகளுக்கு இந்துப் பண்பாட்டிலே 'டிப்ளோமா' (Post Graduate Diploma in Hindu Civilization) வழங்கவும், பட்டம் பெருத ஆசிரி யர்களுக்கு இந்துசமயப் பயிற்சிச் சான் றிதழ் (Certificate in Hinduism) வழங்கவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது. இவற்றுள் பட்டதாரி டிப்ளோமா வகுப்பு ஆரம்பிக்கப் பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இப் பயிற்சிகளின் விளைவாக எதிர்காலத் தில் இந்து சமயத்திலும், இந்துப் பண் பாட்டிலும் தேர்ச்சி, திறமை, ஈடுபாடு ஆகியன பொருந்திய ஆசிரியர்கள் பலர் உருவாவதற்கு இடமேற்பட்டுள்ளது.

இவை தவிர இவ்வாண்டில் சைவசமய ஆசிரியர்களுக்கு மூன்றுமாத காலத் துரிதப் பயிற்சி யொன்றும் கல்வி அமைச்சினுல் ஒழுங்குசெய்யப்படுகின்றது.

அறுசுவை நிறைந்த போசனங்கள்
தித்திக்கும் சிற்றுண்டிகள்
சிறந்த பானங்கள்

**இன்றே விஜயஞ் செய்யுங்கள்!**

விசேட ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்

# இராமநாதன் கபே

சந்தி,

உரும்பராய்.

● படங்களுக்குப் பிறேம் போடுதல்

● சிறந்த ரகக் கண்ணாடிகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள
ஒருமுறை விஜயஞ் செய்யுங்கள்.

**Jazeema Picture Palace**

— GLASS DEALERS —

**222, K. K. S. Road**

**JAFFNA.**

● பரிசுத்தம்

● ருசி

ரமணீயமான
சைவ ஹோட்டல்

**மலாயன் கபே**

36, 38, பெரியகடை,
யாழ்ப்பாணம்

எப்பொழுதும் நீங்கள் விரும்பும்
தங்க, வைர நகைகளை

திருப்தியுடன் பெறுவதற்கு
உகந்த இடம்

**ராணி ஆபரண மாளிகை**

63, கன்னாதிட்டி. R. G. பில்டிங்
யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 7544

UNIV... JAFFNA
LIBRARY

# சமயக் கல்வி

**கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள்,**
இந்து நாகரீகத்துறைத் தலைவர்,
இலங்கைப் பல்கலைக் கழக யாழ். வளாகம்.

எங்கள் பாரதநாட்டுப் பாரம்பரியத்தில் சமயமும் வாழ்க்கையும் பின்னிப் பிணைந்திருப்பது போன்ற நிலையை வேறெங்கணும் காண்டலரிது. வாழ்க்கையுடன் தொடர்புபட்டு விளங்கும் ஒவ்வொன்றும் உலகில் அழியாது தொடர்ந்து விளங்கும் வாய்ப்புப் பெற்றதாகும். இக்காரணம் பற்றிச் சமயம், பாரதப் பண்பாட்டு வழிவந்த எங்களிடை என்றுமே மறையாது நிரந்தரமாகநிலவவல்ல வாய்ப்பினை உடையதாக விளங்குகின்றது.

எங்கள் வாழ்க்கையில் சமயத்தொடர்பு பெறாத நிகழ்ச்சிகளே கிடையா என்று வற்புறுத்திக் கூறலாம். எனவே, சமயம் எங்கள் பாரம்பரியத்தில் நிலையான இடத்தை என்றும் வகித்து வருகின்றது.

தாயின் கருவில் புகுதல் எனப்படும் கருப்பாதானத்தைத் தொடக்கமாகக் கொண்டு இறக்கும் வரை வரிசையாக நிகழவேண்டிய வாழ்க்கை நிகழ்ச்சி வரிசைகள் யாவுமே இலௌகிகமானவை. இருந்தும், இவை சமயச் சார்பு உடையவாய, சமயக் கிரியைகளாக, சமய சமஸ்காரங்களாக் விளங்கக் காண்கின்றோம். எனவே, வாழ்க்கையில் நிகழும் முக்கிய நிகழ்ச்சிகளான கர்ப்பாதானம், பும்சவனம், சீமந்தம், சாதகருமம், நாமகரணம், அன்னப்பிராசனம், சௌளம், உபநயனம்— தீட்சை, விவாகம் முதலிய வாழ்க்கை நிகழ்ச்சிகள் யாவும் சமய நிகழ்ச்சிகளாகப் பரிணமித்துள்ளன. இவ்வாறே இறந்தவுடனும் அதைத் தொடர்ந்தும் நிகழும் நிகழ்ச்சிகளும் இதே நிலையினவாய் விளங்குகின்றன. இவ்வாறு வாழ்க்கை முழுவதுமே சமயத் தொடர்பு கொண்டதாய் விளங்குவதால் தெய்வநினைவு ஏற்படுவதும் தெய்வத் திருவருட்டுணையை நாடுவதும் எங்களிடை இயல்பாகவே விளங்கும் ஒழுகலாறுகளாகும்.

தெய்வீக அடிப்படையற்ற வாழ்க்கை வாழ்பவர்கள், பயனற்ற வாழ்வு வாழுபவர்களாவர். குறிக்கோளற்றதான இவ்வாழ்க்கை எவ்வாறு உய்வுதரவல்லது? அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு உயரிய குறிக்கோள்களைச் சமய நூல்கள் வகுத்துள்ளன. இந் நான்கு பேறுகளையும் ஈட்டித்தரவல்ல வாழ்க்கை, பண்பும் பயனும் உடையது; உயர் இலட்சியத்தைக் கொண்டமைவது. இந்த நால்வகைப் பேறுகளைப் பெறும் உபாயங்களை எடுத்துரைக்கும் நூல்கள் சமய நூல்களே. வெறும் இலௌகிக உயர்வைத் தரவல்ல கல்விக்கு நிரந்தரமான இடம் கிடையாதென்பதை இலகுவாக நாம் உணர்ந்து கொள்ளலாம். வெறும் இலௌகிகமாயமையும் பயனையும் உயர்வையும் தரவல்ல கல்வி நிரந்தர இடம்பெறாது காலத்துக்குக் காலம் சூழ்நிலைக்கு ஏற்ப வேறுபட்டதான பெறுமதியுடையதாக இருப்பதைக் கண்ணாரக் காண்கின்றோம். மருத்துவத்தில் ஒருவனை வல்லவனாக உயர்த்தி வைக்கும் மருத்துவக் கல்வி இன்று மேம்பட்ட நிலையில் விளங்கலாம். நாளை இந்நிலை மாறிப் பொறியியற் கல்வி தலைசிறந்து விளங்கலாம். விவசாயக் கல்வி ஒன்றே உயர்தரமுடைய கல்வி எனக் கூறவேண்டிய சூழ்நிலையும் ஒருகால் உருவாகலாம். இவ்வாறே காலத்துக்குக் காலம் வெவ்வேறு கல்வி உயர்நிலைநிற்கும் முறையே 'இம்மையில் அவ்வப்போது மாறிமாறி உயர்வு தரும் உலகியற் கல்வி நிலைபேறற்றது.' என்ற உண்மையை நமக்கு எளிதில் உணர்த்தி நிற்கும் மருத்துவக் கல்வியில் மேம்பட்டவராயினும் பொறியியல் வல்லுநராயினும், விவசாயத்தில் திறமை மிக்கவராயினும் தத்தம் துறைகளில் (அவை பெறும் உலகியல் ரீதியில் அமைந்த காரணத்தால்) நிறைவு காணாதவர்களாய்

உலகியல் அனுபவத்திற்கு அப்பாற்பட்டதாய் ஆன்மிக முன்னேற்றம் பயக்கவல்லதாய் விளங்கும் நான்கு பேறுகளையும் ஈட்டித்தரவல்லதாய் கல்வியை ஒருமுகமாக நாட நேரிடும்.

இத்தகைய சமயக் கல்விப் பேற்றைப் பெறுவதற்கு இருவகைப் பயிற்சிகள் வேண்டப்படுவன. ஒன்று நூற் பயிற்சி. சமய நூல்களின் அறிவைப் பெருக்குவதனுல் சமயக் கல்வியை நூல்களின் வாயிலாக ஈட்டுவதனுல் இக் கல்விச் செல்வத்தைத் தேடிச் சேமித்து வைத்துக் கொள்ளலாம். மற்றப் பயிற்சி சமயானுட்டானங்களைக் கடைப்பிடித்தல். நூற்பயிற்சி வெறும் ஏட்டுச்சுரைக்காயாகவே இருக்கும். நூல்கள்தரும் அறிவைச் செயற்படுத்தி அவ்வறிவை அனுபவத்திற் கொண்டுவரும் முகமாகச் சாதனை செய்யும்பொழுது இரண்டாம் வகைப் பயிற்சியைப் பெறலாம். சமயக்கல்வியின் நிறைவு இப் பயிற்சியிலேயே தங்கியுள்ளது. இதற்குக் குருகுலவாசமே சிறந்த வழி.

ஈழநாட்டில் சமயக் கல்வி உலகில் ஏனைய நாடுகளில் காணப்படுவதைக் காட்டிலும் சிறந்த நிலையில் விளங்குகின்றது. பள்ளிக்கூடங்களில் சமயக் கல்வி கட்டாய பாடமாக இடம்பெற்றுள்ளது. இது வற்புறுத்தப்படுவதனுல் ஒவ்வொரு மாணவனும் பள்ளிக்கூடத்தில் கல்விகற்கும் காலத்தில் சமய அறிவை வளர்க்கும் வாய்ப்பைப் பெறுகிருன் — இக் கல்வி அவனது சமய அறிவை வளர்ப்பதற்கு மட்டுமே பயன் பெறுகின்றது. சாதனைகள் மூலம் அநுபவத்திற்கு வரும் வாய்ப்புக் கிடையாததனுல் சமயக் கல்வி பாடசாலைகளில் நிறைவு பெறுவதில்லை.

பாடசாலைகளில் வழங்குவதற்கு வாய்ப்புப் பெருத சமய சாதனைகளை மாணவர்கள் பெறக்கூடிய இடங்கள் இரண்டேயிரண்டுஉள. ஒன்று பெற்ருேர்கள் அல்லது பாதுகாவலர்களுடன் வசிக்கும் வீடு. மற்றது அவர்கள் கிராமத்தில் இருக்கும் கோயில். வீட்டில்நிகழும் வீட்டுக் கிரியைகள், கோயிலில் நிகழும் கோயிற் கிரியைகள், அவற்றில் மனமார்ந்த ஈடுபாடு ஆகியன மாணவர்களுக்குச் சரியை கிரியை ஆகிய இருநெறிகளிற் பயிற்சி தருவன. இடைப்பட்ட யோக நெறியிலும் ஈடுபாட்டை இப்பயிற்சி நெறிகள் அடைப்பிக்கும். நுண் கல்வி மேற்கூறிய பயிற்சிகளால் சித்தசுத்தியடைந்தோரை ஞான நெறியில் உரியவாறு புகவைக்கும். சாதனை குன்றிய நூற்கல்வி பாடசாலைகளில் ஓரளவு பெறவே வாய்ப்பு இன்றைய சூழ்நிலையில் இருக்கின்றது. குருகுலவாசமும், குருவருளுமே ஞான வழியில் உயரிய நிலைக்கு மாணவர்களை இட்டுச்செல்லவல்லன. இவையே இன்று பெரிதும்வேண்டப்படுவன.

சமய அறிவைச் சரித்திரப் பின்னணியில் ஓரளவிற்கு வைத்து வளர்ப்பதும் ஒரு வகைச் சமயக் கல்வியாக இன்றைய கல்வித் திட்டத்தில் இடம்பெற்றுள்ளது. வாழ்க்கை நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்திக் கூறுதல், சமய வாழ்க்கையை இயல்பாகப் படம்பிடித்துக் காட்டுதல், சமய வாழ்க்கையின் பல அம்சங்களைப் பலகோணங்களில் சித்திரித்துக் காட்டுதல்ஆகியன இவ்வகைக் கல்வியிற் சித்திரிக்கப்படும். சித்திரம் சிறப்புற வரையப்பட்டால் அது அழகு பொலிந்ததாய், உள்ளத்தைக் கவருவதாய், மனதில் ஆழப்பதியும் இயல்பினதாய் இருக்கும். இந்தமுறையில் சித்திரிக்கப்படும் சித்திரமே சமய நாகரிகம், இந்து நாகரிகம், பௌத்த நாகரிகம், கிறீஸ்தவ நாகரிகம், இஸ்லாமிய நாகரிகம் என்றவாறு அவ்வச் சமயங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வகைக் கல்வியும் இன்று நிலவும் பாடத்திட்டங்களில் இடம்பெறுகின்றது. இவ்வாறு நாகரிகம் பற்றிக் கூறும்பொழுது சமயக் கருத்துக்கள் சமயத்தையடிப்படையாகக் கொண்ட நடையுடை பாவனைகள், சமய வாழ்க்கைமுறை, சமய தத்துவங்கள், சமயங்கள் வளர்த்த பல்வகைக் கலைகள் ஆகிய பற்றிய விடயங்கள் இடம்பெறும்.

இவ்வாறு சமய நாகரிகம் பற்றிய அறிவு சமயக் கல்விக்குத் தகுந்த பின்னணியாக மட்டுமே பயன்படும். சமயநூற் புலமையினதும், சமய சாதனைகளினதும் தரத்திலேயே சமயக் கல்வியின் பெறுபேறு முழுவதாகத் தங்கியுள்ளது. சமயக் கல்விப் பேறில்லாதவர் வாழ்க்கை பயனற்ற வாழ்க்கையே.

சைவமுந் தமிழும் ஓங்கிட!
சைவத் தமிழ் வித்தியாலயம் வளர்க!!
வைர விழா வான்சிறப்பெய்துக!!!

*

மலிந்த கட்டணம்!        மாண்புமிகு கல்வி!

## எங்கே?

* H. N. C. E.
* G. C. E. (A/L)
* G. C. E (O/L)
* N. C. G. E.
* G. A. Q.
* 6ஆம், 7ஆம், 8ஆம் தரங்கள்

↓

உரும்பராயிற் சிறந்த கல்வியளிக்கும் கழகம்

↓

# நவீன விஞ்ஞான நிலையம்

பலாலி வீதி :: உரும்பராய்

அநுபவஞ்சால் ஆசிரியர்கள்! அறிவுகூர் ஆசான்கள்!
பயிற்சிமிகு பண்டிதர்கள்! பண்புகொள் பணவர்கள்!

புதிய முறை!        இலகு போதனே!

அழகிய தங்க வைர நகைகள்
குறித்த தவணையிலும் உடனும் பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்

# தங்க நகை மாளிகை

உரும்பராய்

தரமான புடைவைகளை
மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்
ஒருமுறை விஜயம்செய்து பாருங்கள்!

# கணேசன் ஸ்ரோர்ஸ்

63, 78, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

# தாய்மொழிக் கல்வி

திரு. ஆர். கந்தையா அவர்கள்,
தலைவர்,
அகில இலங்கைக் காந்திசேவா சங்கம்

"நம்முடைய இளைஞர்களுக்குக் கல்வி போதிக்கும் பொறுப்புள்ளவர்கள் சற்று மனம் வைத்து யோசித்துப் பார்த்தால், குழந்தையின் உடல்வளர்ச்சிக்குத் தாய்ப் பால் எப்படியோ, அப்படி மனிதன் மன வளர்ச்சிக்குத் தாய்மொழியே இயற்கை யானது என்பதை உணர்வார்கள்" என்ற வார்த்தைகள் முப்பத்தைந்து ஆண்டுக ளுக்கு முன் மகாத்மா காந்தியடிகள் "போதனைக் கருவிமொழி", என்ற நூலொன்றுக்கு எழுதிய முன்னுரையி லுள்ளவையாகும். இந்தியா விழிப்புற்று, சுதந்திர நாடாக வளர ஆசைகொண்ட காலந் தொடக்கம் தாய்மொழிக் கல்வி யின் அவசியத்தைப் பல அறிஞர்களும், கல்விச் சீர்திருத்தக் கமிஷன்களும் வற் புறுத்தி வந்துள்ளார்கள். பல சர்வகலா சாலைகளும் இந்த முயற்சியில் மிகவும் உழைத்துவந்திருக்கின்றன. நமது இலங்கை சுதந்திரமடைந்ததும், தாய்மொழிக் கல்வி யின் அவசியத்தை உணர்ந்து பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக் கழகம் வரை தாய்மொழிமூலமாகக் கல்வி கொடுக்கப் படல் வேண்டும் எனச் சட்ட மூலமாக நடபடிக்கைகள்எடுத்தமை இன்று சரித்திர மாகிவிட்டது. இலங்கையில் தாய்மொழி மூலங் கல்வியுங் கற்பிக்கப்படுகின்றது.

அந்நியமொழி ஒன்றின் மூலமாகக் கல்வியைப் பெற முயலும் மாணாக்கர் மூளையைக் குழப்புவதோடல்லாமல், உடம்பையும் வருத்திக் கஷ்டப்பட்டுவந் தார்கள். அந்நிய மொழியைக் கற்று அம்மொழியில் நல்ல அறிவுபெற முடியாத வர்கள் ஏனைய பாடங்களையும் அந்த மொழியில் கற்றுக்கொள்வதில் பெரிதும் சிரமப்பட்டு வந்தார்கள். காசி இந்து சர்வகலாசாலை வெள்ளிவிழாக் கொண் டாட்டத்தில் சொற்பொழிவாற்றிய காந்தி யடிகள் இவ்விஷயமாகப் பொருத்தமாக வும் அழுத்தமாகவும் சில கருத்துக்களைக் கூறியிருந்தார்கள். "மற்றப் பாடங்களைக் கற்பதற்குமுன் ஆங்கிலத்தைக் கற்று, அதைப் புரிந்துகொண்டு, அதன் மூலமே எல்லாப் பாடங்களையும் கற்றுக்கொள்ள வேண்டுமென்பது, இந்திய இளைஞர்களின் சக்தியை விரயமாக்குவதாகும். இவ்வாறு அவர்களுக்கு ஒரு நிர்ப்பந்தம் விதித்து அவர்களின் சக்தியை வாரியிறைக்கும் விளையாட்டு விழலுக்கிறைத்த நீராகவே முடியும், இச்சக்தியை அவர்கள் நாட்டின் நலனுக்காக, நல்வழியில் பயன்படுத்தக் கூடாதா?" என்பதுவே தேசபிதாவின் கருத்துக்களாயிருந்தன. தாய்மொழிக் கல்வியின் அத்தியாவசியத்தை மகாத்மா காந்தி அவ்வளவுக்குப் போற்றி வந் துள்ளார்.

தாய்மொழி குழந்தைகளுக்குத் தாய்ப் பால் போன்றது. மூன்ருவது மாதந் தொடக்கம் குழந்தை தாயிடத்திலும், தன் னுடனிருக்கும் சுற்ருடல் மூலமாகவும் இயற்கை வழியாகத் தாய் மொழியுடன் பரிச்சயமாகி, தாய்ப்பாலுடனும், தாயன் புடனும் மனேவளர்ச்சியைப் பெறுவதுடன் தனக்குரித்தான தாயின் மொழியையும் அறிந்துகொள்ளுகிருன். தேகமனேவளர்ச் சியைப் பெறுவதோடு, தாயினுடைய தாலாட்டுப் பாடல்களும், தொட்டில் பாட்டுக்களும், பேச்சுகளும், கதைகளும் வழிகாட்டித் தனது இனத்துக்குரிய குணங் களையும், பண்புகளையும் மொழி அறிவை யும் பெறக் குழந்தைக்கு உதவியாகின்றன. ஒவ்வொரு மொழிக்குமுரிய இயல்பான தன்மைகளும் நாளாந்தம் குழந்தையின் நாடிகளிலும் நரம்புகளிலும் ஊறித் திளைத்து, ஊற்றெடுத்துத் தாய்மொழியாக வளருகின்றது. இங்ஙனம் வளர்ந்துவரும் தாய்மொழி மூலங் கல்வியைத் தொடங் கியதும், தாய்மொழிப் பாண்டித்தியம் இயல்பாகவே குழந்தை பெறுவதால், கற் பிக்கப்படும் சகல பாடங்களும் நன்கு தெளிவுபடுவது உறுதியாகும். பாட விஷ யங்கள் தெளிவாகி கருத்துக்கள் பிடிபட வும் உள்ளத்தில் பதியவும் தாய்மொழி பெரிதும் உதவியாகும். தாய்மொழியை நன்கு கற்றுக்கொண்டபின் அந்நிய மொழி களைக் கற்கவும், பல நூல்களையும் சாஸ் திரங்களையும் விளங்கிக்கொள்ளவும், தாய் மொழி மிகவும் துணையாகிறது.

தாய்மொழி மூலங் கல்வி கற்றுச் சிறப் பெய்திய நாடுகளுக்கு இங்கிலாந்து, அமெரிக்காவைவிட ஜப்பான், சீன, ருஸ் சியா, ஜேர்மனி போன்ற சில நாடுகள் நல்ல உதாரணங்களாகும். இந்த நாடுகளி

லுள்ள எல்லாக் கல்வி ஸ்தாபனங்களிலும் சகல பாடங்களும் தாய்மொழி மூலமே போதிக்கப் படுகின்றன. ஆங்கிலம், ஜேர்மன் அல்லது பிரெஞ்சு மொழிகள் தேவைகளுக்குத் தக்கதாக இரண்டாவது, மூன்றாவது மொழிகளாகக் கற்பிக்கப்படுகின்றன. இந்த முன்னேற்றமான நாடுகளிலெல்லாம் சர்வதேச உறவுகளுக்கும், வர்த்தகத் தொடர்புகளுக்கும், அறிவு வளர்ச்சிக்கும் வேண்டிய இடங்களில் வேறு மொழிகள் உபயோகப்படுத்தப் படுகின்றன. ஏனைய முன்னேற்றமான நாடுகளில் உள்ள நல்ல அம்சங்களையெல்லாம் கற்ற அறிஞர்கள் தங்கள் தாய்மொழி மூலமாகவே அவற்றை நாட்டில் பரப்புகின்றனர். அந்நிய மொழிக்கும் பண்பாட்டிற்கும் அடிமைப்படாமல் வாழத் தாய்மொழிக்கல்வி நல்ல வகையில் பாதுகாக்கப்படல் வேண்டும். தாய்மொழி மூலமாகத்தான் நல்ல உணர்ச்சிகளையும், நல்ல நன்மைகளையும் பேணிக்கொள்ளலாமென்பதை நன்கு உணர்ந்தவர்கள், எல்லாப் பருவக்கல்வியையும் தாய்மொழிமூலமாக, நல்ல முறைப்படி பேணிக்கொள்ளுதல் வேண்டும். இனத்தின் பண்பாட்டையும் கலாசாரத்தையும் தாய்மொழிக் கல்வியைத் தக்க முறையில் பயன்படுத்திப் பாதுகாக்காவிட்டால், சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் எவ்வித முன்னேற்றங்களைக் கண்டாலும், ஒரு இனம் அழிந்துவிடுமென அறிஞர்கள் கருதுகிறார்கள்.

தாய்மொழிக்கல்வி ஒவ்வொரு பருவத்திலும் நன்கு பேணப்படல் வேண்டும். 3—6 வயசு வரையுள்ள குழந்தைப் பள்ளிகளிலும், 6—12 வயசு வரையுள்ள ஆரம்பப் பாடசாலைகளிலும், 12—18 வயசு வரையுள்ள சிரேஷ்ட பாடசாலைகளிலும், அதற்கு மேலுள்ள பெரிய கல்லூரிகளிலும், சர்வகலாசாலைகளிலும் தாய்மொழி நன்கு கற்பிக்கப்படல் வேண்டும். ஆங்கிலம் போதனமொழியாக இருந்த காலங்களில், அந்த மொழி எத்தகைய சிறப்புடன், எவ்வித தராதரத்துடன் விளங்கிற்றோ, அவ்வளவு சிறப்பைத் தாய்மொழியும் பெற வேண்டும். நாட்டிலுள்ள சகல பாடசாலைகளும், கல்லூரிகளும், பல்கலைக் கழகங்களும் தாய்மொழிக்கல்விக்குரிய சிறப்பையும் நன்மதிப்பையும் அளித்து வளர்க்க முயல வேண்டும். எந்த மொழிக்கும் அரண் செய்வது அந்த மொழியிலுள்ள இலக்கியங்களாகும். தாய் மொழிக்கும், தாய்மொழி இலக்கியங்களுக்கும், கல்வியில் தகுந்த இடம் கிடைக்கும்போது. தாய்மொழிக் கல்வி சிறந்த நல்ல பயனைக் கொடுக்கும் என்பதற்கு ஐயமில்லை—அம்மொழிக்குரிய இசை, நாடகங்களும் வளர்க்கப்படல் வேண்டும்.

தாய்மொழிமூலங் கல்வி போதிக்கப்பட்டால், பல மொழிகள் பேசும் மக்களிடையே மொழிப்பித்தும், போட்டியும் வளருவதுடன். ஒரு மொழி பேசும் மாணாக்கர்களுடன், மற்றொரு மொழியைத் தாய் மொழியாகக்கொண்ட மாணாக்கர்கள் கலந்து பழகச் சந்தர்ப்பம் கிடைக்காது போகக் கூடுமெனச் சிலர் அஞ்சுகிறார்கள். ஸ்விட்ஜர்லந்து நாட்டிலுள்ள மக்கள் ஜெர்மனி, பிரெஞ்சு, இத்தாலி ஆகிய மூன்று மொழிகளைப் பேசிக்கொண்டு ஒற்றுமையாக வாழுகின்றார்கள் என்பதையும் ஒரே ஒரு மொழி பேசும் ஜெர்மன் மக்களுக்கும், ஆஸ்திரியா மக்களுக்கும் கொடிய விரோதம் இருந்து வருவதையும் இவர்கள் அறியார்கள்போலும். இன்னும் சிலர் பாடப்புத்தகங்கள் தாய் மொழிகளில் போதியளவு இல்லை என்றும், கல்லூரிப் பேராசிரியர்கள் தாய் மொழிமூலம் கல்வி போதிப்பதில் சிரமப்படுவதாகவும் பேசிக்கொள்ளுகின்றனர். இவையெல்லாம், 'தாய் மொழிகள் தங்கள் ஸ்தானங்களை இழந்த அடிமைப்பட்ட நாடுகளில், ஏற்படக்கூடிய கதைகள்' என்றுதான் கூற வேண்டும். காலம் இவற்றையெல்லாம் போக்கி விடுமென்று துணிந்து கூறலாம்.

கல்கத்தா சர்வகலாசாலை உப அத்தியட்சகர் ஸர். அஸ்டோஷ் முக்கர்ஷி, வங்க பாஷையை அக் கலாசாலை மாணவர்கள் இஷ்டபாடமாக எடுக்கும்படி முதன்முறை கூறியபோதும், இங்ஙனம் எதிர்ப்பு இருந்ததெனக் கூறுவர். உலகம் போற்றும் உத்தமக் கவி சிரேட்டரான, 'ரவீந்திர நாத் தாகூருக்கு' 'நொபல் பரிசு' பெற்றுக் கொடுத்த வங்க பாஷையின் கதி இங்ஙனமென்றால், ஏனைய மொழிகளைச் சம்பந்தப் படுத்திக் கூறும் கதைகளுக்கு யாரை நோகலாம். அந்நிய ஆட்சியால் நம் நாட்டுக்கு விளைந்த கெடுதிகளதிக மென்றால், தாய் மொழியைப் புறக்கணிக்கச் செய்த கல்வி முறைதான் 'மிகக் கெடுதி' என்றுதான் கூற வேண்டும். தாய்மொழிக் கல்விக்குரிய நல்ல தகுந்த இடம் முன்னேறிவரும் நாடுகளில் கொடுக்கப்படல் வேண்டும்.

பலசரக்கு வகைகள், உணவுப் பண்டங்கள்
சைக்கிள் உதிரிப்பாகங்கள், சாய்ப்புச் சாமான்கள்
சகாயமாகப் பெறலாம்

♦

**இ. முத்துக்குமாரு**
பலசரக்கு மாளிகை
உரும்பராய்.

சகலவிதமான மோட்டார் வாகனங்களின்
ரயர், ரியூப் போன்றவைகள்
வெகு விரைவில்
மின்சாரமூலம் வல்க்கனைஸ் செய்துகொடுக்கப்படும்.

**சக்தியா ரயர் வேக்ஸ்**

மானிப்பாய் வீதி : : உரும்பராய்

உரிமையாளர் : து. நாகேஸ்வரன்

அழகிய தங்கப்பவுண் நகைகளுக்கும்
வைரங்களுக்கும் சிறந்த ஸ்தாபனம்

# கே. டி. எம். ஜுவல்லர்ஸ்

**நகை, வைர வியாபாரம்**

கன்னாதிட்டி :: யாழ்ப்பாணம்

போன்: 286

சிறந்த நகைகளுக்கு
இன்றே
விஜயஞ் செய்யுங்கள்.

★

வட இலங்கைப்
பிரபல நகை வியாபாரிகள்

# ஹரன் ஜுவல்லர்ஸ்

50, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்
போன்: 444

வைரவிழாச் சிறப்புற
வாழ்த்துகின்றோம்!

A. Sinnathurai & Sons
**13, BAZAAR LANE,**
**JAFFNA**

# கவின் கலைகள்

"இயலிசைவாரிதி"
**பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் அவர்கள்,**
நாட்டியக்கலை விரிவுரையாளர்,
கோப்பாய் மகளிர் ஆசிரிய கலாசாலை.

**நாட்டியம் :**

"அகிலமே மேனி யாக
அருள்மொழி வாக்க தாக
அணிமதி தார கையாய்
அமைந்தஸாத் வீகம் சிவம்
அலகில்ஆங் கீக மாகி
அழகுவா சீக மாகி
நிலவும்ஆ ஹர்ய மாகி
நின்றஸாத் வீகம் சிவம்."

ஸாத்வீக ரூபியாகிய சிவனுக்கு உலகங்கள் யாவும் திருமேனியாகவும், சகல பாஷைகளும், திருமொழியாகவும் சந்திர நக்ஷத்திராதிகள் ஆபரணங்களாகவும் விளங்குகின்றன. திருமேனி ஆங்கீக அபிநயமாகவும், அருள்மொழி வாசீக அபிநயமாகவும், ஆபரணங்கள் ஆஹார்ய அபிநயமாகவும் விளங்கும் சிவன் சாத்வீக அபிநய ரூபமாகி நின்று அருளுகின்றான். "அபிநய தர்ப்பணம்" என்னும் நாட்டிய நூலைத் தந்த நந்திஹேச்வரர் மேற்கூறிய கருத்தைத் தனது நூலின் காப்புச் செய்யுளாகக் குறிப்பிட்டிருப்பது தத்துவம் நிறைந்து காணப்பெறுகிறது.

இதன் தத்துவத்தைச் சிறிது ஆராய்வோம். நாட்டியக்கலை தெய்வீகமானது. இறைவனால் நமக்கு அளிக்கப்பெற்ற பெரும் வரப்பிரசாதம். "அற்புதம்" என்னும் பதத்தின் கருத்தைத் தெளிவுற விளக்கும்படி கிடைத்த ஒரு தலைசிறந்த உதாரணம் நாட்டியக்கலை. அங்க அசைவுகளாலான ஆங்கீக அபிநயத்தாலும், கருத்தைப் புலப்படுத்தும் கவித்துவமான வாசீக அபிநயத்தாலும் பரிசுத்த உணர்ச்சிப் பிரவாகமான ஸாத்வீக அபிநயத்தாலும் ஒரு கந்தர்வ லோகத்தையே சிருஷ்டி செய்து, மனிதனின் மனத்தை இரசிகத்தன்மை மூலம் இழுத்து, மெய்மறக்கச் செய்து, கலையின்பத்தை நல்குவதோடல்லாமல் பண்பாடுகளையும் அவனது உள்ளத்திலே பதியச் செய்து, மனிதனைத் தேவனாக ஆக்கிவிடுவது நாட்டியம்.

இந்த நாட்டியம் தோன்றிய கதை சுவாரஸ்யமானது; புனிதமானது. நாட்டியம் என்ற பதத்திற்கு நாடகம் என்ற பொருளையே வலியுறுத்துகின்றன நாட்டிய நூல்கள். உணர்ச்சிகளை அங்க அசைவுகளின் மூலம் புலப்படுத்துவது ஆங்கீக அபிநயம் எனப்படும். இந்த ஆங்கீக அபிநயம் அங்க, உபாங்க, பிரத்தியாங்கமெனப் பிரிக்கப்பெற்று, தலை, கண், கழுத்து, கைகள் ஆகியவற்றின் அசைவுகளையும், முத்திரைகளையும், விநியோகங்களையும் கொண்டு பரந்த நூலாக, நாட்டிய நூலைப் பரதமுனி உருவாக்கினார்.

திரேதாயுக ஆரம்பத்தில் பூவுலக மக்கள் மாயையில் அழுந்திக்கிடந்தனர். ஆசை அழுக்காறு போன்ற உணர்ச்சி வசப்பட்ட அவர்களிடையே, சுகமும் துக்கமும் மாறிமாறித் தோன்றி மறைந்தன. தேவலோகத்திலும் இதே கதைதான்! அங்கு தேவர்களுக்கும் துன்பச்சாயை படியாத இன்பம் கிடைத்தபாடில்லை. ஆகவே பரிசுத்தமான இன்பத்தைத் தரக்கூடிய ஒரு கலையை அருளவேண்டுமெனத் தேவர்கள் சிவபிரானிடம் வேண்ட, சிவன் பதினாறு கலைகளையும் கொண்ட பதினாறு தாண்டவங்களை ஆடினார். உலகநாயகனான சிவன் ஆடும்போது அவன் அணிந்திருந்த கிண்கிணி, உடுக்கு முதலியனவற்றிலிருந்து பலபல வியாகரணங்களும், கணங்களும் தோன்றின. அப்போது வானவரும் போற்றித் துதித்தனர். முக்கண்ணனாகிய சிவன் பிரமதேவனுக்கு ஆடற்கலையின் தத்துவங்களையும் பயன்களையும் உபதேசித்தார். பிரமதேவரும் விதிப்படி ஆராய்ந்து இருக்கு வேதத்தில் இருந்து பாட்டியமும், யசுர் வேதத்திலிருந்து அபிநயமும், சாம வேதத்தில் இருந்து சங்கீதமும், அதர்வ வேதத்திலிருந்துஇரசங்களும்ஆக எடுத்துத் திரட்டி முப்பத்துஇரண்டு லக்ஷம் கிரந்தங்களை ஆக்கினார். இக் காந்தர்வ வேதத்தைப் பிரமதேவன் பரத முனிவருக்குபதேசித்தருளினார். பரத முனிவரும் பல லக்ஷம்

கிரந்தங்களைக் கொண்ட பரத சாஸ்திரம் என்னும் நூலை உருவாக்கித் தேவலோகத்திலுள்ள காந்தர்வ, அப்சரச பெண்களுக்குபதேசித்து அதைச் சிவன் பார்வதி முன்னிலையில் அரங்கேற்றம் செய்தார். சிவனும் மகிழ்ந்து 'தண்டு' என்ற மகரிஷி மூலம் தாண்டவம் என்ற ஆடலை உபதேசித்தார். பாணன் மகளாகிய உஷா தேவி மூலம் பார்வதியும், லாஸ்யம் என்னும் மென்மையான ஆடலை உபதேசித்தருளினர். பரதமுனி வகுத்த நாட்டியத்தில், நிருத்தம், நிருத்தியம், நாட்டியம், தாண்டவம், லாஸ்யம் என்னும் ஐந்து பிரிவுகளின் விளக்கத்தையும் பாவம், இராகம், தாளம் என்பவற்றின் சேர்க்கையான பரத லட்சணங்களையும் காணலாம். இக்கலை, தர்ம, அர்த்த, காம, மோக்ஷங்களையும் நல்குவதோடல்லாமல் மனித உள்ளத்தைப் பண்படுத்தும் தீவிர சக்தி நிறைந்ததாக என்றென்றும் இருக்குமென்று வாழ்த்தியருளினர் பரத முனி.

நாட்டியக்கலை ஒருவரை நாட்டின் நற்பிரசையாக்கிவிடும். தாயின் மணி வயிற்றில் தங்கியிருக்கும் குழந்தைக்குக் கர்ப்பத்திலேயே கலையுணர்வு தோன்றி விடுகிறது. பூமியில் பிறந்ததும் குழந்தை அழுகிறது; சிரிக்கிறது; பயப்படுகிறது; கோபிக்கிறது. எல்லாமே நவரசந்தான்! கருவிலேயே ஆரம்பித்த கலையுணர்வு மனிதன் இறக்கும்வரை — வாழ்வே நாட்டியமாக, நாட்டியமே வாழ்வாக அமைந்து விடுகின்றது. கலையுணர்ச்சி தலைப்பட்டவர்கள் சடப்பொருள்களிலேயே கலையை— அதன் நுணுக்கத்தை நுகர்ந்துகொள்வர்.

**சங்கீதம்** :

நாட்டியக்கலை மட்டுமன்றிச் சங்கீதம், சித்திரம் போன்ற கலைகளும் உள்ளத்துணர்ச்சிகளைத் தூண்டி உணர்ச்சியின் மூலம் தூய சிந்தனைகள், இரசிகத்தன்மை என்பவற்றை ஏற்படுத்துகின்றன. இறைவனோடு எம்மை இசைவிக்கும் தன்மை இசைக்கும் உண்டு. இசைக்கலையில் ஈடுபாடுடைய ஒருவன் சங்கீத உலகில் கற்பனைகளுடன் பாடி கோடானுகோடி இரசிகர்களைச் சிறந்ததோருலகுக்கு அழைத்துச் சென்று விடுகின்றான். மனிதனின் உன்னத வாழ்வுக்கு ஊன்றுகோலாயுள்ள கலைகளுக்கெல்லாம் மெருகூட்டும் இசை, இன்பத்தின் எல்லையைத் தொட்டுக்காட்டுவதாயுள்ளது. இசைக்கலையின் பெருமை பேசும் கர்ணபரம்பரையான கதைகள் பலவுள. அவற்றை விளக்கின் பெருகும். இறைவனே 'சாமகானப்பிரியன்'. ''இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால், இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்'' என்ற தொடர்கள் சிந்திக்கத்தக்கவை.

**சித்திரம்** :

'சித்திரமும் கைப்பழக்கம்' என்பார்கள். சித்திரத்தின் மூலம் ஒருவரின் கை வண்ணத்தை யாம் அறியலாம். அறிந்தவர்களையும், அறியாதவர்களையும், அறிந்தும் மறந்தவர்களைக்கூட நம் மனக்கண் முன் அழியாத சின்னங்களாக ஓவியத்தின் மூலம் காட்டுகின்றான் சித்திரக் கலைஞன். சித்திரக் கலைஞர் போடும் ஒவ்வொரு இரேகையும் ஒரு பெருங்கதையையே எடுத்துச் சொல்வதாயிருக்கும். 'கண்களிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்குவாருண்டோ' என்றார் அமரகவி. மனதிலே உள்ளதைச் சிந்தித்து அதற்குப் புது உருவமும் வகுத்து விடுகின்ற ஓவியக் கலைஞன் மக்கள் மத்தியிற் சாகாதகலைஞனாகின்றான். எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும் அவருக்குத் தனியிடம் உண்டு. உலகில் உள்ள பல பொருட்களையும் சிந்திக்கத் தக்கவகையில் உண்மையம்சம் கெடாமல் சிருட்டிக்கும் ஒருவனது உள்ளம் பண்பட்ட பலதுறைகளில் விரிந்து எண்ணுவன, செய்வன எல்லாமே புனிதமானதாகத், தனித்துவமானதாக வெளிவருகின்றது. பிறப்பில் இருந்து மறைவுவரை இரசனையையுண்டாக்குகிறது சித்திரக்கலையென்றால் மிகையாகாது. சித்திரக்கலை மனித வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துவிட்டது எனலாம்.

மேற்கூறியவற்றால் நாட்டியம், சங்கீதம், சித்திரம் முதலிய கலைகள் நுண்கலைகளாம். கவின்கலைகள் என்றும் கூறலாம். இக்கலைகளைச் சிறு வயதில் இருந்தே ஒருவர் கற்பாராஞல் அவர் வாழ்க்கையில் எல்லா வித பண்பாடுகளுடன் கூடியவராய் விளங்குவார் என்பது திண்ணம். இதனாலன்றோ இலங்கை வித்தியாபகுதியும் எதிர்காலச் சந்ததியினரின் உன்னத வாழ்க்கைக்கு அத்திவாரமாகப் பாடத்திட்டத்தில் கவின் கலைகளைப் புகுத்தியிருப்பது மிகமிக வரவேற்கக்கூடியதே. இந்த நல்லதிட்டத்தின் மூலம் மாணவசமுதாயத்தின் உளவளர்ச்சி பெருகுவதுடன், கலைஞர்களின் வாழ்க்கை நிலையும் அந்தஸ்தும் உயர்ந்திருப்பது கண் கூடு. இம் முயற்சி எதிர்காலத்துக்கு நல்லதொரு சுபசகுனமாகும்.

கமக்காரர்களுக்கு உபயோகமான
மருந்து வகைகள்
வீட்டுப்பாவனைப் பொருட்கள்

அயல் இடங்களுக்குப் பொருட்கள்
ஏற்றுமதி இறக்குமதிச் சேவைகள்

**கருணகரன் ரூன்ஸ்போட் சேவிஸ்**

♣

விபரங்களுக்கு:

**விக்கினேஸ்வரன் ஸ்ரோர்ஸ்**

பலாலி வீதி : : உரும்பராய்

தரம் நிறைந்த சிறந்த பொருள்களைக்
குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள
இன்றே வாருங்கள்

‘பலசரக்கு மாளிகை’
அ. சொக்கலிங்கம் அன் சன்ஸ்
பலாலி வீதி, : : கோண்டாவில்

அழகிய தங்கப்பவுண்
நகைகளுக்கும்
வைரங்களுக்கும்
சிறந்த ஸ்தாபனம்

துரையப்பாப்பத்தர்
கோபாலசாமி
82/5, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கோழிப் புரியாணி
சாங் நூடில்ஸ். வட்டிலப்பம்
மற்றும் சகலவித
உணவு வகைகளுக்கும்
இன்றே விஜயம் செய்யுங்கள்

ஹோட்டல்
பரடைஸ்
91, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# ஈழத்தில் பத்திரிகைத் துறையும் இலக்கிய வளர்ச்சியும்

திருமதி சித்திரலேகா மௌனகுரு அவர்கள்,
தமிழ்த்துறை, யாழ்ப்பாண வளாகம்.

எந்த ஒரு மொழியிலும் நவீன இலக்கிய வளர்ச்சி பத்திரிகைத் துறையுடன் இணைந்து சென்றிருப்பதை அவதானிக்கலாம். இதற்குத் தமிழ்மொழியும் விதிவிலக்கன்று. 19ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் தோன்றிய பத்திரிகைத்துறை இவ் வகையில் பாரிய பணியினைச் செய்துள்ளது. 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த பல தமிழ் இலக்கியப் பிரமுகர்கள் எவ்வகையிலாயினும் பத்திரிகைத் துறையுடன் சம்பந்தப்பட்டுள்ளமை இதனை விளக்குகிறது. ஆரம்பகால நாவலாசிரியர்களுள் ஒருவரான அ. மாதவையா 'பஞ்சாமிருதம்,' 'விவேகசிந்தாமணி' முதலிய பத்திரிகைகளின் ஆசிரியராக விருந்தார். ஆறுமுகநாவலர் இலங்கையில் வெளியான முதல் தமிழ்ப் பத்திரிகையாகிய 'உதயதாரகை'யில் இலக்கண இலக்கிய விடயமாகப் பல கட்டுரைகளை எழுதினார். 'இலங்காபிமானி'யிலும் 'இலங்கை நேசனிலும்' பல தரப்பட்ட விடயங்களை வெளியிட்டார். சுப்பிரமணிய பாரதி'சுதேசமித்திரன்', 'இந்தியா'முதலிய பத்திரிகைகளின் உதவியாசிரியராகவும், பொறுப்பாசிரியராகவும் பணிபுரிந்தமை யாவரும் அறிந்ததே. பாவலர் துரையப்பாபிள்ளை 'உதயதாரகை'ப் பத்திரிகையின் ஆசிரியராகக் கடமையாற்றியவர். அறிஞர் சித்திலெப்பை 'முஸ்லீம் நேசன்' என்ற பத்திரிகையை ஆரம்பித்தவர்.

ஈழத்தின் இலக்கிய வளர்ச்சியில் பத்திரிகை ஆற்றிய பணியினை மூன்றாக வகுத்துப் பார்க்கலாம். உரைநடை வளர்ச்சிக்கு உதவியமை, எழுத்தாளர்களின் பிரசுரகளமாகப் பயன்பட்டமை. வாசகர் கூட்டம் பெருகக் காரணமாகச் செயற்பட்டமை ஆகியவை நவீனத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு மிக உறுதுணை புரிந்தன.

ஈழத்தில் ஆரம்பத்தில் தோன்றிய பத்திரிகைகள் சமய சம்பந்தமுடையனவாகவே இருந்தன. முதலாவது தமிழ்ப் பத்திரிகை தமிழ் நாட்டில் தோன்றிப் பத்து வருடங்களுக்குப் பின்னர் 1841ல் யாழ்ப்பாணத்தில் உதயதாரகை வெளிவந்தது. மாசிகையாக ஆரம்பிக்கப்பட்ட இப்பத்திரிகையின் முதல் இதழின் ஆசிரியத் தலையங்கம் பின்வருமாறு கூறுகிறது.

"....உதயதாரகைப் பத்திரத்தில் கற்கை, சரித்திரம், பொதுவான கல்வி, பயிர்ச் செய்கை, அரசாட்சி மாற்றம் முதலானவை பற்றியும் பிரதான புதினச் செய்திகள் பற்றியும் அச்சடிக்கப்படும்."

இக் கூற்றில், பத்திரிகை பல தரப்பட்ட விடயங்களையும் தாங்கி வெளிவந்தமை சுட்டப்படுகிறது. இதனால் தமிழ் உரைநடையின் எல்லை விரிவுபட்டதை நாம் குறிப்பிட்டே ஆகவேண்டும். சமய தத்துவத்திலும், அறப்போதனையிலும் உரையெழுதுவதிலும் கட்டுண்டு கிடந்த மொழியைப் பத்திரிகைகள் நவீன வளமும் சக்தியும் வாய்ந்த சாதனமாக ஆக்கியிருக்கும் என்பதில் ஐயமில்லை. நவீன இலக்கிய வடிவங்களுள் பிரதானமான நாவலின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் இந்நிலைமை சாதகமாகவிருந்தது, இந்நிலையை அயல்மொழியாகிய சிங்களத்திலும் அவதானிக்கலாம். நாவலிலக்கியத்தின் தோற்றத்துக்கு முன்னர் சிங்கள உரைநடை வளர்ச்சியில் பத்திரிகைகளும் பருவ வெளியீடுகளும் முக்கிய இடம் வகித்தன என்பர் கலாநிதி சரச்சந்திர.

"செய்திப் பத்திரிகைகளுடனேதான் நெடுங்காலத்தின் பின், மொழி உரைநடைக்கும் உரைநடையிலமைந்த புனைகதைக்கும் அதிகமாக உபயோகிக்கப்பட்டது. செய்திப் பத்திரிகைகள் படித்தோரைச் சென்றடைய வேண்டியிருந்ததுபோலவே பாமரரையும் அடையவேண்டி இருந்ததால் பொது வழக்கின் மொழியையும் மரபுத் தொடர்களையும் பயன்படுத்தின. இங்குதான் முதன்முதலாக இலக்கிய வழக்கிலிருந்து பெருமளவு வேறுபட்ட வழக்கு மொழி இலக்கியத்தில் பயன்பட்டதைக் காணமுடிகிறது. இதன் விளைவாக, பொது வழக்கின் இலக்கணம், மரபுத் தொடர் என்பவை தரப்படுத்தப்பட்டன." இவ்

வாறு சிங்கள வசனநடை வளர்ச்சிபற்றி கலாநிதி சரச்சந்திரா கூறுவது தமிழுக்கும் முற்றுமுழுதாகப் பொருந்துமெனலாம்.

வசனநடையை வளம்படுத்தியது மட்டுமன்றி எழுத்தாளர்களின் பிரசுரங்களாகவும் பத்திரிகைகள் அமைந்திருந்து இலக்கிய வளர்ச்சியை ஊக்கப்படுத்தின. சிறப்பாக ஈழத்து நாவல், சிறுகதை வளர்ச்சி பத்திரிகைத்துறையுடன் இரண்டறக் கலந்துள்ளமை குறிப்பிடப்படவேண்டியதே. 1889ல் ஆரம்பிக்கப்பட்ட 'இந்துசாதனம்' என்னும் பத்திரிகை, இருபதாம் நூற்றூண்டின்முதற்காற் பகுதியிலேயே இத்துறையில் ஈடுபட்டுள்ளது. 1920ம் ஆண்டுத் தொடர்களில் ம. வே. திருஞானசம்பந்தபிள்ளையின் மூன்று நாவல்களை இது தொடராக வெளியிட்டது என்பது இங்கு மனங்கொள்ளத்தக்கது. இவைமட்டுமன்றி இக்காலப் பகுதியில் ஆக்க இலக்கிய கர்த்தாக்களுள் குறிப்பிடத்தக்க ஒருவராயிருந்த இவரது பல்வித ஆக்கங்களும் 'இந்துசாதனம்' பத்திரிகையிலேயே முதலில் வெளிவந்தன.

ஈழத்தின் ஆக்க இலக்கிய வளர்ச்சியை நோக்கும்போது அதன் ஆரம்ப காலத்தில் 'ஈழகேசரி' பத்திரிகையும்பெரும்பங்குவகித்துள்ளது. 1930ல் வாரப்பத்திரிகையாக, அரசியல் நோக்குடன் தொடங்கப்பட்ட ஈழகேசரி காலப்போக்கில் இலக்கிய வெளியீடுகட்கும் இடம் கொடுத்தது. 1942ம் ஆண்டு வரை சி. வைத்திலிங்கம், க. தி. சம்பந்தன் முதலியோரின் படைப்புக்கள் அதில் வெளிவந்தன. இவ்வகையில் ஈழத்து எழுத்தாளர்களும், இலக்கிய கர்த்தாக்களும் தமது படைப்புக்களை வெளியிடுவதற்கு ஏற்ற பிரசுரகளங்களாகப் பத்திரிகைகள் அமைந்ததால், நூல் வடிவில் தமது பிரசுரங்களை வெளியிட வசதியற்றோரும் ஆர்வங்குன்றுது உழைக்க முடிந்தது. பிற்காலத்தில்கூடப் பல நாவல்கள் ஆரம்பத்தில் தொடர்கதையாக வந்து பின்னர் நூலுருவம் பெற்றனவாகவேயுள்ளன. இதற்குச் சிறந்த உதாரணமாகத் 'தினகரன்' பத்திரிகையில் வெளிவந்து நூலுருவாகிய "நீதியே நீ கேள்" என்ற நாவலைக் குறிப்பிடலாம். இன்று இலக்கியப் பணிபுரியும் சிறு சஞ்சிகைகளை பத்திரிகை என்ற எல்லைக்குள் முற்று முழுதாக அடக்கமுடியாது. எனினும் அதற்காக இலக்கிய உலகில் பத்திரிகைகளின் பங்கு குறைந்துவிட்டது எனக் கூறுதலும் முடியாது. அவ்வப்போது சிறுகதைகளும், கவிதைகளும், தொடர்கதைகளும் வெளிவர இவை இடமளித்துக்கொண்டேயுள்ளன.

வாசிக்கும்பழக்கத்தினை மக்களிடையே பரவலாக்கி வாசகர் தொகை பெருக உதவியதும், இப் பத்திரிகைகளின் முக்கிய பணியாகும். இலங்கைத் தமிழ் வாசகரிடை நாம் ஆரம்பத்தில் குறிப்பிட்ட பத்திரிகைகளின் தோற்றம் தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை மறுக்கமுடியாது. நானுவித செய்திகளையும் வெளியிடுவதன் மூலம் பத்திரிகைகள், மக்களின் வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டின. இவ் வகையில் ஆரம்ப காலத்தில் பத்திரிகைகள் தூண்டிய இவ் வாசிப்புப் பழக்கமே புனை கதைகளின் வளர்ச்சிக்கு உதவிய முக்கிய காரணிகளில் ஒன்றுகவும் அமைந்தது.

ஈழத்தில் இலக்கிய வளர்ச்சியும் பத்திரிகைத் துறையும் என்பது குறித்துப் பொதுவாக நோக்கும்போது இவை இரண்டும் ஒன்றையொன்று பாதித்துள்ளமையையும் ஒன்றன் போக்கு இன்னென்றை வழி நடத்தியுள்ளமையையும் குறிப்பிட்டாக வேண்டும். 1930ஆம் ஆண்டுகளிலேயே ஆக்க இலக்கியத்துறை ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் இடம் பிடித்து விட்டதாயினும், பண்டைய இலக்கிய ஆராய்ச்சி, சமய இலக்கியங்கள் என்பனவும் சமபங்கு வகித்திருந்தன. இந் நிலையின் சிறந்த எடுத்துக்காட்டாக அக்காலத்து ஈழகேசரி விளங்கிற்று. "ஒரு புறத்தில் திருமுருகாற்றுப்படை, பெரும்பாணுற்றுப்படை, வேளாளர் வருண ஆராய்ச்சி ஆகிய விடயங்களையும் மறுபுறத்தில் சுயா, அநுசுயா முதலியோரது 'யாழ்ப்பாண நடைக்' கட்டுரைகளும் அருணேதயம், தேவி திலகவதி, பவளகாந்தன் முதலிய நாவல்களுமாக அது வெளியிட்டது. அக்கால ஈழத்தமிழ் இலக்கியத்தின் இருவகைப் போக்கின் பிரதிபலிப்பே இது எனலாம். சுமார் இருபது வருடங்களுக்கு முன் ஈழத்து முற்போக்கு எழுத்தாளர்களால் தேசிய இலக்கியம், மண் வாசனை இலக்கியம் ஆகிய கோஷங்கள் இலக்கிய உலகில் எழுப்பப்பட்டபோது அதன் களமாகப் பயன்பட்டது 'தினகரன்' பத்திரிகை என்பதையும் நாம் இவ்விடத்தில் நினைவு கூரலாம்.

ஈழத்து இலக்கியத்தின் பல்துறை வளர்ச்சி, குறிப்பாக ஆக்க இலக்கிய வளர்ச்சி ஆரம்பத்திலிருந்து பத்திரிகைத் துறையுடன் சேர்ந்து அமைந்துள்ளதைக் கவனிக்கலாம். ஆனல் சமீப காலமாக இந்நிலை மாறியுள்ளமையைக் குறிப்பிட்டாக வேண்டும். பெரும் பத்திரிகைகள் வளர்ச்சியடையும் போது இலக்கியத் தரத்திற்கும், பரிசோதனைகட்கும் இடமில்லாமற் போதல் இயல்பே.

பலசரக்கு வகைகள்
வீட்டுப் பாவனைப் பொருட்கள்
பாடசாலை மாணவர்க்கு வேண்டிய உபகரணங்கள்
கிருமி நாசினிகள், உரவகைகள்
கோழித்தீன்வகைகள்

# இ. ஏகாம்பரம்

உரும்பராய்ச் சந்தி
உரும்பராய்

சுவை நிறைந்த போசனங்கள்
சிற்றுண்டிகளுக்கு
இன்றே விஜயம் செய்யுங்கள்

# ஸ்ரீ குமரன் கபே

உரிமையாளர் :
திரு. வி. எஸ். பத்மநாதன்

பலாலி வீதி, கோண்டாவில்

தரமான ஜவுளிகளுக்கும்
றெடிமேட் உடைகளுக்கும்
அழகுசாதனப்
பொருள்களுக்கும்
கிருமிநாசினிகளுக்கும்
சிறந்த ஸ்தாபனம்

# ஸ்ரீ குமரன் ஸ்ரோர்ஸ்

பலாலி வீதி, கோண்டாவில்

தங்க, வைர நகைகள்

எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

❋

V. P. P. உடன் கவனிக்கப்படும்

❋

கே. கே. வி.

யாழ். நகைமாளிகை

82/4, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

நகைகள்

வைர வியாபாரிகள்

↓

எஸ். எல். எம்.

தீபி அன் சன்ஸ்.

R. G. பில்டிங்

கன்னாதிட்டி,

யாழ்ப்பாணம்

போன் : 282

வைரவிழாச் சிறப்புற

வாழ்த்துகின்றோம்.

↓

வரமாஸ்

பலாலி வீதி,

கோண்டாவில்

வைரவிழாச் சிறப்புற

வாழ்த்துகின்றோம்

❋

பிள்ளையார்

மெற்றல் வேக்ஸ்

107, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7019

# ஈழத்தில் தமிழ் இலக்கிய விமரிசனம்

(அதன் முதன்மைக்கும், முனைப்புக்குமான காரணங்கள் பற்றிய,
வரலாறுவழி நின்ற ஒரு குறிப்பு)

**திரு. கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள்,**
இலங்கைப் பல்கலைக்கழக வித்தியோதய வளாக
இணைத்தமிழ்ப் பேராசிரியர்.

தமிழ் இலக்கியத்தின் பன்முகப்பட்ட, பல்தேச நிலைப்பட்ட வர்த்தமான வளர்ச்சியில், இலங்கை, இலக்கிய விமரிசனத் துறையில் முன்னணியில் நிற்கின்றது என்பது சம்பந்தப்பட்ட யாவராலும் ஏற்றுக் கொள்ளப்படும் ஓர் உண்மையாகும். விமரிசனத் துறையில் இலங்கைக்குள்ள முதன்மைக்கான காரணங்களை அறிந்து கொள்வதற்கான ஆய்வுக்கான முன்னோடிக் குறிப்பாக இக்கட்டுரை எழுதப்படுகின்றது.

இலங்கையின் விமரிசனத்துறையின் முதன்மையும் விமரிசனத்துறைக்கு இலங்கையிலுள்ள முனைப்பும் எவ்வாறு முகிழ்த்துள்ளது என்பதை முதலில் நோக்கல் வேண்டும். தென்னிந்தியாவில், உயர் தமிழ் இலக்கியக் கல்விக்கும் ஆராய்ச்சிக்கும் ஆதாரமாகவும் வழிகாட்டிகளாகவும் அமையும் விமரிசன நூல்கள் இலங்கையரால் எழுதப்பட்டுள்ளமை உண்மையே. இப்பண்பு திரு. கனகசபைப்பிள்ளை அவர்களின் காலம் முதலே காணப்படுவதாகும். இதைவிட முக்கியமானது இத்தகைய நூல்கள் — ஆராய்ச்சிகள் — தோன்றுவதற்குக் காரணமாகவுள்ள இலங்கைத் தமிழ் இலக்கியப் பயில்நிலைப் பின்னணியாகும். இலக்கியப் பயில்வாளர் (எழுத்தாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்) யாவரும் இலக்கிய ஆக்கத்தையும் மதிப்பீட்டையும் இணைத்துக் காண்பது முக்கியமான ஒரு பண்பாகும். ஆக்க இலக்கியங்களை ஏதாவதொரு இலக்கியக் கோட்பாட்டுக்கியைய எழுத முனைவதிலும், வாசிக்கும் இலக்கியங்கள் முழுமையான ஒரு வாழ்க்கை நோக்கினை அல்லது கண்ணோட்டத்தினை ஏற்படுத்துகின்றனவா என்று பார்ப்பதிலும் முறையே எழுத்தாளர்களும் வாசகர்களும் கவனஞ் செலுத்தி வந்துள்ளமை இதனை உணர்த்துகின்றது. பொதுப்படையான வாசகர்களை உள்ளடக்காத இலக்கியச் சர்ச்சை யெதுவும் இலங்கையில் நடந்ததில்லை. இவை யாவற்றுக்கும் மேலாக இலங்கையில், ஆக்க இலக்கிய எழுத்தாளர்கள் எனத் தம்மைத்தாம் கருதும், கருதியுள்ள யாவருமே விமரிசனத்துறையில் ஈடுபாடு செலுத்தியே வந்துள்ளனர்.

அப்படியாயின், இலக்கிய விமரிசனம் ஏன் இவ்வாறு முக்கியமாகியுள்ளது என்பதனைப் பார்ப்போம்.

இலக்கியம் ஆற்றல் மிக்க தொடர்புச் சாதனம் எனும் உணர்வு அறிவு ரீதியாக ஏற்பட்டுத் தொழிற்படுகின்றபொழுதுதான், அச்சாதனத்தின் தன்மை, அதன் நோக்கம், அது ஏற்படுத்தக்கூடிய தாக்கம் ஆதியன பற்றிய அறிவுத் தேடல் ஆரம்பமாகின்றது. இத் தேடுதல் முயற்சியே இலக்கிய விமரிசனமாகும். இது கோட்பாட்டு ஆய்வாகவும், வெளியீடுகளின் ஆய்வாகவும் பரிணமிக்கும்.

இலக்கியத்தின் ''தொடர்பு முக்கியத்துவம்'' விளக்கிக்கொள்ளப்படும்பொழுது, அதாவது எழுதவேண்டியன பற்றிய எண்ணத் துணிபும் உணர்ச்சித் தெளிவும் ஏற்படுகின்றபொழுது அதற்கு முன்னர் தோன்றியதும், வர்த்தமான சிந்தனையையும், எழுத்து முறையையும் பாதிப்பதுமான ''பாரம்பரியம்'' பற்றிய ஆய்வு தோன்றும். இலக்கிய விமரிசனம் கோட்பாட்டு நிலையிலும் பிரயோக ஆய்வு நிலையிலும் பாரம்பரியத்துக்கும், சமகால இலக்கிய நிகழ்வுகளுக்கும் எதிர்கால இலக்கியத் தேவைகளுக்கும் இணைப்பினை ஏற்படுத்துகின்றது. மூன்று காலங்களையும் உள்ளடக்காத

இலக்கிய விமரிசனம் இலக்கிய விமரிசன மாகாது. இலக்கியக் கோட்பாடுகள் விமரிசன நிலைப்பட்ட ஆய்வினால் தோன்று பவை. விமரிசனங்கள் கோட்பாடுகள் வழிநின்ற நுண்ணிதான ஆய்வுகளாகும்.

இத்தகைய இலக்கியபோதம் சிறப் பாக இலங்கைத் தமிழ் இலக்கிய உலகில் ஏற்பட்டுள்ளமைக்கான வரலாற்றுக் காரணிகளாகப் பின் வருவனவற்றைக் கூறலாம்.

1. இலங்கையில் தமிழ் இலக்கியங்களை —ஆரம்ப காலந்தொட்டே (நாவலர் காலம் முதல் நிதரிசனமாக) இலங்கை யின் சமுக, பண்பாட்டுக் கோலத்துடன் இணைத்துப் பார்ப்பதிற் காட்டப்பட் டுள்ள ஆர்வம்.

சைவசித்தாந்தப் பாரம்பரியத்தில் வரும் இலக்கியங்களை ''இனங் கண் டறிந்து'' போற்றுவதிலும், சைவசித் தாந்தக் கலாசாரத்தினைப்பேணுவதிலும் எமது இலக்கிய மூதறிஞர்கள் காட்டி யுள்ள ஆய்வியல் நோக்கு முக்கியமான தாகும். சில இலக்கியங்களை, அவை ''நரஸ்துதி'' செய்வதென்பதாற் பெரி துங் கொண்டாடாது விட்டமையை இந் நோக்கிற்கு உதாரணமாகக் கூறலாம்.

நடைமுறைத் தூய்மையும் நோக்க நேர்மையுமுள்ள வகையில் மதமும் இலக் கியமும் போற்றப்படவேண்டு மென்ற விமரிசன இயக்கத்தை நாவலர் காலத் திற்கு முன்னிருந்தே இலங்கையர் இந்தி யாவில் காட்டிவந்துள்ளனர்.

இவ்வாய்வுப் பண்பு வேறுபட்ட வர லாற்றுப் பின்னணியில் தேசிய இலக் கியக் கோஷமாக முகிழ்த்தது ஆச்சரிய மன்று.

2. இந்தியத் தமிழிலக்கியப் பயில்வாள ரிலும் பார்க்க, இலங்கைத் தமிழ் இலக் கியப் பயில்வாளர்கள், பிறதேச, பிற பண்பாட்டுப் பாரம்பரியங்களை அறிவ தற்கிருந்த வாய்ப்புக்கள் அதிகமாகும்.

மேனாட்டார் வருகையும், அவர்களது இலக்கிய முயற்சிகளும், அவ்விலக்கிய முயற்சிகள் பற்றிய பரிச்சயமும், இலக் கிய விமரிசனத்துக்கு வேண்டிய ஒப்பியல் நோக்கினை, இலக்கைத் தமிழ் இலக்கியத் தின் இன்றியமையாப் பின்னணியாக நிலை நிறுத்தியுள்ளன. நாவலரது இலக்கிய முயற்சிகளுக்கு இப்பரிச்சயங்கள் பெரி தும் உதவியுள்ளன என்பது எமக்குத் தெரியும். மிசனரிமார்களின் மொழி பெயர்ப்புப் பணி இதற்குத் தக்க பசளை யாக அமைந்தது.

3. இலங்கையின் இலக்கியக் கல்வியமைப்பு — போதனு முறைமை — இலக்கிய விமரிசனத்தினை வளர்ப்பதற்கு வாய்ப் பாக இருந்துள்ளது.

பாரம்பரிய இலக்கியப் பயில் நிலையில் இப்பண்பு காணப்பட்டமையை முதலாம் குறிப்பிற் கண்டோம்,

இலக்கிய விமரிசன ஆய்வு நோக்கு வளர்வதற்கு, இலங்கைப் பல்கலைக்கழ கத்துத் தமிழ்த்துறையின் பாடவிதான அமைப்பு முக்கிய காரணமாகும்.

இலக்கியத்தை முழுமையாகப் பார்க் கும் பண்பு விமரிசனத்துக்கு அச்சாணி யான அம்சமாகும். தமிழ் இலக்கியத் தின் முழுமையையும் அம் முழுமையின் செல்நெறிகளையும் பாங்குகளையும் உணர்த்துவது இலக்கிய வரலாறு எனும் பாடமேயாகும். தமிழ் இலக்கியத்தின் வரலாற்றை முதன்முறையாக வரன் முறையான பாடமாகப் பயிற்றியது இலங்கைப்பல்கலைக் கழகமேயாகும். இது பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் தீட் சண்ய நோக்கினால் ஏற்பட்ட புரட்சிகர விளைவாகும். அடுத்து இலக்கிய விமரிச னத்தை ஒரு பாடமாகப் பயிற்றிய பெரு மையும் இலங்கைப் பல்கலைக் கழகத்துக் குண்டு. தமிழக அறிஞர்களும் அறிஞர் போன்றோரும் விமரிசன நூல்கள் என உள்ளத் தெளிவற்ற மொழிபெயர்ப்புக் களையும் தழுவல்களையும் வழங்கிய பொழுது ஐ. ஏ. றிச்சாட்சின் கோட் பாடுகளுக் கியையத் தமது அறிவுரை களை அமைத்து மாணவரின் இலக்கிய நோக்கினை விஸ்தரித்தவர் பேராசிரியர் செல்வநாயகம். மேலும் இலக்கிய வெளிப் பாடு என்பது உயர் இலக்கிய வகை பற்றிய வரையறைப்பட்ட ஆய்வு அன்று, அது நாட்டுப்பாடல், நாட்டுக்கூத்து

முதலியனவற்றையும் உள்ளடக்குமென் பதைத் தனது ஆய்வுகளின் மூலம் பேராசிரியர் வித்தியானந்தன் நிறுவினர்.

யாவற்றுக்கும் மேலாக, முதன் முதலில் நவீன தமிழ் இலக்கியங்களைச் சிறப்புத் தேர்வுக்குப் பாடநூல்களாக்கிய பெருமையும் இலங்கைப் பல்கலைக் கழகத்தையே சாரும். மறைமலையடிகள் முதல் புதுமைப்பித்தன் வரை பல ஆசிரியர்கள் பரீட்சைத் தேவைகளுக்காக விரிவாக ஆராயப்பட்டனர்.

இந்த விமரிசனப் பாரம்பரியத்திலிருந்து முகிழ்த்த தமிழ்த்துறை மாணவர்கள் விமரிசனத்துறையில் முன்னணியில் நிற்பது ஆச்சரியமன்று.

அத்துடன், நவீன இலக்கியமும் விமரிசனமும் ஆசிரிய கலாசாலை நிலையிலும், பாடசாலை உயர் வகுப்பு நிலையிலும் மிக முக்கியமான துறைகளாக அமைந்துள்ளன. இப்பண்பினைத் தமிழகத்திற் காணமுடியாது. விமரிசன நோக்கில் மாணவர்களை 9ஆம் தர முதல் பழக்குவது இலக்கிய விமரிசன உணர்வு தேசியப் பண்பாக வளர்வதற்குப் பெரிதும் உதவுகின்றது.

4. இலக்கியம் பற்றிய, கருத்துநிலைப்பட்ட வாதவிவாதங்கள் தமிழகத்திலும் பார்க்க இலங்கையில் உத்வேகத்துடன் நடந்துள்ளமையும் முக்கியமான காரணமாகும். இலக்கியத்தின் அறம் பற்றிய பல கருத்து மோதல்கள் இலங்கையில் கடந்த 20 வருட காலமாக நடைபெற்று வருகின்றன. இலக்கியத்துக்கும் சமுதாயத்துக்குமுள்ள இயைபு பற்றிய தத்துவக் கோட்பாடுகள் பற்றி இங்கு அதிகம் அலசி ஆராயப்பட்டுள்ளது. அத்தகைய சர்ச்சைகளில் எழுத்தாளர்கள் மாத்திரமன்றி வாசகர்களும் சம்பந்தப்பட்டுள்ளனர்.

ஆனல் தமிழகத்தில் நடந்த வாதவிவாதங்களைப் பார்க்கும்பொழுது இலங்கையில் நடந்த இலக்கிய வாதங்களுக்கும் தமிழகத்தில் நடந்தனவற்றுக்குமுள்ள வேறுபாடு தெரியும். தமிழகத்திலே தோன்றிய தனித்தமிழ் வாதம் இலங்கையில் பெற்ற முனைப்பின் பண்பு பற்றிய ஆய்வே இவ்வுண்மையை விளக்கும். முற்போக்கு, பிற்போக்கு எதிர்ப்பு வாதம் இலக்கிய அறம் பற்றிய வாதமே.

5. இலங்கையில் கல்வியும் இலக்கியமும் சனநாயகப்படுத்தப்பட்ட முறைமையும் வேகமும் தமிழகத்து நடைமுறையிலிருந்து வேறுபட்டதாகும். இரு பிரதேசங்களின் எழுத்தறிவு வீதமும் இவ்விடயத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இவ்வாறு பல காரணிகளால் முனைப்புப் பெற்றுள்ள இலக்கிய விமரிசன நோக்கு எத்தகைய பிரத்தியட்சத் தொழிற்பாட்டினைக் கொண்டுள்ளது எனும்பொழுது, இரு அமிசங்களை முக்கியப்படுத்திக் கூறலாமென நினைக்கின்றேன்.

(அ) இலக்கியச் செல்நெறியை நிர்ணயிப்பதிற் காணப்படும் பெருங் கவனம்.

(ஆ) தமிழகத்து இலக்கியத்தின் இயைபை நிர்ணயிப்பதிலுள்ள கவனம்.

இலக்கியம் ''தொடர்புச்சாதனமாக'' விளங்கும் நிலைமையை உணர்ந்தோர் நிலையில் இலக்கிய விமரிசனம் முக்கியம் பெறுவது இயல்பே. ஆனல் அது ''வெகுசன''த் தொடர்புச் சாதனமாக மாறி சந்தை விதிகளுக்கு ஆட்படும் பொழுது, இலக்கிய விமரிசனம்தர நிர்ணய சக்தியாக நின்று நிலைக்குமா என்பதே பிரச்சினை. போட்டிப் பொருளாதார அமைப்பில் இலக்கிய விமரிசனத்துக்கும் இலக்கியத் தர நிர்ணயத்துக்கும் அதிக சம்பந்தமில்லை. வேண்டுமானல் தரமற்ற இலக்கியங்கள் ஏன் தோன்றுகின்றன என்ற ஆய்வினை நடத்தலாம். அந்த ஆய்வும் வேண்டியதுதான்.

கவர்ச்சி மிக்க
புகைப்படங்களுக்கு
இன்றே நாடுங்கள்

லீலா ஸ்ருடியோ
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

வைரவிழாச் சிறப்புற
வாழ்த்துகின்றோம்.

செல்வாஸ்
33, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

விவசாய கிருமிநாசினிகள்
மரவகைகள்
நவீன களைகொல்லிகள்
இவற்றைப் பெற்றுக்கொள்ளச்
சிறந்த இடம்

வின்டோ
அக்ரோ கெமிக்கல்ஸ்
வியாபாரிகள்
இல. 6, மொடல் மாக்கற்
மேல்மாடி
யாழ்ப்பாணம்

*With the best*
*Compliments*
*from*

City Bakery
220, Hospital Road,
JAFFNA.

## பரிதியொடு நிறைமதி பாருள்ளளவும் வாழ்க!

